Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 20 .00

தினப்பதிப்பு


# தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 05 | திருவள்ளுவர் ஆண்டு 2046 ஆனி 09 புதன்கிழமை (24.06.2015) | பக்கங்கள் 20 | ஓசை – 267

# அரசுடன் உறவாடுபவர்கள் அரச அதிபரை இடமாற்ற தயங்குவது ஏன்?



(யாழ்ப்பாணம்)

அரசின் நிர்வாகக் குழுவின் அங்கத்தவராக இருக்கும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஒவ்வொரு வாரமும் ஜனாதிபதியை சந்திக்கிறார்.

அவ்வாறு சந்திக்கும் சம்பந்தனால் அரச அதிபர் விடயத்தில் தீர்வு காண முடியாத நிலையில் எப்படி தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காணமுடியும் என வடமாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா நேற்று மாகாண சபையில் கேள்வி எழுப்பினார்.

அரச அதிபர் இடமாற்றம் தொடர்பில் உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசின் நிர்வாகக் குழுவில் அங்கம் வகிக்கும் ஒரு தமிழ் பிரதிநிதி கூட எதுவும் பேசுவதில்லை என அமைச்சர் ராஜித சேனாரட்ன அண்மையில் ஊடகத்திற்கு தெரிவித்திருந்தார் அவ்வாறு கதைக்காதவர்கள் அங்கு எதற்கு செல்ல வேண்டும்.

அண்மையில் சுமந்திரன் யாழ்ப்பாணத்திற்கு வந்து ஒரு கலந்துரையாடலில் எங்களுக்கும் அரசுக்கும் இருதய பூர்வமான இணக்கம் இருக்கின்றது என தெளிவாகத் தெரிவித்துள்ளார். இருதய பூர்வமான இணக்கம் கொண்ட இவர்கள் இதையே செய்ய முடியாது விட்டால் எப்படி மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காண்பது? கௌரவ உறுப்பினர்களுக்கு ஏற்பட்ட அவமானத்திற்கே தீர்வை காண முடியாதவர்கள் இருதய பூர்வமாக இணைந்திருந்து அரசியல் தீர்வு எப்படி காணப் போகின்றார்கள். இதன்மூலம் அரசியல் தீர்வு காண்பது என்பது நடைமுறைச் சாத்தியமா? அற்ப விடயத்தை கூட 3 மாதத்தில் தீர்க்க முடியவில்லை.

சந்திரிகா காலத்தில் எடுக்கப்படவிருந்த குடியியல் புள்ளிதரவு பதிவுகளை பதிய விடாது நாம் அப்போது ஒரே இரவில் தடுத்து நிறுத்தினோம் அதனால் மக்களின் உலர் உணவு நிவாரணம் பல்கலைக் கழக அனுமதி என்பன பாதிக் கப்படும் என்பதற்காக பேசி அதை தடுத்தோம்.

உண்மையான ஆர்வம் இருக்குமாயின் இதைச் செய்திருக்கலாம். அரச அதிபரை அரசுடன் பேசி மாற்றம் செய்ய முடியாது என்றால் என்னத்திற்கு இணக்கம். நல்லாட்சி அரசு வந்துவிட்டது. நாங்கள் எல்லாம் சாதிக்கப் போகிறோம் என்று சொல்லி விட்டு இதையே சாதிக்காவிட்டால் என்ன பிரயோசனம்.

இப்பிரச்சினைக்கு அவைத்

19 ஆம் பக்கம் பார்க்க

## வவுனியா அரச அதிபர் விவகாரம்

# வடமாகாண சபையில் உறுப்பினர்கள் போராட்டம்

## அமர்வும் ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

மாகாணசபை உறுப்பினர்களின் சிறப்புரிமையை மீறிய அவமதித்த வவுனியா மாவட்ட அரச அதிபரை இடமாற்றம் செய்யக்கோரி 3 மாதம் கடந்த நிலையில் மாகாண சபையோ, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைமைகளோ எந்த நடவடிக்கையும் எடுக்காததைக் கண்டித்து வடமாகாண சபையின் அமர்வை நடாத்துவதற்கு இடமளிக்க முடியாது எனத் தெரிவித்து சபா மண்டபவாயிலின் குறுக்காக அமர்ந்து வடமாகாண சபை உறுப்பினர்கள் நேற்று போராட்டம் நடத்தியதையடுத்து மாகாண சபையின் அமர்வு ஒத்திவைக்கப் பட்டது.

காலை 9.30 மணிக்கு அமர்வு ஆரம்பமாவதற்கு முன்னரே உறுப்பினர்கள் அவையின் வாயிலில் வவுனியா அரச அதிபரை உடன் இடமாற்றம் செய்ய வேண்டும் எனக் கோரி அமர்ந்திருந்தனர். 3 மாதங்களுக்கு முன்னரே இது விடயத்தில் தீர்மானம் கொண்டுவரப்பட்டதுடன் கடந்த அமர்வின் போது கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றையும் மேற்கொண்ட நிலையில் முதலமைச்

19 ஆம் பக்கம் பார்க்க

# வடக்கில் தளர்கிறது பாதுகாப்பு



(கொழும்பு)

வடக்கில் படை முகாம்களை அரசுகுறைக்கத் தொடங்கியுள்ளதால் வடக்கில் பாதுகாப்பு தளர்வடையத்தொடங்கியுள்ளது என்று முன்னாள் பாதுகாப்பு செயலர் கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.


விடுதலைப் புலிகளின் அனைத்துலக ஆதரவாளர்களும், அதன் வலையமைப்பும் இன்னமும் உயிர்ப்புடன் இருப்பதாக, அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தீவிரவாத முறியடிப்பு பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையை ஆதாரம் காட்டி, அவர் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

போர் முடிவுக்கு வந்த பின்னர், தாம் இதனைப் பல சந்தர்ப்பங்களில் எடுத்துக் கூறியிருந்ததாகவும், அவர் குறிப்பிட்டுள்ளார்.

முன்னைய அரசாங்கத்தின் விழிப்பு நிலையால், விடுதலைப் புலிகள் தலையெடுக்கும்

19 ஆம் பக்கம் பார்க்க

# புலம்பெயர் விழாவுக்கு ஐ.நா.நிதி வழங்கவில்லை



(கொழும்பு)

இலங்கையின் புலம்பெயர் விழாவிற்கு நிதி உதவி வழங்கப்படவில்லை என ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டின் இறுதியில் இலங்கை வெளிவிவகார அமைச்சினால் புலம்பெயர் மக்களுக்காக நடத்தப்பட உள்ள விழாவிற்கு, ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை நிதி உதவி வழங்குவதாக தகவல்கள் வெளியாகியிருந்தன.

எனினும், இந்த தகவல்களில் எவ்வித உண்மையும் கிடையாது என ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் ரொபர்ட் கொல்விலி தெரிவித்துள்ளார். இந்தத் தகவல் எவ்வித அடிப்படையும் அற்ற பெய்யான தகவல் எனக் குறிப்பிட்டுள்ளார். ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின்

19 ஆம் பக்கம் பார்க்க

# பத்து இலட்சம் பேருக்கு தொழில் வாய்ப்பு

## ரணில் அறிவிப்பு

கடந்த 1977இல் இந்நாட்டில் ஏற படுத்தப்பட்ட புரட்சியை விடவும் பத்து மடங்கு வீரியம்மிக்கதோர் மாபெரும் புரட்சியை இவ்வருட அந்திமப் பகுதியில் இந்நாட்டில் ஏற்படுத்தப் போவதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

தேசிய வீடமைப்பு தினத்தை முன்னிட்டு திஸ்ஸமகாராமையில் நேற்று இடம்பெற்ற வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்

19 ஆம் பக்கம் பார்க்க

# நாடாளுமன்றம் கலைப்பு அறிவிப்பு இன்று?

(கொழும்பு)

நாடாளுமன்றத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இன்று நள்ளிரவு கலைக்கலாம் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

புதிதாக உருவாக்கப்பட்ட தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதிநிதிகளுடனான சந்திப்பில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

இந்த சந்திப்பு நேற்று செவ்வாய்க்கிழமை கொழும்பில் நடைபெற்றது.

தற்போதைய அரசாங்கத்தின் பதவிக் காலம் கடந்த ஏப்ரல் மாதத்துடன் நிறைவடைந்ததாக சுட்டிக்காட்டிய பிரதமர் அன்று

19 ஆம் பக்கம் பார்க்க

# வித்தியா கொலைவழக்கு பொலிஸார் விட்ட தவறு என்ன?

## விசேட அறிக்கை பொலிஸ்மா அதிபரிடம்

(கொழும்பு)

புங்குடுதீவில் மாணவி வித்தியா சிவலோகநாதன் கூட்டு வன்புணர்வுக்குட்படுத் தப்பட்டு படுகொலை செய்யப்பட்டதை அடுத்து, அங்கு பதற்றநிலை ஏற்பட்டதற்கான காரணங்களை ஆராய்ந்த சிறப்பு பொலிஸ் குழுவின் விசாரணை அறிக்கை பொலிஸ் மா அதிபரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

வித்தியா படுகொலையை அடுத்து, அங்குள்ள மக்களால் பிடிக்கப்பட்ட சந்தேக நபர் ஒருவர், பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். மூத்த பொலிஸ் அதிகாரி ஒருவரின் உத்தரவின்

19 ஆம் பக்கம் பார்க்க

# அபிவிருத்திகள் அனைத்தும் தடை



பக்கம்-06

# பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு ஆசிரியர் பற்றாக்குறை பெரும் தடை

## நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார்



தற்போது பெற்றோர்கள் தங்கள பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் ஆர்வம் செலுத்துகின்ற நல்ல சூழல் நிலவுகின்றபோதும் பாடசாலைகளில் தொடர்ச்சியாக காணப்படுகின்ற ஆசிரியர் பற்றாக் குறை அதற்குத் தடையாக இருக்கிறது என நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்ற பிரதிக் குழுக்களின் பிரதித் தவிசாளருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பூநகரி வலைப்பாடு பாடசாலைககுப் பல்லூடக தெறிகருவி, வலைப்பாடு வானவில். இசை குழுவிற்கு இசைக் கருவிகள், விளையாட்டுக்கழக மைதானம் புனரமைப்பு என்பவற்றுக்கு தனது விசேட நிதி ஒதுக்கீடு மூலம் எட்டு இலட்சம் ரூபாவை வழங்கிவைத்து கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், வலைப்பாடு எமக்கு ஒரு புதிய கிராமம் அல்ல. எனக்கும் வலைப்பாட்டுக் கிராமத்திறகுமான உறவு என்பது கடந்த 35 வருடங்களாக காணப்படுகிறது.

எச்சந்தர்ப்பதிலும் என்னையும் வலைப்பாட்டு கிராமத்தையும் எந்த சக்தியாலும் பிரிக்கமுடியாது என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. கடந்த காலங்கள் போன்று எதிர்காலத்திலும் வலைப்பாட்டுக் கிராமத்தின் வளர்ச்சியில் எனது பங்களிப்பு காணப்படும் என்பதனை வலியுறுத்தி கூறுகின்றேன் எனத் •தெரிவித்ததோடு,


வலைப்பாட்டுக் கிராமத்தில் ஏனைய பிரதேசங்களைவிட ஒரு சிறப்பம்சம் இருக்கிறது. அதுதான் இறுக்கமான, ஒழுக்கமான சமூக கட்டுப்பாடும், ஒற்றுமையும்.

இந்த மக்களிடையே நல்ல சமூக கட்டமைப்பை உருவாக்கியிருக்கிறது. இது எந்தவிதத்திலும் பாதிக்கப்படக்கூடாது. எங்களுக்குள் இருக்கும் ஒற்றுமை சிதைக்கப்பட்டால், எங்களுக்குள் சமூக சீர்கேடுகள் தலைதூக்கினால் அது வலைப்பாட்டு கிராமத்தின் தனித்துவத்தை சீரழித்துவிடும், வலைப்பாடு கிராமத்தின் சிறப்பை இல்லாமல்செய்துவிடும. எனவே வலைப்பாட்டுக் கிராமத்தின் தனித்துவம் தொடர்ந்தும் பாதுகாக்கப்படவேண்டும் அதன் வளர்ந்துவரும் இளம் சமூகத்தையும் பண்பாடுள்ள ஒழுக்கமான சமூகமாக மாற்றியமைக்கும் எனத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர்,

எப்பொழுதும் நாம் பூநகரி தெற்கு பிரதேச பாடசாலைகள் எதிர்கொள்ளும் ஆசிரியர் பற்றாக குறைப் பிரச்சினையை பல இடங்களிலும் வெளிப்படுத்திவருகின்றோம். வட மாகாணத்தில் கல்வித்துறையின் அதிகாரத்திற்கு இம் மக்களால் அனுப்பப்பட்டவர்கள ,இதுபோன்ற கிராமப்புற பாடசாலைகளின் கல்வி வளர்ச்சி தொடர்பில் அக்கறையின்றி இருப்பது கவலைக்குரியதாக இருக்கிறது. கடந்தகாலத்தில் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் அக்கறை செலுத்தமுடியாத சூழல் காணப்பட்டது. ஆனால் தற்போது அந்த நிலைமைமாறி பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் பெற்றோர்கள் அதிக கவனம் செலுத்துகின்ற சூழல் ஏற்பட்டிருக்கின்றபோதும் தொடர்ச்சியாக நிலவுகின்ற ஆசிரியர் பற்றாக்குறை அந்த ஆர்வத்தை இல்லாதொழிக்க செய்கிறது. எனவும் தெரிவித்தார்.

வலைப்பாடு பாடசாலை அதிபர் மரியதாசன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வடக்கு மாகாணசபை உறுப்பினர் வை.தவநாதன், பளை பிரதேச சபை உறுப்பினர் அன்ரன் அன்பழகன், கடற்றொழில் மற்றும் கிராம அபிவிருத்தி சங்கத்தின் தலைவர் இமானுவேல் (தாசன்) வானவில் இசைக்குழுவின் தலைவர் தயா, மாதர் சங்கத் தலைவி, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் பூநகரி அமைப்பாளர் றோஜஸ், பிரதேச அமைப்பாளர் றொபின்சன், பொது மக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# கல்விக் கண்காட்சி



(யாழ்ப்பாணம்)

புன்னாலைக்கட்டுவன் சித்தி விநாயகர் வித்தியாலயத்தின் மாபெரும் கல்விக் கண்காட்சி நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை 09 மணிமுதல் பிற்பகல் 4.30 மணிவரை பாடசாலையின் அதிபர் த.லோகராஜா தலைமையில் இடம்பெற்றது.

'சுயமாகச் சிந்திப்போம் தன்னிறைவு காண்போம்' எனும் தொனிப்பொருளில் இடம்பெற்ற இந்தக் கண்காட்சியில் மாணவர்களின் ஆக்கத்திறனை வெளிப்படுத்தும் பல்வேறு படைப்புக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டிருந்தன. குறிப்பாக ஆரம்பக் கல்விக்குரிய கற்பித்தல் சாதனங்கள், மாணவர்களின் செயற்பாட்டு ரீதியான பல்வேறு ஆக்கங்கள் என்பன காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

விசேடமாக சுயதொழில் முயற்சிகளை ஊக்குவிக்கும் வகையிலான படைப்புக்கள், சேதனப் பசளையூடாக மேற்கொள்ளப்படும் இயற்கை விவசாய உற்பத்தி, உயிர்வாயு உற்பத்தி, 10 அடி உயரத்தில் பாடசாலை முன்றலில் உருவாக்கப்பட்ட டைனோசர் உருவம் என்பன காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

# வலிகாமம் கல்வி வலய சைவசமய அறிவுப் போட்டி முடிவுகள்

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை மாணவர்களிடையே நடாத்தப்பட்ட சைவசமய அறிவுப் போட்டிகளின் முடிவுகள் வலயக் கல்விப் பணிப்பாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளன. போட்டி முடிவுகள் பின்வருமாறு,

பிரிவு மூன்றிற்கான புராண படனப் போட்டியில் (தரம் 10,11) முதலாம் இடத்தினை பண்ணாகம் மெய்கண்டான் வித்தியாலய மாணவிகளான தி.கஜனி, ஞா. விதுஷா பெற்றுளதோடு 2 ஆம் இடத்தினை அராலி சரஸ்வதி மகாவித்தியாலய மாணவிகள் செ.சுதர்சினி, அ.அஜிதா பெற்றுள்ளனர். 3 ஆம் இடத்தினை இராமநாதன் கல்லூரி மாணவிகளான கா.கார்த்திகாவும், இ.ரூபலக்ஸ்மனும், 3 ஆம் இடத்தினை இணுவில் மத்திய கல்லூரி மாணவிகள் சி.அபர்ணா, ச.விதுஷா ஆகியோர் பெற்றுள்ளனர்.

பிரிவு இரண்டிற்கான கதாப் பிரசங்கப் போட்டியில் (தரம் 12, 13) முதலாம் இடத்தினை யூனியன் கல்லூரி மாணவன் ச.அனுஷாந், இரண்டாம் இடத்தினை இராமநாதன் கல்லூரி மாணவி துஷ்யந்தியும், 3 ஆம் இடத்தினை மல்லாகம் மகா வித்தியாலய மாணவி மே.பிருந்துசாவும், பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலய மாணவன் யோ.விதுர்ஷனும் பெற்றுள்ளனர்.

மேற்படி போட்டிகளில் முதலாம் இடங்களைப் பெற்றவர்கள் மாகாணமட்டப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளனர். இப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கும், பங்குபற்றிய மாணவர்களுக்கும் நற்சான்றிதழ்கள் வழங்கப் படவுள்ளன. மாகாணமட்டப் போட்டித் திகதியும், சான்றிதழ் வழங்கும் நிகழ்வுக்கான திகதியும் பின்னர் அறிவிக்கப்படும். (06)

# கடற்படைக்கு போர்க்கப்பல்

(கொழும்பு)

கடற்படைக்கு பாரிய போர்க் கப்பல் ஒன்றை சீனாவிடமிருந்து வாங்குவது குறித்து, சீனப் பாதுகாப்பு அதிகாரிகளுடன் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ஜெயந்த பெரேரா பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

இலங்கை கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ஜெயந்த பெரேரா அண்மையில் சீனாவுக்கு மேற்கொண்ட ஐந்து நாள் அதிகாரபூர்வ பயணத்தின்போதே, சீனாவிடமிருந்து பாரிய போர்க் கப்பல் ஒன்றை கொள்வனவு செய்வது குறித்து, சீன அதிகாரிகளுடன் பேச்சு நடத்தப்பட்டுள்ளது.

இலங்கை கடற்படை இந்தத் தகவலை உறுதிப்படுத்தியுள்ளது.

# வேலையற்றோர் கணக்கெடுப்பு

வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேசங்களில் வதியும் தொழில் வாய்ப்பற்றவர்களின் விபரங்களினை•சேகரிக்கும் திட்டமொன்றினை கரவெட்டிப் பிரதேச செயலகம் மேற்கொண்டுள்ளது.

இவ்வாறு தொழிலொன்றைப் பெற்றுப்கொள்ள விரும்புவோர் நாளை கரவெட்டிப் பிரதேச செயலகத்ததுக்கு சமுகம் தருமாறு பிரதேச செயலாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்த வேலைவாய்ப்பற்றோர் கணக்கெடுப்பில் உரிய தொழில் களுக்கு தகுதியுள்ளவர்களைக் கண்டறிந்து பொருத்தமான வேலையை ஏற்படுத்திக்கொடுப்பதே தமது நோக்கமென பிரதேச செயலர் ச.சிவஶ்ரீ விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அரச அதிபரின் பணிப்புரைக்கமைய காலை 9 மணிமுதல் மாலை 2 மணிவரை இடம்பெறும் இக் கணக்கெடுப்பில் தொழில் ஒன்றை எதிர்பார்த்திருப்போர் தமது விபரங்களை• சமர்ப்பித்துப் பயன்பெறுமாறு அவர் தனது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார். (18)

# வீதியை புனரமைக்கக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வீதி புனரமைப்புப் பணிகள் இடைநடுவில் கைவிடப்பட்டிருப்பதாக கோப்பாய் தெற்கு அழகிய தூண் தோட்டப்பகுதி மக்கள், வலி. கிழக்கு பிரதேசசபைத் தவிசாளரின் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளனர்.

300 மீற்றர் நீளமான இவ் வீதியானது ஒரு கிராம சேவகர் பிரிவிற்கு 1 மில்லியன் ரூபா திட்டத்தின் கீழ் அடங்குகிறது.

எனினும் 275 மீற்றர் வரையே செப்பனிப்பட்ட நிலையில் மிகுதி வேலைகள் இடைநடுவில் கைவிடப்பட்டுள்ளன.

இவ் வீதியை முழுமையாக புனரமைத்துத் தருமாறு விடுத்த வேண்டுகோளையடுத்து இங்கு உள்ள குடும்பங்களிடம் தலா 5 ஆயிரம் ரூபா வீதம் மொத்தம் 74 ஆயிரம் ரூபா பணம் வசூலிக் கப்பட்டு மிகுதி வேலைகளுக்கான கற்கள் கொண்டுவந்து இறக்கப்பட்டுள்ளன.

கற்கள் இறக்கப்பட்டு இரு வாரங்களாகியும் வீதியைத் திருத்துவதற்கான எந்த நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லையென இவ் வீதியைப் பயன்படுத்தும் மக்கள் சுட்டிக்காட்டி உள்ளனர்.

வீதியின் மிகுதி வேலைக்கான பணத்தினை வழங்கியுள்ள போதும், திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்படாதிருப்பதையிட்டு அப்பகுதி மக்கள் தமது அதிருப்தியை வெளியிட்டுள்ளனர்.

# சுனாமி ஒத்திகை நிகழ்வு

(ஊர்காவற்துறை)

ஊர்காவற்துறை, எழுவைதீவில் இன்று பிற்பகல் 3 மணியளவில் தேசிய சுனாமி ஒத்திகை நிகழ்வொன்று இடம்பெறவுள்ளது.

அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் ஏற்பாட்டில் இடம்பெறும் இந்த ஒத்திகை நிகழ்வில் முன்னெச்சரிக்கை, விழிப்புணர்வு மற்றும் ஒத்திகை என்பன இடம்பெறவுள்ளன.

இதுவொரு ஒத்திகை செயற்பாடு என்பதால் எவரும் பீதியடையத் தேவையில்லை எனவும் பொதுமக்களை அமைதியாக இருக்கு மாறும் யாழ். அரச அதிபர் நா.வேதநாயகன் விடுத்துள்ள அறிக்கை யில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# பால் கொள்வனவு விலை அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

பண்ணையாளர்களிடமிருந்து கொள்வனவு செய்யும் பாலின் விலையினை அடுத்த மாதம் முதல் இரண்டு ரூபாவாக அதிகரிக்கவுள்ளதாக யாழ்கோ நிறுவனம் அறிவித்துள்ளது.

பாலுற்பத்தியை மேம்படுத்துவதற்கான கூட்டுறவுத் திணைக் களத்தின் 100 நாள் வேலைத் திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யும் பாலின் விலையை உயர்த்தியுள்ளதாக நிறுவனத்தின் உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார்.

இந்த அதிகரிப்பின் மூலம் எமது நிறுவனத்திற்கு இரண்டரை இலட்சம் ரூபாவரை இழப்பு ஏற்படலாமென கருதுகிறோம். எனினும் இப்பணத்தினை பாலுற்பத்தியாளர்களிடையே பகிர்வதில் தாம் திருப்தியடைவதாகவும், பண்ணையாளர்களைப் பாதுகாத்து பாலுற்பத்தியை மேலும் திறம்பட முன்னெடுப்பதே தமது இலக்கு என அவர் மேலும் குறிப்பிட்டார். (160)


வவுனியா வீரபுரம் மணிவாசகர் மகாவித்தியாலயத்தில் தொழில்நுட்ப ஆய்வுகூடத் திறப்பு விழா வித்தியாலயத்தின் அதிபர் தே.ஶ்ரீதரன் தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந் நிகழ்வில் வவுனியா தெற்கு வலயக் கல்வி பணிப்பாளர் திருமதி அன்ரன் சோமராஜா, செட்டிக்குளம் கோட்டக்கல்விப் பணிப்பாளர் யேசுதாசன், பிரதிக் கல்விப் பணிப்பாளர் லதாங்கி, பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், கல்விச் சமூகத்தினர் எனப்பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். (160)

# மாணவர்கள் தாக்கப்படுவதால் பெற்றோர் விசனம்

(வரணி)

யாழ்.மாவட்ட பாடசாலை ஒன்றில் மாணவர்கள் மீது ஆசிரியர்களின் காட்டுமிராண்டித்தனமான தாக்குதல்கள் அதிகரித்து செல்வதாக பெற்றோர்கள் கடும் விசனம் தெரிவிக்கின்றனர்.

இத்தகைய தாக்குதல் சம்பவம் ஒன்று கடந்த 15 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெற்றுள்ளது. இத் தாக்குதலுக்கு உள்ளான மாணவன் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றான்.

இச்சம்பவம் தொடர்பாக பொலிஸ் தரப்பு விசாரணைகளை நடாத்தி வருவதுடன் இதே பாடசாலையில் கடந்த 16.11.2014 ஆம் ஆண்டு தரம் 9 இல் கல்வி கற்ற மாணவி ஒருவர் தவறாக கரும் பலகையில் விடை எழுதிய காரணத்தால் தாக்குதலுக்கு உட்பட்டு மயக்கமடைந்த நிலையில் அம்புலன்ஸ் மூலம் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

ஆசிரியர்களின் இத்தகைய மிருக்த்தனமான தாக்குதலால் அப்பகுதி பெற்றோர்கள் விசனமடைந்துள்ளனர். (150)

# திருமறைக் கலாமன்றம் நடாத்தும் தமிழ் விழா

திருமறைக் கலாமன்றத்தால் நடாத்தப்படும் தமிழ் விழா எதிர்வரும் 26 ஆம் திகதி முதல் 28 ஆம் திகதி வரை மூன்று நாட்களுக்கு (வெள்ளி, சனி, ஞாயிறு) யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது. பகல் நிகழ்வுகளாக ஆய்வரங்குகளும் மாலை நிகழ்வுகளாக கலை நிகழ்வு களுமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இத் தமிழ்விழாவில் மூன்று நாட்களும் காலை 8.45 மணி தொடக்கம் பி.ப 12.30 மணி வரையும் இதைத் தொடர்ந்து பி.ப.1.45 மணி தொடக்கம் மாலை 4.30 மணி வரையும் ஆய்வரங்குகள் இல. 286, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலா மன்றத்தின் கலைத்தூது கலையகத்திலும் கலை நிகழ்ச்சிகள் மாலை 6 மணி முதல் இல. 238, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற அரங்கிலும் நடைபெறவுள்ளன.

நாவல்,பண்பாடு,ஊடகம்,இணையம்,சிறுகதை,விமர்சனம்,மலையக இலக்கியம்,கவிதை,நாடகம் உட்பட 24 தலைப்புக்களில் ஆறு அமர்வுகளாக ஆய்வரங்குகள் நடைபெறவுள்ளன.

## மூன்றாம் நாள் (ஞாயிற்றுக்கிழமை) நிகழ்வுகள்

**முதலாவது அமர்வு** - கவிதை
**தலைமை** - கவிஞர் சோ.பத்மநாதன்
**ஆய்வுரைகள்** - திரு.சிராஜ்மஷ்ஹீர் (ஈழத்து தமிழ் கவிதைகளின் முஸ்லிம்களின் இருப்பும் எதிர்ப்பரசியலும்), திரு.சி.ரமேஸ் (சமூகப் பண்பாட்டு அசைவியக்கமும், ஈழத்துப் பெண்களின் கவிதைகளும்), திரு.சித்தாந்தன் (ஈழத்து நவீன கவிதை - படைப்பு நிலையும், வெளிப்பாடும்), திரு.வேல்நந்தகுமார் (ஈழத்தில் தமிழில் நிகழ்ந்துள்ள மொழிபெயர்ப்புக் கவிதைகளின் அரசியல்).

**இரண்டாவது அமர்வு** - நாடகம்
**தலைமை** - குழந்தை ம.சண்முகலிங்கம்
**ஆய்வுரை** - கலாநிதி கந்தையா ஶ்ரீகணேசன் (மரவுவழி நாடகங்களின் இருப்பும் இயங்கு நிலையும்), திரு. பா.இரகுவரன் (திருமறைக் கலாமன்றின் அரங்கச் செயற்பாடுகள் - ஓர் பார்வை), கலாநிதி சி.ஜெயசங்கர் (யுத்தத்துக்குப் பின்னான அரங்கப் போக்குகள்), திரு.செ.செல்வக்குமார் (கற்கை நெறியாக அரங்கு எதிர்கொள்ளும் சவால்கள்) என்பன இடம்பெறும்.

**மாலையில் இடம்பெறும் கலைநிகழ்வுகள்** - மாலை நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.இந்திய துணைத்தூதுவர் ஶ்ரீமான் ஆ.நடராஜன் மற்றும் சிறப்புரையினை கலாநிதி தமிழ்மணி அகளங்கன் வழங்குவார். திருமறைக் கலாமன்ற இளங்கலைஞர்கள் வழங்கும் ஒயிலாட்டமும் - கலைவாணர் வில்லிசை குழுவினர் வழங்கும் 'சிலம்பு சிரித்தது' எனும் வில்லிசையும், திருமறைக் கலாமன்ற கலைஞர்கள் வழங்கும் "கம்பன் மகள்" தென் மோடி நாட்டுக் கூத்தும் இடம்பெறும்.

இவ் மூன்றுநாள் தமிழ் விழா நிகழ்வுகளிலும் கலையார்வமுள்ளவர்களை கலந்து கொள்ளுமாறு திருமறைக் கலாமன்றம் அழைப்பு விடுத்துள்ளது.

# கழிவு நீரை வாய்க்காலில் இணைக்க மறுக்கும் வலிதெற்கு பிரதேச சபையினர்

## உணவக உரிமையாளர்கள் விசனம்

(யாழ்ப்பாணம்)

இரணைமடு நன்னீரை கடலுக்குள் திறந்து விடும் கூட்டமைப்பினர் உணவக கழிவு நீரை சாக்கடை வாய்க்காலில் இணைத்து விடுவதற்கு வலிகாமம் தெற்கு பிரதேசசபையினர் தடுத்து வருவதாக சுன்னாகம் நகர உணவக உரிமையாளர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

வலிகாமம் தெற்கு பிரதேசசபை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலுள்ள தமிழரசுக் கட்சியின் அதிகாரத்தின் கீழ் உள்ளது. இங்குள்ள உணவகங்களில் கைகழுவும் கழிவு நீரை சாக்கடை வாய்க்காலில் சேர்த்து விடுவதற்கு பிரதேசசபையினர் தடுத்துள்ளதாக உணவக உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

உணவகங்களுக்கு விற்பனை உரிமங்களுக்கான வருடாந்த வரிகளை தாம் வருடா வருடம் கிரமமாகச் செலுத்தி உரிமம் பெற்றே உணவகங்களை நடாத்தி வருவதாகவும் இதற்கு மேலாக பொது சுகாதாரப் பரிசோதகர்களின் கட்டளைப்படியே சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி வருவதாகவும் அவர்கள் தெரிவித்தனர். இருந்த போதும் உணவகங்களுக்கு வரும் பொதுமக்கள் உணவுகளை உண்ணும் முன்னர் கைகழுவுவதற்கு வசதிகள் செய்யப்பட்டிருந்தும் கைகழுவும் நீரை வலிகாமம் தெற்கு பிரதேசசபையின் சுன்னாகம் உப அலுவலகம் அமைந்துள்ள சுன்னாகம் சந்தையைச் சுற்றி அமைக்கப்பட்டுள்ள சாக்கடையுடன் சேர்த்து விடுவதற்கு பிரதேச சபையில் ஆட்சியிலுள்ள அதிகார வர்க்கத்தினர் தடுத்துள்ளதாகவும் அவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். இதனால் தாம் கழிவு நீரை பாத்திரங்கள் வைத்து எடுத்து பின்னர் அதனை எடுத்துச் சென்று வெளியில் ஊற்றுவதாகவும் இதனால் தாம் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருவதாகவும் ஆதங்கம் தெரிவித்தனர்.



உள்ளூராட்சி அதிகார சபை ஊடாக மக்களுக்கான வசதிகளை அமைத்துக் கொடுப்போம் என ஆட்சிப் பீடம் ஏறியவர்கள் இப்போது தமக்கு அடிப்படையான விடயங்களை செய்து கொடுக்கவில்லை எனவும் தெரிவித்தனர்.

இதேவேளை சன நெருக்கடி நிறைந்த சுன்னாகம் சந்தையைச் சுற்றியுள்ள சாக்கடை வாய்க்கால் திறந்த நிலையில் காணப்படுகின்றது.

இதனைச் செப்பனிடுவதற்கு கொண்டுவரப்பட்ட கொங்றீற் மூடிகள் ஆங்காங்கு அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. வாய்க்கால்கள் வாயைப் பிளந்து பாதசாரிகளைப் பலியெடுக்கக் காத்து நிற்கின்றன. சமீபத்தில் பேருந்து ஒன்றில் இருந்து இறங்கிய கர்ப்பிணித் தாயொருவர் வாய்க்காலில் வீழ்ந்து ஆபத்தான நிலையில் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்ட சம்பவம் ஒன்றும் இடம் பெற்றிருந்தது.

சுன்னாகம் சந்தை மொத்த வியாபாரம், சில்லறை வியாபாரம் என பிரபலமான ஒரு சந்தைப்பகுதி. இங்கு அதிகாலை முதலே வியாபாரங்கள் பரபரப்பாக நடைபெறுவது வழமை. மூட்டை தூக்கும் வகுப்புத் தொழிலாளர்கள் சாக்கடையை மூடி பாதுகாப்பான நடைபாதை இல்லாததால் பெரும் சிரமங்களின் மத்தியிலேயே தமது பாரம் தூக்கும் தொழிலை மேற்கொண்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# குருபூசை தினமும், புராண வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் குருபூசை தினம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு தெல்லிப்பளை துர்க்கை அம்மன் கோவிலில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் குருபூசை விழாவில் ஈழத்தில் வாழும் வயதில் மூத்த சிவாச்சாரியார்கள் இருவர் கௌரவம் பெற இருக்கின்றனர்.

இணுவில் காயத்திரி பீடத்தினுடைய முதல்வரும் தர்மசாஸ்தா குருகுல அதிபருமாகிய சிவஶ்ரீ தா.மகாதேவக்குருக்கள் சரசாலை நுணுவில் சிதம்பர விநாயகர் ஆலய மூத்த குருக்கள் சிவஶ்ரீ சு.நடராஜக் குருக்கள் ஆகியோரே விருது பெறும் சிவாச்சாரியார்கள் ஆவர்.

செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ள குருபூசை வைபவத்தில் இசை ஆசிரியர் யசோதா ஶ்ரீகுமரனின் பண்ணிசை அரங்கம் துர்க்காதேவி தேவஸ்தானப் பிரதம குரு சிவஶ்ரீ வா.அகிலேஸ்வரக் குருக்கள் சுந்தர ஆஞ்சநேயர் ஆலயப் பிரதம குரு சிவஶ்ரீ சுந்தரேஸ்வரக் குருக்கள் நல்லை ஆதீனமுதல்வர் ஶ்ரீலஶ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் ஆகியோரது ஆசியுரைகளும் இடம்பெறவுள்ளன.

மூத்த சிவாச்சாரியார்களது கௌரவிப்பைத் தொடர்ந்து துர்க்கை அம்மன் தேவஸ்தானத்தால் முன்னெடுக்கப்பட்டு வரும் பன்னிரு திருமுறை வெளியீட்டின் ஓரங்கமாகப் பன்னிரண்டாம் திருமுறையாக விளங்கும் திருத்தொண்டர் புராணத்தின் முதற்பாகம் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது. இதன் வெளியீட்டுரையை அருள்மொழியரசி வித்துவான் வசந்தா வைத்தியநாதன் வழங்கவுள்ளார்.

# விவசாய சம்மேளனத்தின் புதிய நிர்வாகம் தெரிவு

அச்சுவேலி வடக்கு விவசாய சம்மேளனத்தின் வருடாந்த பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் எதிர்வரும் 27 ஆம் திகதி சனிக்கிழமை அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெறும்.

சம்மேளனத்தின் உப தலைவர் த.ரவீன்ராஜ் தலைமையில் இடம்பெறும் இப் பொதுக் கூட்டத்தில் அப்பகுதி கமநல சேவை உத்தியோகத்தர் மற்றும் கிராமசேவையாளர் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். அச்சுவேலி வடக்கின் அனைத்து விவசாயிகளையும் இதில் தவறாது கலந்து கொள்ளுமாறு சம்மேளனம் விடுத்த அறிவிப்பில் தெரிவிக் கப்பட்டுள்ளது. (168)

கனவுகளும், கற்பனைகளும் தான்
வாழ்க்கை எனும் வாகனத்தை நகர்த்திக்கொண்டிருக்கிறது.
-புரட்சிக் கவிராயர்-

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## பொய்யில் எழுப்பிய அரசியல்!

அரசாங்கத்திடம் இணக்கமாகப் பேசி அபிவிருத்திக்கெனச் சொல்லப்பட்ட பெருந்தொகைப் பணத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்பிக்கள் இரகசியமாக வாங்கியது குறித்து பெரும் களேபரம் நடைபெற்று முடிந்திருக்கிறது.

வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரனே இதனை அம்பலப்படுத்தியிருந்தார். “வடக்கின் சில பா.உ. க்களுக்கு அரசாங்கத்திடமிருந்து பெருந்தொகை நிதி கொடுக்கப்பட்டுள்ளது. இது கூட்டமைப்பை உடைக்கும் சதி நோக்கமுடையது” என்று ஜனாதிபதியிடம் முதலமைச்சர் முறையீடு செய்ததாக முதலில் செய்தி வெளியானது.

மாவை சேனாதிராஜா உடனடியாகவே அதை மறுத்து, “அப்படி நடந்திருக்க மாட்டாது. இதுபற்றி முதலமைச்சரிடம் விளக்கம் கேட்டு கடிதம் அனுப்பியிருக்கிறோம்” என்று முதலமைச்ச ரைச் சமாளித்துவிடலாம் என்று பார்த்தார்.

கூட்டமைப்பு பா.உ க்கள் அரசாங்கத்திடம் நிதி பெற்றிருந்தால் அது பெருந்தவறு என்னும் தொனியிலேயே அவரது முதல் அறிக்கை இருந்தது. நிதி வாங்கிய விவகாரத்தை மறைத்துவிடலாம் என்றே அவர் ஆரம்பத்தில் கருதியதாகத் தெரிந்தது.

முதலமைச்சரைச் சமாளிக்க நடத்திய பேச்சுக்கள் பலிக்கவில்லை. மாகாணசபைக்குப் புறம்பாக தனியாகப் பணத்தை வாங்கியது தவறுதான் என்று அவர் விடாப்பிடியாக நின்றுகொண்டார்.

13-06-2015 அன்று ஊடகவியலாளர் சந்திப்பை நடத்திய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினரான சுரேஷ் பிரேமச்சந்திரன், “எமது தொகுதிகளின் அபிவிருத்திக்காக அரசாங்கத்திடமிருந்து நிதி பெற்றோம். அதற்கு நமக்கு உரிமையிருக்கிறது” என்ற புரட்சிகர அறிவிப்பை வெளியிட்டார்.

அதற்குப் பிறகும், அகிம்சைப்போர் அறிவிப்புப் பாணியில், 19-06-2015 அன்று ஊடகவியலாளர் சந்திப்பில் முழங்கி னார் மாவையார். தனது உரத்த குரலுக்கு சோற்றுக்குள் முழுப் பூசணிக்காயை மறைத்துவிடும் சக்தி இருப்பதாக நம்பும் அப்பாவித்தனமும் அதில் இருந்தது.

“சுரேஷ் பிரேமச்சந்திரன் 126 மில்லியன் ரூபாவும் மாவை சேனாதிராஜா 26 மில்லியன் ரூபாவும் அரசிடமிருந்து வாங்கியதாகக் கூறியிருக்கிறார்கள். தென்னிலங்கை அரசியல்வாதிகளிடமிருந்து பணம் வாங்கியதாக முதலமைச்சர் விக்னேஸ்வரன் கூறுவது பொய்” என்று ஓங்கி அடித்தார் மாவை.

இந்தப் பிரச்சினைக்கு நடுவில் புகுந்து, “எனக்குப் பணம் தரப்படவில்லை” என்று தனது பத்திரிகையின் முன்பக்கத்தில், காசு கிடைக்காதவர்களின் ஆதங்கத்தை வெளிப்படுத்தினார் சரவணபவன் எம்.பி.

20-06-2015 பத்திரிகை அறிக்கையில், சொந்தத் தேவைக்காக அல்ல, மக்கள் நலத் திட்டங்களுக்காக எமது எம்பிக்கள் தெற்கிடம் பணம் பெற்றுக் கொண்டது உண்மையே என்று தனது “றிவேர்ஸ் ஷொட்”டை அடித்தார் மாவை.

எப்படியோ, தெற்கிலுள்ள அரசியல்வாதிகள் கூட்டமைப்பு எம்பிக்களுக்கு பெட்டி பெட்டியாகப் பணம் தரத் தயாராக இருக்கிறார்கள்; ஆனால் தீர்வைப் பேசத்தான் தயாரில்லை என்பதிலுள்ள கூட்டுக் களவை மக்கள் புரிந்துகொண்டால் சரி.

கூட்டமைப்பு எம்பிக்களுக்கு பணம் கொடுத்த அரசியல்வாதிகள் மற்றுமொன்றையும் அடித்துச் சொல்லியிருக்கிறார்கள். “நாட்டில் எங்கேனும் இரகசிய தடுப்பு முகாம்கள் இருந்தால் அதுகுறித்து ஆதாரத்துடன் அம்பலப்படுத்துங்கள்” என்ற பகிரங்க சவாலே அது!

இரகசிய முகாம்கள் இருப்பதற்குரிய ஆதாரங்கள் தம்மிடம் இருப்பதாகத் தெரிவித்திருந்த சுரேஷ் பிரேமச்சந்திரனும் முதலமைச்சர் விக்னேஸ்வரனும் ஏன் இப்போது மௌனமாக இருக்கிறார்கள்?

இது மாதிரியான பொய்யும் புளுகு மூட்டைகளும் இரகசிய வாங்கல்களும் கள்ள உறவுகளுமாக அரசியல் செய்துகொண்டிருப்பவர்கள் மூலமாக நாம் எந்த உரிமைகளைத்தான் இங்கு பெற்றுவிட முடியும்?

- ஆசிரியர்

# மகிந்தவின் நல்ல விடயங்களை எவரும் மறந்துவிட முடியாது

## சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவிடமுள்ள நல்ல விடயங்களை யாராலும் மறக்க முடியாது என ஜாதிக ஹெல உறுமய கட்சியின் பொதுச் செயலாளர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

சிங்கள ஊடகம் ஒன்றுக்கு வழங்கியுள்ள செவ்வி ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதன்போது அவர் அளித்துள்ள செவ்வியில், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவிடம் நல்ல மற்றும் கெட்ட விடயங்கள் இருந்தன, கெட்டவிடயங்களுக்காக அவரது நல்ல விடயங்களை மறந்து விடமுடியாது.

முன்னாள் தலைவர்கள் இருவரை இணைத்துக் கொண்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை முன்னோக்கி நகர்த்துவதில் தவறில்லை. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உள்விவகாரங்கள் குறித்து பிரச்சினையில்லை.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தேர்தலின் போது அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுகின்றாரா இல்லையா என்பதுதான் மிகவும் முக்கியமானது.

சந்திரிக்காவையும் மகிந்தவையும் இணைத்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை வெற்றிபெறச் செய்வதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெளியிட்ட கருத்தின் அர்த்தம் புரியவில்லை.

முன்னாள் தலைவர்கள் இணைகின்றார்களா இல்லையா என்பதனை விடவும் மூன்றாவது தலைவரின் கீழ் கட்சி புனர்நிர்மானம் செய்யப்பட்டு மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதே சமூகத்தின் நோக்கமாகும்.

20 ஆண்டுகளுக்கு மேல் நாட்டை ஆட்சி செய்த கட்சி என்ற ரீதியில் இந்த மாற்றம் அவசியமானது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# சுகாதாரத்துறையின் வளர்ச்சியால் நாடு முன்னோக்கிச் செல்லும்

## ராஜித சேனாரட்ன நம்பிக்கை

(கொழும்பு)

சுகாதாரத்துறையின் வளர்ச்சியூடாக வினைத்திறன் அதிகரிப்பதோடு நாடானது அபிவிருத்திப பாதையில் முன்னோக்கிச் செல்லும் என சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.

களுத்துறைப் பகுதியில் இடம் பெற்ற நிகழ்வுவென்றில் கலந்து கொண்டு உரையாற்றிய அமைச்சர் இந்த கருத்தை வெளியிட்டார்.

நம் நாட்டில் நிறைகுறைவுடைய அநேகமான குழந்தைகள் உள்ளனர் அத்தோடு வயதுவந்தவர்கள் இரத்தச்சோகை,உயர் இரத்த அழுத்தம் போன்ற நோய்களால் பாதிப்படைந்துள்ளனர். ஊட்டச் சத்தின் அளவே பல நோய்களுக்கு பிரதான காரணமாக திகழ்கின்றது, ஆகவே்தான் மக்கள் ஊட்டச் சத்துள்ள உணவுகளை உள்ளெடுப்பது தொடர்பில் அக்கறை செலுத்த வேணடும். ஊட்ட சத்து குறைபாட்டை நிவர்த்தி செய்தால் நாட்டின் பொருளாதார அபிவிருத்தி மற்றும் உற்பத்தி துறையில் வளர்ச்சி காண முடியம் என அமைச்சர் இதன் போது குறிப்பிட்டார்.

## அன்டநோவ் சுட்டுவீழ்த்தப்பட்ட வழக்கை விசேட விசாரணைக்கு உட்படுத்தத் தீர்மானம்

விடுதலைப்புலிகளால் வில்பத்து சரணாலயத்தில் வைத்து சுட்டுவீழ்த்தப்பட்ட அன்டனோவ்-32 விமானம் தொடர்பான வழக்கை விசேட வழக்காக விசாரணைக்கு உட்படுத்துவதற்கு அநுராதபுரம் மேல் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது. இந்த விமானம் பலாலியிலிருந்து இரத்மலானையை நோக்கி பயணித்த போதே 2000ஆம் ஆண்டு மார்ச் மாதம் 20ஆம் திகதி வில்பத்து சரணாலயத்தில் வைத்து ஏவுகணையினால் சுட்டு வீழ்த்தப பட்டது. இதனால், விமானத்தில் பயணித்த 32 பேர் உயிரிழந்தனர். இந்தச் சம்பவம் தொடர்பான வழக்கை விசேட வழக்காக கவனத்தில் கொண்டு ஆகஸ்ட் 4ஆம் திகதி முதல் தொடர்ந்து விசாரணைக்கு உட்படுத்துவதற்கு அநுராதபுரம் விசேட மேல் நீதிமன்ற நீதிபதி ரேமா ஸ்வரணாதிபதி கட்டளையிட்டுள்ளார். சந்தேகநபர்களான யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இராசதுரை ஜெகன் மற்றும் நல்லாம் சிவலிங்கம ஆகிய இருவரையும் அன்றுவரையிலும் விளக்கமறியலில் வைக்குமாறும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

# ஒரு இலட்சம் இளைஞர், யுவதிகளுக்கு 5 ஆண்டுகளுக்குள் வேலைவாய்ப்பு

## பிரதமர் ரணில் வாக்குறுதி

(கொழும்பு)

எதிர்வரும் 05 வருடங்களுக்குள் 100,000 வேலை வாய்ப்புக்களை நாட்டிலுள்ள இளைஞர் யுவதிகளுக்கு வழங்க நாங்கள் தயாராகவுள்ளோம் என நாட்டின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அண்மையில் தேசிய இளைஞர் முன்னணியின் பிரதிநிதிகளுடன் அலரிமாளிகையில் நடைபெற்ற சந்திப்பின் போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த பிரதமர் - இதன் மூலம் வேலைவாய்ப்புக்கள் மட்டுமன்றி முதலீட்டுக்கான சந்தர்ப்பங்கள் விரிவாக்கப்படும், கல்வித்துறை பலமாக்கப்படும், இவை எல்லாவற்றையும் கண்டிப்பாக நடைமுறைப்படுத்த வேண்டுமாயின் அடுத்த தேர்தலிலும் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றி பெற வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.

தற்போது எமது நாட்டில் புதிய ஆட்சி மாற்றத்தின் கீழ் பாரிய புரட்சி ஒன்று ஆரம்பித்துள்ளது. இப் புரட்சியானது எமது நாட்டினை லஞ்சமற்ற ஊழலற்ற, மோசடிகளற்ற நாடாக உருவாக்கிய பின்னரே ஓய்வடையும். இந்நாட்டில் உள்ள இளைஞர் யுவதிகளுக்கு சிறந்த எதிர்காலத்தினை வழங்க ஐக்கிய தேசியக் கட்சியினால் மட்டுமே முடியும். அத்துடன் இந்நாட்டின். ஜனாதிபதியாக கடந்த ஜனவரி மாதம் மைத்திரிபால .சிறிசேன பொறுப்பேற்றுக் கொண்டதை தொடர்ந்தே நாட்டிலுள்ள அனைத்து மக்களும் சுதந்திரமாகவும் நிம்மதியாகவும் வாழக் கூடியதாக அமைந்துள்ளது என மேலும் தெரிவித்தார். இந்நிகழ்வில் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் அமைச்சர் கபீர் ஹாஸிம தேசிய இளைஞர் முன்ணணியின் தலைவர். அமைச்சர்ருவான் விஜேவர்த்தன ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

# காணாமல் போனோர் விசாரணை 27 முதல் திருகோணமலையில்

காணாமல் போனோர் தொடர பான முறைப்பாடுகளை விசாரிப்பதற்கான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு, எதிர்வரும் 27ஆம திகதி முதல் திருகோணமலை மாவட்டத்தில் விசாரணைகளை ஆரம்பிக்கவுள்ளதாக ஆணைக் குழுவின் நிர்வாக உத்தியோகத்தர் எச்.டபிள்யூ.குணதாஸ தெரிவித்தார்.


எதிர்வரும் 27ஆம் திகதி முதல் 30ஆம் திகதி வரையான காலப் பகுதியில் இந்த ஆணைக்குழு, திருகோணமலை மாவட்டத்தில் காலை 9 மணியிலிருந்து மாலை 5 மணி வரை சாட்சியங்களைப் பதிவு செய்யவுள்ளது.

அத்துடன், சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் மூதூர் பிரதேச செயலகத்தில் சாட்சியங்கள் பதிவு செய்யப்படவுள்ளன. அவ்விரு தினங்களில் மூதூர், சேருவில, ஈச்சிலம்பற்று, கிண்ணியா, தம்பலகாமம் ஆகிய ஐந்து பிரதேச செயலகப் பிரிவுகளைச் சேர்ந்த 326 பேர் சாட்சியமளிப்பதற்கென அழைக்கப்பட்டுள்ளார்கள்.

29 மற்றும் 30 தினங்களில், திருகோணமலை மாவட்ட செயலகத்தில் காணாமல் போனோர் பற்றிய சாட்சியங்கள் பதிவு செய்யப்படும். இதற்கென, பதவிசிறிபுர, கோமரங்கடவெல, குச்சவெளி, கந்தளாய், மொறவெவ ஆகிய ஐந்து பிரதேச செயலகப் பிரிவிலுள்ளவர்கள் சாட்சியமளிப்பதறகான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. திருகோணமலை மாவட்ச் செயலகத்தில் 29ஆம திகதி திங்களன்று இடம்பெறும் சாட்சியமளிப்புக்காக 181 விண்ணப்பதாரிகளுக்கு கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

# வசூல்ராஜாக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர்...??

■ இராஜ ராஜ சோழன்




ஆரம்பகாலத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி என்ற போர்வையில் தமிழர்கள் செறிந்து வாழும் பிரதேசமாகிய வடக்கு கிழக்கு மாகாணங்களில் அமோக வெற்றிபெற்ற தமிழ்த்தலைவர்கள் பலர் கட்சிக்குள் ஏற்பட்ட சாதி, சமூக வேறுபாடுகள் காரணமாக பிளவுபட்டனர். இதன் விளைவாக அவர்கள் காலத்திற்குக் காலம் புதிய புதிய லேபள்களில் தேர்தல்களைச் சந்தித்து வந்தனர்.

ஒருகட்டத்தில் இலங்கை தமிழ் அரசியல் வரலாற்றில் ஒரு புதிய பரிமாணமாக தமிழீழ விடுதலைப் புலிகள் ஒரேநேரத்தில் இலங்கை அரசாங்கத்தினையும், தமிழ்த்தலைவர்களையும் துப்பாக்கி முனையில் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர் என்பதில் மாற்றுக்கருத்துக்கள் எதுவுமில்லை.

2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் சமர்வரை தமிழ்த்தலைவர்கள் ஒரு அரசியல் மற்றும் இராணுவ அழுத்தத்தின் கீழே இருந்து அரசியல் செய்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற குறைப்பிரசவக் குழந்தை இன்றுவரை சரியான முறையில் வளரவில்லை. அது அரைகுறை அவயவங்களுடன் தேர்தல் காலத்தில் மட்டும் தமிழ்மக்கள் முன்னிலையிலே ஒரு பொம்மைபோலே தொழிற்படுகிறது.

அரசியலுக்கு புதியவராகவும், ஆனால் நீதித்துறையிலே போந்து பொலிந்தவராகவும், கொழும்பை வசிப்பிடமாகக் கொண்டவரும், சிங்கள மக்களுக்கு நெருக்கமானவருமாகிய நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் வடமாகாணசபைத் தேர்தலில் பெற்ற அமோக வாக்குகள் சம்பந்தன், மாவை ஆகியோருக்கு மட்டுமல்ல மற்றைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தலைவர்களுக்கும் வயிற்றைக் கலக்கியது.

ஒரு பொம்மைபோல முதலமைச்சரை வைத்து வடமாகாணசபையை நடத்த நினைத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் முதலமைச்சருடைய அதிரடிப்பேச்சுக்கள், நடத்தைகள், அறிக்கைகள் பற்றி விசனமடைந்து அவரை விமர்சிக்கும் அளவிற்கு நிலைமை மாறியுள்ளது.

மாவை சேனாதிராசா முதலமைச்சருக்கு கடிதம் எழுதுவதும், முதலமைச்சர் அவருக்கு பதில் எழுதுவதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் ஒரு கட்டமைப்போ அல்லது கட்டுக்கோப்போ இல்லையென்பதனை கோடிட்டுக் காட்டுகின்றது.

வடமாகாணசபை என்பது தனித்துவமானது. நாடாளுமன்ற உறுப்பினர்கள் செலவழிக்கும் எந்த நிதியும் மாகாணசபை ஊடாகவே செலவழிக்க வேண்டும் என்று முதலமைச்சர் கேட்டுக்கொள்வது சில விடயங்களில் உண்மையானாலும் நாடாளுமன்ற உறுப்பினர்களுடைய சிறப்புத் தன்மையில் முதலமைச்சர் கைவைக்க முடியுமா? என்ற கேள்வியினை கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் பகிரங்கமாகவே கேட்டுள்ளனர்.

வருடாந்தம் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதிமூலம் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியை நாடாளுமன்ற உறுப்பினர்கள் செலவு செய்கின்றபோது சில சந்தர்ப்பங்களில் மாகாண அமைச்சுக்களின் கீழ் வருகின்ற திணைக்களங்களின் ஊடாக செய்து வருகின்றனர்.

உதாரணமாக மாகாணப் பாடசாலைகளுக்கு போட்டோ கொப்பி இயந்திரம் வாங்கிக் கொடுக்க வேண்டுமெனில், மாகாணக்கல்வி அமைச்சின் ஊடாகத்தான் செய்யு வேண்டும்.

**வழமையாக தேர்தல் வருகின்றபோது ஆட்சியாளர்களை விமர்சித்து பழக்கப்பட்ட த.தே.கூ வினர் இம்முறை தாங்களே ஆட்சியாளர்களாக இருப்பதனாலும், ஆட்சியாளர்களிடம் பெருமளவு பணத்தை பெற்றிருப்பதாலும் பாறாங்கல்லை கட்டிக்கொண்டு தேர்தல் கடலை நீந்த வேண்டியுள்ளது.**

உள்ளூராட்சி சபையின் கீழுள்ள வீதியை திருத்த வேண்டுமெனில், மாகாண உள்ளூராட்சி அமைச்சின் ஊடாகத்தான் செய்ய வேண்டும்.

வடமாகாணசபை முதலமைச்சர் கூறுவதுபோல 50 வருடகால அரசியல் அனுபவம் உடைய மாவை சேனாதிராசா வடமாகாண முதலமைச்சரை உதாசீனம் செய்து, நிதியைச் செலவழிக்க முடியுமா?

இதேவேளை யாழ்மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு' இணைத்தலைவர்களில் ஒருவராகிய முதலமைச்சரின் அங்கீகாரம்

**முதலமைச்சர் தன்னுடைய அரசியல் எதிரிகளாக முன்னர் மகிந்த ராஜபக்ஷவையும், தற்சமயம் ரணில் விக்கிரமசிங்கவையும் பார்க்கிறார். தற்சமயம் ரணில் விக்கிரமசிங்க ஆட்சியில் இருப்பதனால் அவரிடம் பணம்பெற்ற த.தே.கூ நாடாளுமன்ற உறுப்பினர்களையும் எதிரிகளாகவே பார்க்கின்றார்.**

இல்லாமல் யாழ்மாவட்டப் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது நிதியை செலவழிக்க முடியாது.

இது தெரிந்துதான் த.தே.கூ நாடாளுமன்ற உறுப்பினர்கள் தற்சமயம் அரசிடமிருந்து பெற்ற நிதியினை மக்கள் அபிவிருத்திக்குப் பயன்படுத்தாமல் தங்களுடைய சட்டைப்பைகளில் நிரப்பிக் கொண்டமையினை முதலமைச்சர் பகிரங்கப்படுத்தியுள்ளார்.

த.தே.கூ வின் மூத்த தலைவர் மாவை தனது அரசியல் அனுபவம், தலைமைத்துவப் பதவி அந்தஸ்து ஆகியவற்றை மறந்து தனது பிழையை உணர்ந்து வடமாகாண முதலமைச்சரின் வாசஸ்தலத்திற்குச் சென்று மண்டியிட்டு, மன்னிப்புக்கோரி வாருங்கள் இருவரும் சேர்ந்து தமிழ் மக்களை எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் ஏமாற்றலாம் என்றும் கோரியபோது, தனக்கே உரித்தான நீதியரசர் தோரணையில், வழங்கிய தீர்ப்பில் எந்த மாற்றமும் இல்லை என்ற கோதாவில் முதலமைச்சர் பதிலளித்தமை மாவைக்கு கிடைத்த புதிய அரசியல் அனுபவம்.

'வெளியில் வந்து மாவை, பிரபாகரன் கூட இப்படியில்லை முதல்வர் தான் பிடித்த முயலுக்கு மூன்றுகாலென நிற்கிறார். இந்த மனுஷனை வைத்துக்கொண்டு நாடாளுமன்றத் தேர்தலுக்குச் சென்றால் தோல்வி நிச்சயம். என்னையே பத்திரிகையாளர் மாநாடு வைக்கச்சொல்லி சொல்கிறாரே என அழுது புலம்பியுள்ளார்.

வழக்கமாக மாவை சேனாதிராசா விடுகின்ற கதைகள் அல்லது அச்சுறுத்தல்கள் நீதியரசர் விக்கினேஸ்வரனிடம் இன்றல்ல என்றும் எடுபடாதென்பது மாவை சேனாதிராசாவின் பத்திரிகையாளர்கள் சந்திப்பின் மூலம் வெளிப்படுகிறது.

மாவை சேனாதிராசா ஒரேமேசையில் வைத்து மாகாணசபை, உள்ளூராட்சி சபை மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எல்லோரும் பேசி சகல பிரச்சினைகளுக்கும் தீர்வுகாணலாம் வாருங்களென அழைத்தபோது முதலமைச்சர் வேண்டுமென்றே தட்டிக்கழித்ததாகவும் கூறப்படுகிறது.

முதலமைச்சர் தன்னுடைய அரசியல் எதிரிகளாக முன்னர் மகிந்த ராஜபக்ஷவையும், தற்சமயம் ரணில் விக்கிரமசிங்கவையும் பார்க்கிறார்.

தற்சமயம் ரணில் விக்கிரமசிங்க ஆட்சியில் இருப்பதனால் அவரிடம் பணம்பெற்ற த.தே.கூ நாடாளுமன்ற உறுப்பினர்களையும் எதிரிகளாகவே பார்க்கின்றார்.

த.தே.கூ ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாவை பக்கமாகவும், மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் முதலமைச்சர் பக்கமாகவும் நிற்கக்கூடிய வாய்ப்புக் காணப்படுகிறது.

எதிர்வரும் சில தினங்களில் அமெரிக்காவில் நடைபெறவிருக்கின்ற தென்னிந்திய நடிகைகள் கலந்து கொள்ளவிருக்கின்ற கலாசார நிகழ்ச்சியொன்றிற்கு பிரதம விருந்தினராக கலந்து கொள்கின்றமையை காரணம் காட்டியே த.தே.கூ ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தை முதல்வர் புறக்கணித்ததாகவும் கூறப்படுகிறது.

த.தே.கூ நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு முதலமைச்சரின் இந்தச்செயல் அதிர்ச்சி அளித்துள்ளது. கட்சி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தைவிட நடிகைகள் விழா பெரிதாகிப் போய்விட்டதா? என விசனம் அடைந்துள்ளார்கள்.

முன்னைய ஆட்சிக்காலத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் யாவரினதும் நிதி ஒழுங்கான முறையில் மாகாண மற்றும் மத்திய அமைச்சின் கீழ்வருகின்ற திணைக்களங்களினால் மக்களுக்காக செலவழிக்கப்பட்டது.

அப்போதிருந்த மத்திய அமைச்சைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இணைத்தலைவர்களில் ஒருவராகிய அமைச்சர் ஒருவரும், வடமாகாண முதலமைச்சரும் சேர்ந்து யாழ் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களில் அபிவிருத்தித் திட்டங்களை மீளாய்வு செய்து முடிவுகளை எடுத்திருந்தனர்.

அப்போது மத்திய அரசு எந்தவிதமான நிதிப்பங்களிப்புக்களையும் அர்ச நாடாளுமன்ற உறுப்பினர்கள் கைகளில் நேரடியாக வழங்கியதில்லை. அந்த நாடாளுமன்ற உறுப்பினர்களும் மக்கள் அபிவிருத்திக்காக நிதியை செலவழிக்காமல் தங்கள் சட்டைப்பைகளிற்குள் போடவில்லை.

யுத்தத்திற்குப் பின் யாழ் மாவட்டம் பாரிய அபிவிருத்தியை கண்டுள்ளதென்பதனை வடமாகாண முதலமைச்சரே ஒப்புக்கொண்டுள்ளனர். ஜனாதிபதி மைத்திரியிடம் தடைப்பட்டிருக்கின்ற அபிவிருத்திக்கு மேலதிக நிதிப்பங்களிப்பை கேட்டிருக்கின்ற நிலையில், முதலமைச்சரை ஏமாற்றி இடைக்குள் புகுந்து ரணில் விக்கிரமசிங்க மூலம் வடமாகாண அபிவிருத்திக்கென நிதியைப்பெற்று தம்முடைய சொந்த நலனுக்காக த.தே.கூ நாடாளுமன்ற உறுப்பினர்கள் பயன்படுத்துவதை நீதியரசர் மன்னிக்கமாட்டார் என்பது புலனாகிறது.

இந்த நிலையில் முதலமைச்சரின் அமெரிக்க விஜயம் புலம்பெயர் தமிழர்களை கட்டாயம் சந்திக்கவைக்கும். அதன்மூலம் முதலமைச்சர் த.தே.கூ நாடாளுமன்ற உறுப்பினர்களின் தற்போதைய செயற்பாடுகளைக் கூறுவார். இதனால் புலம்பெயர் தமிழர்களுடைய நிதிப்பங்களிப்பு த.தே.கூ நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிர்வரும் தேர்தலுக்குக் கிடைக்காமற் போகலாம்.

யாழ்.மாவட்டத்தில் ஜனநாயக மற்றும் முற்போக்கு கட்சிகள் சில தமது அலுவலகங்களை பிரதேசங்கள் தோறும் அமைத்து மக்களுக்கு சேவையாற்றி வருகின்ற நிலையில் த.தே.கூ வினருடைய அலுவலகங்கள் அந்தளவிற்கு திறக்கப்பட்டு அங்கு மக்கள் சேவை நடைபெறவில்லை. இதுமட்டுல்ல த.தே.கூ வில் இருக்கின்ற கட்சிகளுடைய அலுவலகங்களில் கூட மக்கள் பணி நடைபெறவில்லை.

உண்மையில் மக்கள் சேவை செய்ய வேண்டுமென்ற மனமிருந்தால் மட்டுமே அலுவலகங்களைத் திறந்து நாளாந்தம் மக்கள் சந்திப்பு நடைபெறும். தேர்தலை மட்டும் மையமாகக் கொண்டு கட்சி நடத்துபவர்கள் தமது நாடாளுமன்ற ஆசனம் மூலம் கிடைக்கின்ற எந்த நிதியையும் தங்கள் பிரதேச மக்கள் தொடர்பகங்கள் மூலம் செலவழிக்க மாட்டார்கள். ஏனெனில் மக்கள் தொடர்பு அலுவலகங்களைத் திறந்தால் நாளாந்தம் மக்களைச் சந்திக்க வேண்டும், அலுவலகத்திற்கு வாடகை கொடுக்க வேண்டும், அலுவலர்களுக்கு சம்பளம் கொடுக்க வேண்டும் இவையெல்லாவற்றிற்கும் நிதி செலவாகும்.


வரவை மட்டுமே விரும்பும் த.தே.கூ நாடாளுமன்ற உறுப்பினர்கள் செலவழிப்பதென்பது அவர்களுக்கு ஒவ்வாமை ஆகும். வழமையாக தேர்தல் வருகின்றபோது ஆட்சியாளர்களை விமர்சித்து பழக்கப்பட்ட த.தே.கூ வினர் இம்முறை தாங்களே ஆட்சியாளர்களாக இருப்பதனாலும், ஆட்சியாளர்களிடம் பெருமளவு பணத்தை பெற்றிருப்பதாலும் பாறாங்கல்லை கட்டிக்கொண்டு தேர்தல் கடலை நீந்த வேண்டியுள்ளது.

அவர்கள் கரையேற வேண்டுமெனில், முதலமைச்சர் விக்னேஸ்வரனை முன்னிலைப்படுத்தி நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்ள வேண்டும்.

இல்லாவிட்டால் ஏழை மக்களின் கதாநாயகர்களாக இருக்கின்ற, அபிவிருத்திப் பாதையின் முன்னோடிகளாகத் திகழ்கின்ற, மாறாத கொள்கையுடைய, இனங்களுக்கிடையே நல்லிணக்கம் எதிர்பார்க்கின்ற ஜனநாயக மற்றும் முற்போக்கு வாதிகளிடம் அதிர்ச்சித் தோல்வி அடைய நேரிடும்.

# புதிய நாடாளுமன்றத்தில் அமைச்சர்கள் எண்ணிக்கை 30

## ஜனாதிபதி மீண்டும் வலியுறுத்து



(கொழும்பு)

நாட்டுக்கு தேசிய கொள்கை ஒன்று அவசியம் என புதிய நாடாளுமன்றத்தில் அமைச்சர்களின் எண்ணிக்கை 30 ஆக இருக்கும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன் தினம் இடம்பெற்ற நிகழ்வுகளில் அவர் மேலும் தெரிவிக்கையில்

இந்தியாவில் அரசாங்கம் மாறுகின்ற போதும் அந்த நாட்டின் தேசிய கொள்கை மாறுவதில்லை நாட்டின் கொள்கைக்கு அமைய இந்தியாவில் அரசாங்கம் செயற்படுகின்றார்.

அவ்வாறான தேசிய கொள்கை ஒன்றை அரசியல்வாதிகளுக்கு புகட்டுவது கல்வியாளர்களின் பொறுப்பு ஆகும்.

விரைவில் புதிய நாடாளுமன்றம் ஏற்படுத்தப்படும் அதில் அமைச்சர்களின் எண்ணிக்கை 30 ஆக இருக்கும் அதன்பின் தேசிய கொள்கைக்காக அரசியல் கட்சிகளின் இணக்கங்களைப் பெறுமாறு கல்வியாளர்களிடம் கேட்டுக் கொள்கின்றோம.

நாட்டில் 1950-1960 காலங்களில் தேசிய கொள்கை காணப்பட்ட அதன் பின் அவற்றுக்கு இடையூறு ஏற்பட்டது புதிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொழும்பு வந்தவுடன் அவர்களது உடை, நண்பர்கள் மாற்றம் அடைகின்றார். ஊரை மறக்கும் அவர்கள் அடுத்த தேர்தலில் தோல்வியடைவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# நாட்டில் முன்னெடுக்கப்படுவது அங்கவீனமான நல்லாட்சி

## விஜித ஹேரத் சாடல்

(கொழும்பு)

நாட்டில் தற்போது அங்கவீனமானதொரு நல்லாட்சியே முன்னெடுக்கப்பட்டு வருவதாக மக்கள் விடுதலை முன்னணியின் பிரசார செயலாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

மீரிகம தேர்தல் தொகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர், நாட்டில் இப்போது நல்லாட்சியாகும் நிலவவில்லை. நாடு இன்று அங்கவீனமான ஓர் நிலையில் முன்நகர்கின்றது. தற்போது நாடு செல்லும் வழியை ஏற்றுக்கொள்ள முடியாது, இதை மாற்றியமைக்க வேண்டும். மாற்றத்தை செய்யக் கூடிய ஒரே கட்சி ஜே.வி.பியோடு அண்மையில் ஜனாதிபதிக்கு இரண்டு சிரேஸ்ட ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டனர். ஒருவர் ரய்கம பக்கம் மற்றையவர் கம்பொல பக்கம், இருவருக்கும் 80 வயது தாண்டியுள்ளது. அவர்களினால் வழங்கப்படக்கூடிய ஆலோசனைகள் தான் என்ன?

மகிந்த ராஜபக்ஸ குடும்ப ஆட்சியொன்றை நடத்தினார், நாம் தொடர்ச்சியாக போராடினோம், அதன் ஓர் விளைவாக ஜனவரி மாதம் 8ஆம் திகதி நாட்டில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டது.

இந்த மாற்றம் மக்களுக்கு ஏற்ற வகையிலான நிவாரணமாக மாற்றியமைக்கப்பட வேண்டும். 19ஆம் திருத்தச் சட்டத்தின் ஊடாக எமக்கு பாரியளவு வெற்றி பெற்றுக்கொள்ள முடிந்தது.

எமது தலையீடு காரணமாக இவ்வாறான வெற்றியை ஈட்ட முடிந்தது. நாம் செய்த போராட்டத்தின் ஓர் வெற்றியே அரச ஊழியர்களின் சம்பள உயர்வானதாகும் எனவும் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

# 2000 ரூபா சம்பள உயர்வு இம்மாதம் முதல் அமுல்

(கொழும்பு)

அரச ஊழியர்களுக்கான மற்றொரு 2000 ரூபா சம்பள உயர்வு இந்த ஜூன் மாதத்திலிருந்து வழங்கப்படவுள்ளது என திறைசேரியின் துணைச் செயலாளர் எஸ்.ஆர். அர்ரி கலே தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நிதியமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர்களை தெளிவுபடுத்தும் மாநாட்டில் கலந்து கொண்ட போது ஊடகவியலாளர் ஒருவரின் கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பொதுமக்களுக்கு உறுதியளித்தவாறே ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் முறையே 5000, மற்றும் 3000 சம்பள உயர்வு வழங்கப்பட்டது.

அத்துடன் இம் மாதம் வழங்கப்படவுள்ள 2000 ரூபாவினையும் கருத்திற் கொள்ளும் போது, இதன்படி அரசு மக்களுக்கு உறுதியளித்த 10,000ரூபா சம்பள உயர்வானது நிறைவேறும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# உதயங்க நிரபராதியானால் சாட்சியம் வழங்க மறுப்பது ஏன்?

## பிரதி வெளிவிவகார அமைச்சர் கேள்வி

(கொழும்பு)

உதயங்க வீரதுங்க நிரபராதியாக இருந்தால் நேரில் வந்து விசாரணைகளுக்கு சாட்சியங்களை வழங்க ஏன் மறுப்புத் தெரி வித்து வருவதாக பிரதி வெளிவிவகார அமைச்சர் அஜித் பி. பெரேரா கேள்வியெழுப்பியுள்ளார்.

வெளிவிவகார அமைச்சில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர்களுடனான சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவிற்கான முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்கவின் பெயரை உபயோகித்து வேறு எவரோ அறிக்கை வெளியிட்டு வருகின்றனர். ஊடகங்கள் அந்த அறிக்கையின் மூலப்பிரதியினை விசாரணைகளுக்காக வழங்கினால் அவர் தங்கியிருக்கும் இடம் மற்றும் அவருக்கு உதவும் நபர்களை கண்டுபிடிக்க இலகு வாக இருக்கும்

ரஷ்யாவிற்கான முன்னாள் தூதுவரான உதயங்க வீரதுங்க எங்கு இருக்கிறார் என்பது எங்களுக்குத் தெரியாது. ஜனவரி 28 ஆம் திகதிக்குப் பின்னர் அவர் எவர் கையிலும் இல்லை.

உதயங்க வீரதுங்க, தன்மீது சுமத்தப்பட்டுள்ள் குற்றச்சாட்டுக்கள் பொய்யானவை என்றும் தான் ஒரு நிரபராதியெனவும் தற்போது உக்ரேன் அரசாங்கத்திலேயே தங்கியிருப்பதாகவும் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

இந்த அறிக்கை உதயங்கவினாலேயே எழுதப்பட்டிருக்கும் என்பதில் நம்பகத்தன்மையில்லை எனினும் உக்ரேன் அரசாங்கம் இரண்டு தடவைகள் முறைப் பாடு செய்துள்ள நிலையில் அவர் எவ்வாறு அங்கே தங்கிருக்க முடியும்

மிக் விமானக் கொள்வனவு தொடர்பில் விரிவான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதில் உதயங்க முக்கிய தரகராக செயலாற்றியுள்ளார் என தெரிவித்துள்ளார்.

# நாட்டின் அபிவிருத்திகள் தடைப்பட்டுள்ளன

## மகிந்த கவலை

நாட்டின் அபிவிருத்திகள் தடைய பட்டுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தங்கல்ல வலய கல்விப் பணிமனையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தங்கல்ல வலய கல்விப் பணிமனை வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்ட அநாகரிக தர்மபாலவின் உருவச்சிலையை திறந்து வைப் பதற்காக இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டில் எதுவிதமான அபிவிருத்தியும் ஏற்படவில்லை நான் அபிவிருத்தி செயற்பாடுகளை மேற்கொண்ட போது குறை கூறியவர்கள் தற்போது என்ன செய்கிறார்கள் எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.

# சிங்கத்துக்கு சவால்விடும் பன்றிக்குட்டி

## மகிந்த யாப்பா கிண்டல்

(கொழும்பு)

பன்றிக் குட்டி சிங்கத்திற்கு சவால் விடுவது போன்று அமைசசர் ராஜிதவின் புதல்வர் செயற்படுவதாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் உடனான சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர், முன்னாள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்த அண்மையில் ராஜிதவின் புதல்வர் சதுர சேனாரட்ன சவால் விடுத்திருந்தார்.

முடிந்தால் எதிர்வரும் பொதுத தேர்தலில் பெலியத்த தேர்தல் தொகுதியில் போட்டியிட்டு வெற்றியீட்டிக் காட்டுமாறு மகிந்த ராஜபகஷவிற்கு, சதுர சேனாரட்ன சவால் விடுத்திருந்தார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு விடுக்கப்பட்டு வரும் சவால்களை அவர் பொருட படுத்த மாட்டார். மகிந்த இந்த நாடடின் வீரர், மக்கள் அவர் மீது மரியாதை கொண்டுள்ளனர்.

மகிந்த ராஜபக்ஸவிற்கு எந்தவொரு விசேட பதவியோ, விசேட பாதுகாப்போ வெறும் வரப்பிரசாதங்களோ அவசியமில்லை வெகு விரைவில் மக்கள் அவரிடம நாட்டை ஒப்படைப்பார்கள் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# தடை செய்யப்பட்ட அமைப்புக்கள் மீளாய்வு செய்யப்படும்

## வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு

தடைசெய்யப்பட்டுள்ள அமைபுகளின் பட்டியலை புதிய அரசாங்கம் மீளாய்வு செய்யும் என்று வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தல் வருவதை அறிந்து, நாட்டில் விடுதலைப் புலிகள் இயக்கம் மீண்டும் உயிர் பெறுவதாக சித்தரிக்கும் வகையில் மகிந்த ராஜபக்ஷ அவசர அவசரமாக இந்த தடைப பட்டியலை தயாரித்திருந்தார்.

இதில் 05 அல்லது 06 ஆண்டுகளுக்கு முன்னர் உயிரிழந்தவர்களின் பெயர் விபரங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இதன் நம்பகத்தன்மையை மீள உறுதி செய்யும் நோக்கில் தடைப்பட்டியலை மீளாய்வு செய்யும் வேலைத்திட்டத்தில் புதிய அரசாங்கம் களமிறங்கியுள்ளது.

புலம்பெயர்ந்து வாழும் இலங்கையர்களை மீண்டும் தாய்நாட்டிற்கு அழைப்பதே, புலம பெயர்ந்தோருக்கான விழாவின் நோக்கமாகும்.

எனினும் தடை செய்யப்பட்டுள்ள் பட்டியலில் இருக்கும் அனைவரும் தீவிரவாதிகளா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

உயிரிழந்தவர்களின் பெயர்களும் அந்தப் பெயர்ப் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

நாம் புலம்பெயர்ந்து வாழும் இலங்கையர்களுடனும் பேச்சு நடத்துகின்றோம்.

இதன்படி பிரிவினைவாதம் இல்லாத ஒன்றிணைந்த இலங்கையை உருவாக்க விரும்பும் ஒவ்வொருவருக்கும் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

புலம்பெயர் இலங்கையர்களுடன் அரசாங்கம் பேச்சு நடத்த வேண்டுமென்பதே மகிந்த ராஜபகஷவின் நல்லிணக்க ஆணைக குழுவின் முக்கிய கொள்கையாகும். அவர் செய்யத் தவறியதை நாம் செய்கிறோம்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது அறிக்கையை வாசிக்க தவறிவிட்டமைக்காக நான் வருந்துகிறேன். என்றும் அமைச்சர் மங்கள சமரவீர மேலும் தெரிவித்தார்.

# இனவாதிகளாக்க முயற்சி

சிங்களவர்களை இனவாதிகளாக வெளிக்காட்ட முயற்சிக்கப்படுவதாக பெபிலியான சுனேத்திரா மஹாதேவி பிரிவேனாதிபதி கலாநிதி மெதகொட அபயதிஸ்ஸ தேரர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் 70 வீதமானவர்கள் சிங்களவர்களாவர் இவர்கள் இனவாதிகள் என வெளிக்காட்டும் நோக்கில் முன்னெடுக்கப்பட்டு வரும் நடவடிக்கை நாட்டை பிளவுபடுத்த வழியமைக்கும்.

இன்னும் சிலர் நாட்டை பிளவடையச் செய்ய முயற்சிக்கின்றனர். சிங்களவர்களுக்கு எதிரான கருத்துக்கள் வெளியிடப்படுகின்றன.

அண்மையில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு இந்த நாடு சிங்கள நாடு என எங்காவது குறிப்பிடப்பட்டுள்ளதா என நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ கேள்வியெழுப்பி யிருந்தார் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# 20 ஆயிரம் இளைஞர், யுவதிகளுக்கு 12 நிலையங்களில் யோகா பயிற்சி

## வாழும்கலை அமைப்பின் பயிற்சிப் பணிப்பாளர் தகவல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை முழுவதும் இது வரை 12 பயிற்சிமையங்களில் 20 ஆயிரம் இளைஞர், யுவதிகளுக்கு வாழும்கலை அமைப்பு யோகா பயிற்சியை வழங்கியுள்ளதாக அந்த அமைப்பின் பயிற்சிப்பணிப்பாளர் கே.கே. கணேஸ்ஜி தெரிவித்தார்.

யூன் 21 ஆம் திகதியை ஐ.நா. சபை உலக யோகாதினமாக பிரகடனம் செய்திருப்பதை முன்னிட்டு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் உலக யோகாதின பிரகடனம், யோகா கலைக்கு கிடைத்த மகத்தான வெற்றியென அவர் குறிப்பிட்டார்.

இந்நிலையில் கடந்த 14 ஆண்டுகளாக வாழும் கலைப் பயிற்சியை வழங்கி வருகிறோம். மேலைத்தேய நாடுகளில் இதற்கு மகத்தான வரவேற்புக் கிடைத்திருப்பதாக அவர் கூறினார்.

இந்த யோகா கலையை வெறு மனே ஒரு பயிற்சியாக மாத் திரம் வழங்குவதுடன் நாம் நின்றுவிடவில்லை.

அதற்கும் மேலாக மக்களின் வாழ்க்கை மேம்பாடு, திறன் அபிவிருத்தி, சுயமேம்பாட்டுத் திட்டம் போன்ற வற்றிலும் தாம் அக்கறை கொண்டு செயற்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

தமிழ் நாட்டின் 9 சிறைச் சாலைகளில் இப்பயிற்சியைப் பெற்ற கைதிகள் அந்த வாய்ப்பு வெளியே இருக்கும் போது தமக்குக் கிடைத்திருந்தால் இந்த சிறை வாழ்க்கையை அனுபவிக்க வேண்டிய அவசியம் இருந் திருக்காது என குறிப் பிட்டதையும் கணேஸ்ஜி தனது நேர் காணலில் சுட்டிக்காட்டி யிருக்கிறார்.

கடந்த ஞாயிற்றுக்கிமை நடை பெற்ற உலக யோகா தின நிகழ் வுகள் தமிழ் நாட்டின் 26 சிறைச்சாலைகளில் மிக கோலா கலமாக இடம் பெற்றதாகவும் அவர் தெரிவித்தார்.

# சிறுமியைக் காணவில்லை பெற்றோரிடம் விசாரணை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி உருத்திரபுரம் எள்ளுக்காடு பகுதியில் 3 வயதுச் சிறுமியை நேற்றுமுன்தினம் மாலை 4 மணிமுதல் காணவில்லை என பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த சிறுமி நேற்றுமுன்தினம் பெற்றோருடன் நீராடுவதற்காக வீட்டிலிருந்து சுமார் 2 கிலோ மீற்றர் தொலைவிற்கு சென்று கொண்டிருந்த வேளை, குறித்த சிறுமியை ஒன்று விட்ட சகோதரனுடன் அனுப்பிவிட்டு பெற்றோர் நடந்து சென்றதாகவும், சிறுமியை ஏற்றிச்சென்ற 14 வயது சிறுவன் சிறுமியை விடுமாறு கூறிய இடத்தில் விட்டு வந்ததாகவும், பெற்றோர் சென்று பார்த்த போது சிறுமியை காண வில்லை எனவும் பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

எனினும் குறித்த சிறுமியைக் கண்டு பிடிக்கும் முயற்சியில் பொலிஸார் தீவிரமாக ஈடுபட்டுள்ள நிலையில், சிறுமியின் பெற்றோர், 14 வயதுச் சிறுவன் உட்பட ஐவர் தடுத்து வைக்கப் பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (29)

# "வெள்ளம்" குறும் திரைப்படத்திற்கு பிரான்ஸில் நாவலர் விருது




(யாழ்ப்பாணம்)

குறும்பட திரைப்பட இயக்குநர் சி.விமல்ராஜின் இயக்கத்தில் வெளியிடப்பட்ட "வெள்ளம்" குறும திரைப்படத்திற்கு பிரான்ஸில் நாவலர் விருது கிடைத்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் தயாரிக் கப்பட்ட குறுந்திரைப்படங்க ளிலிருந்து மூன்று குறுந்திரைப் படங்கள் அண்மையில் பிரான் ஸில் இடம்பெற்ற குறுந்திரைப் படம் போட்டிக்குத் தெரிவாகி இருந்தன. இதன் போது "வெள் ளம்" எனும குறுந்திரைப் படம். சிறந்த விமர்சனத்துக்கான விருதினைப் பெற்றதோடு 1000 ரூபா யூரோவினையும் பரிசாகப் பெற்றது.

இக் குறுந்திரைப்படம் குழநதை நட்சத்திரமான யனுசனின் நடிப்பில் வெளிவந்தது. அத்துடன உதவி இயக்குநராக ஜொனாத், சிந்துவும், இசை அமைப்பாளராக பிரியனும் பணிபுரிந்தனர். இத் திரைப்படத்தினைத் தெரிவு செய்த நடுவர் இந்தியாவின் சிறந்த இயக்குநரான மிஸ்கின் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# வரணி வடக்கு பகுதிக்கு வடக்கின் வசந்த மின்னிணைப்பு

(வரணி)

வரணி வடக்குப்பகுதியில் இதுவரை மின்சார வசதி ஏற்படுத் தாத வீடுகள் மற்றும் வீதிகள், ஒழுங்கைகள் போன்ற சகல இடங்களுக்கும் இலங்கை மினசார சபையினர் மின் விநியோ கத்தை ஏற்படுத்தி வருகின்றனர்.

இதனால் இதுவரை காலமும் மின்வசதி இல்லாத குடும் பங்கள் பெரிதும் நன்மை அடைந்துள்ளதுடன் மகிழ்ச்சியும் அடைந்துள்ளனர். மேற்படித் திட்டம் வடக்கின் வசந்தமூடாகவே வழங்கப்படுவதாக மின்சார சபை ஊழியர் ஒருவர் தெரிவித் துள்ளார். (150)

ஜனரஞ்சகத் தன்மையை முதன்மைப் படுத்தி பக்கம் சாராமல் துணிச்சலுடன் தரமான அம்சங்களை அள்ளிவரும் வாரமலர்.

வாரமலர்
தினமுரசு
25.06.2015

நாளைய தினமுரசு வாரமலரில்...




- அடுத்த பிரதமர் யார்? திரைமறைவில் நடக்கிறது பேரம்
- தமிழர்களை விற்கும் தமிழ்த் தேசியம்!
- சர்வதேச உதைபந்தாட்ட ஊழல்
- கிழக்கில் அச்சமூட்டும் ஆயுதக் கலாசாரம்



உதைபந்தாட்டத்தின் உலக நாயகி

உங்கள் முகவர்களிடம் கேட்டு வாங்கிப் படியுங்கள்!

சூடு - சுவை - சுவாரசியம் - இதுதான் தினமுரசு

# மகளிர் உலக கிண்ண கால்பந்து காலிறுதியில் வல்லரசுகள்



(ஒட்டாவா)

மகளிர் உலக கோப்பை கால்பந்துப் போட்டியில் இங்கிலாந்து, அமெரிக்க அணிகள் காலிறுதிக்கு தகுதி பெற்றுள்ளன.

7 ஆவது மகளிர் உலக கோப்பை கால்பந்துப் போட்டி கனடாவில் நடைபெற்று வருகிறது. இதில் 24 நாடுகள் பங்கேற்றன.

கடந்த 17ஆம் திகதியுடன் லீக் ஆட்டங்கள் முடிந்தது. இதன் முடிவில் கனடா, சீனா, ஜேர்மனி, நோர்வே, ஜப்பான், கமரூன், அமெரிக்கா, அவுஸ்ரேலியா, பிரேசில், கொலம்பியா, பிரான்ஸ், இங்கிலாந்து, சுவீடன், சுவிட்சர்லாந்து, தென்கொரியா, நெதர்லாந்து ஆகிய 16 அணிகள் 2 ஆவது சுற்றுக்கு நுழைந்தன.

நியூசிலாந்து, தாய்லாந்து, ஐவேரிகோர்ஸ்ட், ஈக்வடோர், நைஜிரியா, கோஸ்டரிகா, ஸ்பெயின், மெக்சிக்கோ ஆகிய 8 அணிகள் முதல் சுற்றிலேயே வெளியேறின.

கடந்த 20ஆம் திகதி 2ஆவது சுற்று ஆட்டங்கள் தொடங்கின. ஜேர்மனி, சீனா, அவுஸ்ரேலியா, பிரான்ஸ், கனடா அணிகள் காலிறுதிக்கு தகுதி பெற்று இருந்தன.

நேற்று முன்தினம் நடந்த ஒரு ஆட்டத்தில் இங்கிலாந்து நோர்வே அணிகள் மோதின. இதில் இங்கிலாந்து 2:1 என்ற கோல் கணக்கில் வென்று கால் இறுதிக்கு தகுதி பெற்றது. ஆட்டத்தின் 54ஆவது நிமிடத்தில் நோர்வே முதல் கோலை அடித்தது. குல்ப்ரேன்ட்சன் இந்த கோலை அடித்தார்.

61ஆவது நிமிடத்தில் இங்கிலாந்து பதில் கோல் அடித்து சமன் செய்தது. ஹாட்டன் இந்த கோலை அடித்தார். 76ஆவது நிமிடத்தில் இங்கிலாந்து வீராங்கனை பிரான்ஸ் 2 ஆவது கோலை அடித்தார். இங்கிலாந்து அணி காலிறுதியில் கனடாவை சந்திக்கிறது.

மற்றொரு 2ஆவது சுற்று ஆட்டத்தில் அமெரிக்கா கொலம்பிய அணிகள் மோதின. இதில் அமெரிக்கா 2:0 என்ற கோல் கணக்கில் வென்று கால் இறுதிக்கு தகுதி பெற்றது.

அமெரிக்க அணியில் மோர்கன் (53ஆவது நிமிடம்), லியாட் (66ஆவது நிமிடம், பெனால்டி) கோல் அடித்தனர். அமெரிக்க அணி காலிறுதியில் சீனாவை 26ஆம் திகதி எதிர்கொள்கிறது.










(ஊர்காவற்றுறை)

வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான பெரு விளையாட்டுப் போட்டிகளில் 8 ஆவது உடற்பயிற்சிப் போட்டியில் பெண்கள் பிரிவில் முதலாமிடத்தை மானிப்பாய் மகளிர் கல்லூரி, இரண்டாமிடத்தை வேம்படி மகளிர் கல்லூரி, மூன்றாமிடத்தை கரம்பொன் சிறிய புஸ்பம் மகளிர் வித்தியாலயம் ஆகியன பெற்றுக் கொண்டன.

இப் போட்டிகள் நேற்றைய தினம் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# ஒய்வு பெற்றாலும் குறையாத மவுசு




அவுஸ்ரேலியாவின் பிரபல இணையத்தளம் ஒன்று நடாத்திய கருத்துக் கணிப்பில் இந்திய அணியின் முன்னாள் ஜாம்பவான் சச்சின் டெண்டுல்கர் அதிக வாக்குகளைப் பெற்றுள்ளார்.

அந்த இணையத்தளம் 2000ஆம் ஆண்டில் இருந்து டெஸ்ட் போட்டியில் கலக்கிக் கொண்டிருந்த வீரர்கள் 10 பேரை பட்டியலிட்டு இதில் யார் சிறந்த வீரர் என்று கருத்துக் கணிப்பு நடாத்தியது.

இதில் சச்சின் டெண்டுல்கர் 23 சதவீத வாக்குகளைப் பெற்று முதலிடம் பிடித்தார். கிரிக்கெட்டில் இருந்து அவர் ஓய்வு பெற்று விட்டாலும் அவரது மவுசு சற்றும் குறையவில்லை.

இவரைத் தொடர்ந்து சங்கக்காரா (14%) இரண்டாவது இடம் பிடித்தார். கில்கிறிஸ்ட் (13%), பொண்டிங் (11%), கலிஸ் (11%), ஷேன் வோர்ன் (10%), டிவில்லியர்ஸ் (10%), மெக்ராத் (5%), முரளிதரன் (3%), டேல் ஸ்டெய்ன் (1%) ஆகியோர் அடுத்தடுத்த இடங்களைப் பெற்றுள்ளனர்.

# பீபா தலைவர் பதவிக்கு மரடோனா போட்டி



சர்வதேச கால்பந்தாட்டச் சம்மேளனமான பீபாவின் தலைவர் பதவிக்கு ஆர்ஜன்ரீன அணியின் முன்னாள் கால்பந்தாட்ட நட்சத்திரம் தியாகோ மரடோனா போட்டியிடப் போவதாக தகவல் வெளியாகியுள்ளது.

உருகுவே ஊடகவியலாளரும் எழுத்தாளருமான விக்டர் ஹியூகோ மொராலிஸ் (Victor Hugo Morales) இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

சுகவீனமுன்ற தனது தந்தை தொடர்பாக அறிவதற்காக தொலைபேசி ஊடாக கலந்துரையாடிய போது பீபாவின் தலைவர் பதவிக்கு போட்டியிடுவது தொடர்பான தனது நோக்கத்தை மரடோனா வெளியிட்டதாக அவர் கூறியுள்ளார்.

இதனைப் பகிரங்கப்படுத்துவதற்கான அதிகாரத்தை மரடோனா தனக்கு வழங்கியதாகவும் தனது டுவிட்டர் சமூக வலைதளத்தில் மொராலஸ் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் பீபாவின் விதிமுறைகளுக்கு அமைய ஐந்து நாடுகளின் கால்பந்தாட்ட சம்மேளனங்களின் ஆதரவைப் பெறுவதில் மரடோனா சிரமங்களை எதிர நோக்கலாம் என தெரிவிக்கப் பட்டுள்ளது.

பீபாவின் அடுத்த தலைவரை தெரிவு செய்வதற்கான வாக்கெடுப்பு இவ்வாண்டு இறுதியில் அல்லது அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் நடத்தப்படலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

# சிம்பாப்வே தொடர் இரத்து

சிம்பாப்வே அணிக்கு எதிரான கிரிக்கட் தொடரை இந்திய கிரிக்கெட் சபை இரத்துச் செய்துள்ளது.

எதிர்வரும் ஜூலை மாதம் சிம்பாப்வேக்கு கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொள்ளவிருந்த இந்திய அணியினர் மூன்று ஒருநாள் போட்டி கள், இரண்டு இருபதுக்கு இருபது போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுவதற்கு தீர்மானிக்கப்பட்டது.

இந்நிலையில் பங்களாதேஷ் அணியுடனான ஒருநாள் போட்டித் தொடரில் இந்திய அணியினர் தோல்வியடைந்தமையால் வீரர்கள் மனதளவிலும், உடல்ரீதியிலும் சோர்வு கண்டிருப்பதாகவும் இதன் காரணமாக சிம்பாப்வே பயணத்தை இரத்துச் செய்ய இந்திய கிரிக்கெட் சபை தீர்மானித்திருப்பதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

எனினும் சிம்பாப்வே அணி விளையாடும் கிரிக்கெட் போட்டிகளை ஒளிபரப்பும் உரிமம் பெற்றிருக்கும் டென் ஸ்போட்ஸ் நிறுவனத்துக்கும் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கும் இடையில் ஏற்பட்டுள்ள பிரச்சினை காரணமாக இந்தப் போட்டி இரத்து செய்யப்பட்டுள்ளதாகவும் கருதப்படுகின்றது.

# மாகாண மட்ட கிரிக்கெட் போட்டியில் சண்டிலிப்பாய் இளைஞர் கழகம் சம்பியன்




USAID மற்றும் சேவா ங்கா நிறுவனம் இணைந்து டாத்திய மாகாண மட்ட கிரிக் கெட் போட்டியில் சண்டிலிப் ாய் பிரதேச இளைஞர் கழக ம்மேளனம் சம்பியனாகியது.

மீள்குடியேறிய மக்களின் ள் திறனைக் கட்டியெழுப்பல்" ன்னும் செயற்றிட்டத்தின் கீழ் சவாலங்கா அமைப்பினால் வடக் ல் பல செயற்றிட்டங்கள் இடம் பற்று வருகின்றன. இதன் ஒரு ங்கமாக இக் கிரிக்கெட் போட் கள் இடம்பெற்றன. இப்போட்டிகள் டந்த 21 ஆம் திகதி ஞாயிற் க்கிழமை மன்னார் காக்காய் ளம் மைதானத்தில் இடம் பற்றது. இப் போட்டிகளின் படி தலாவது அரையிறுதியில் யாழ்ப் ணம் தெல்லிப்பளை பிரதேச சயலக இளைஞர் கழக சம் ளன அணியை எதிர்கொண்ட ன்னார் காக்காய்குளம் அணி னர் வெற்றி பெற்று இறுதிக்குத் தகுதி பெற்றன்ர். இரண்டாவது ரையிறுதியில் முல்லைத்தீவு மல்லிகை அணியை எதிர கொண்ட சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளன அணியினர் இலகு வாக வெற்றி பெற்று இறுதிக்கு தகுதி பெற்றனர்.

இதன்படி இறுதிப் போட்டியில் சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளன அணியும் மன்னார காக்காய்குளம் அணியும் மோதின. நாணயற்சுழற்சியில் வென்ற மன் னார் காக்காய்குளம் அணியினர் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர மானித் தனர். போட்டியின ஆரம்பம் முதலே சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளன அணி போட்டியைக் கட்டுப்பாட் டில் வைத்திருந்தது. இதன்படி துடுப் பெடுத்தாடிய மன்னார் காக் காய்குளம் அணியினர் சண் டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளன அணியின் பந்து வீச் சுக்கு தாக்குப்பிடிக்க முடியாது தடுமாறினர்.


ஒரு கட்டத்தில் 3 ஓவர்களில் 4 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் 2 விக்கெட்டுக்களை இழந்து தடுமாறினர். பின் சுதாகரித்து ஆடிய மன்னார் காக்காய்குளம் அணியினர் நிர்ணயிக்கப்பட்ட 8 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 58 ஓட்டங்களைப் பெற்றனர். இதில அதிகபட்சமாக இம்ரான் 20 ஓட் டங்களைப் பெற்றுக் கொடுத் தார். பந்துவீச்சில் சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளன அணி சார்பில் பிருந்தூசன், பிர தீபன் ஆகியோர் தலா 2 விக் கெட்டுக்களையும், சிந்துஜன் மற் றும் ராம் தலா ஒவ்வொரு விக் கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 59 என்னும் வெற்றி இலக்கோடு துடுப்பாடிய சண்டி லிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளன அணி 5 விக் கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. இதில் பிரதீபன் 26 ஓட்டங்களையும், சுபதீபன் 23 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச் சில் மன்னார் காக்காய்குளம் அணி சார்பில் காரிஷ் 2 விக் கெட்டுக்களைக் கைப்பற்றினர். போட்டியின் சிறந்த பந்து வீச் சாளராக தெல்லிப்பளை பிரதேச செயலக இளைஞர் கழக சம்மே ளன அணியின் ரகுவரன் தெரி வாகியதுடன், சிறந்த துடுப்பாட்ட வீரனாக மன்னார் காக்காய் குளம் அணியின் இம்ரான் தெரிவானார்.

இதன் மூலம் USAID மற்றும் சேவா லங்கா நிறுவனம் இணைந்து நடாத்திய மாகாண மட்ட கிரிக் கெட் போட்டியில் சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மே ளனம் சம்பியனாகியது.

(48)

# வடமாகாண மரதன் ஓட்டம் வவுனியாவுக்கு தங்கப்பதக்கம்






வடமாகாண விளையாட்டுத் துறைத் திணைக்களம் அண்மை யில பரந்தனில் நடாத்திய மாவட டங்களுக்கு இடையிலா்ன மரதன் ஓட்டப் போட்டியில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த வீர, வீராங்கனைகள் முதலாம் இடத் தைப்பெற்று தங்கப் பதக்கங்களை சுவீகரித்தனர்.

பரந்தனில் ஆரம்பிக்கப்பட்டு விசுவமடுவரை சென்று மீண்டும் பரந்தனில் நிறைவுபெற்ற மரதன் ஓட்டப் போட்டியில் ஆண்கள் பிரி வில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த கே. நவநீதன் (2 ம. 54 நி. 03 செக்கன்கள் என்ற நேரப் பெறுதியுடன் முதலாம் இடத்தைப் பெற்றார்.

இவரது அணியைச் சேர்ந்த ஏ. பி. திசாநாயக்க (3ம. 02 நி. 38 செக்.) வெள்ளிப் பதக்கத் தையும் எம். கௌரிநாதன் (3 ம. 19 நி. 58 செக்.) வெண்கலப் பதக்கத்தையும் வென்றனர்.

பெண்களுக்கான மரதன் ஓட்ப போட்டியில் வவுனியா மாவட டத்தைச் சேர்ந்த கே. நேர்மதி (4 ம. 21 நி. 17 செக்.) தங்கப் பதக்கத்தை சுவீகரித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த ரீ. குயிலினி (4 ம. 36 நி. 20 செக்.) வெள்ளிப் பதக்கத்தை யும் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த எஸ். தர்சிகா (4 ம. 57 நி. 24 செக்.) வெண்கலப் பதக் கத்தையும் வென்றனர்.

மாகாண மட்ட மரதன் ஓட்டப போட்டியில் ஆண்கள் பிரிவில் முதல் பத்து இடங்களைப் பெறு பவர்களும் பெண்கள் பிரிவில் முதல் 6 இடங்களைப் பெறுப வர்களும் தேசிய விளையாட்டு விழா மரதன் ஓட்டப் போட்டியில் பங்குபற்றத் தகுதிபெறுவர்.

சில மாகாணங்களில் மரதன் ஓட்டப் போட்டிகள் இன்னும் நடாத் தப்படாததால் தேசிய மரதன ஓட்டப் போட்டி எப்போது நடைபெறும் என்பதை விளையாட்டுத்துறை அமைச்சின் விளையாட்டுத் திணைக்களம் அறிவிக்க முடியாத நிலையில் உள்ளது.




# மைலோ வர்ண விருது விழா வடக்கின் வீரர்கள் எவரும் பரிந்துரைக்கப்படவில்லை

கல்வி அமைச்சு, இலங்கை சாலைகள் விளையாட்டுத்துறை ரவை இணைந்து நெஸ்லே ங்கா லிமிட்டெட்டின் அனுசர ணயுடன் நடாத்தவுள்ள 23 ஆவது லோ பாடசாலைகள் வர்ண துக்கு வடமாகாணத்திலிருந்து தவொரு வீரரும் பரிந் ரைக்கப்படவில்லை.

இவ்வாறு இலங்கை பாடசா கள் விளையாட்டுத் துறைப் வைச் செயலாளர் உபாலி ரதுங்க தெரிவித்துள்ளார்.

சர்வதேச விளையாட்டுப் ட்டிகளில் கலந்துகொண்ட லது 20 இற்கும் மேற்பட்ட பாடசாலைகள் பங்குபற்றிய தேசிய போட்டிகளில் சாதித்த 17 வயதுக்கும் 20 வயதுக்கும் இடைப பட்ட மாணவர்கள் வர்ண விருதுகளைப் பெறத்தகுதி உடை யவர்கள் என இலங்கை பாடசா லைகள் விளையாட்டுத்துறைப் பேரவைத் தலைவர் பி. ஏ.அபே ரட்ன தெரிவித்தார்.

சர்வதேச போட்டிகளில் பங்கு பற்றாத விளையாட்டுத்துறை சங்கங்களின் சார்பில் தேசிய சாதனைகளை நிலைநாட்டிய வர்களுக்கும் வர்ண விருது வழங்கப்படும் எனவும் இதற்கு வயது எல்லை இல்லை எனவும் அவர் கூறினார்.

இந்த விருதுகளை விட அதிசிறந்த விளையாட்டு வீரர், அதி சிறந்த விளையாட்டு வீராங் கனை, முன்னேறிவரும் இளம் வீரர், முன்னேறிவரும் இளம் வீராங்கனை ஆகிய பிரதான விருதுகளும் வழங்கப்படவுள் ளன.

எனினும் பாடசாலைகளுக் கான 31 விளையாட்டுத்துறை சங்கங்கள் பரிந்துரைத்துள்ள பட்டியல்களில் வடபகுதியிலி ருந்து வர்ண விருதுக்கு எவரும் பரிந்துரைக்கப்படவில்லை.





கரணவாய் மணியகாரன்தோட்டம் வந்துவன் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா கடந்த சனிக்கிழமை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மைதானத்தில் நடை பெற்றது. வள்ளுவன் சனசமூக நிலையத்தின் தலைவர் மு.மகேந்திரன் தலைமையில் இடம்பெற்ற இந்த விளையாட்டு நிகழ்வில் பிரதம அதிதியாக வடமாகாணசபை உறுப்பினர் வே. சிவயோகம் கலந்துகொண்டார். நிகழ்வில் இறுதியாக தமது திறமைகளை வெளிப்படுத்திய சிறார்களிற்கு அதிதிகள் பரிசில் வழங்கிக் கௌரவித்தனர்.

(18)

# நாபா–4 நண்பனா தோழனா தலைவனா?

- ராம் -



எந்தச் சூழ்நிலையிலும் நிதானம் தவறாத ஒருவர் என்வரையில் நாபா மட்டுமே. கொழும்பு, மலையகம், திருமலை மட்டக்களப்பு, அம்பாறை என அவருடன் பயணித்த என்னால் அவர் வடக்கிற்குச் சென்றபோது போகமுடியவில்லை. ஏனென்றால் என் பெற்றோர், உறவினர் அனைவரும் வதியும் வடக்கில் என் தலைக் கறுப்பு தெரிந்தால் என்நிலை கவலைக்கிடம் என்பதால் நாபா என்னை வற்புறுத்தவில்லை. மீண்டும் ஒரு நீண்ட பிரிவு எமக்குள்.

கொழும்பில் தனியார் நிறுவனத்தில் வேலையில் சேர்ந்தேன். புதிய வாழ்க்கை நிறைய வசதிகள் என 83 கலவரம் வரை சென்றது. 83 கலவரம் முடிந்து சில வாரங்களின் பின்தான், யாழ்ப்பாணம் சென்றேன். அப்போது மானிப்பாயில் மீண்டும் வினோதம். என் எதிரே நாபா, பாலாவின் (கபூர்) சயிக்கிளில் வந்தார். என்னைக் கண்டதும் வாஞ்சையுடன் கரம்பற்றினார். அப்போது பாலா உங்களை நான் கொழும்பில் பல அகதிமுகாம்களில் தேடினேன் என்றார். நாபா சிங்கன் சுளிச்சிருப்பான் என கூறி, விட்டு விட்டுச் சிரித்தார். பின் இந்தியாவில் முகாம்கள் தொடங்கிவிட்டோம் பயிற்சிகள் தொடர்கின்றன தொடர்பில் இருங்கள் என கூறி விடை கொடுத்தார்.

1984இல் மத்திய கிழக்கு நாட்டில் வேலைசெய்யப் போகும் முன் நாபாவை சந்திக்க விரும்பி சென்னை சென்றேன். என்னை தான் தங்கி இருந்த ஞானத்தின் தொடர்மாடிக்கு கூட்டிச்சென்ற நாபாவிடம் என் பயணம் பற்றிக் கூற அவர் நோபுரப்ளம் என கூறி இரவு பஸ்ஸில் கும்பகோணம் அனுப்பிவைத்தார். சிவபுரம் முகாமில் திருமலை பீட்டர் (பசுக்காவை குத்தி எறியுமுன் வெடித்ததால் இறந்தவர்) என்பவர் எனக்கு தகவல் சேகரித்தல் பரிமாறல் இரகசிய கடிதம் வரைதல் என உளவாளிக்குத் தேவையான மேலும் பல அடிப்படை விடயங்கள் பற்றி விளக்கம் தந்தார்.

1981 இற்குப் பின் களுவாஞ்சிக்குடி ரஞ்சித்தை அங்கு சந்தித்தேன். திருமலை செஞ்சியை இரவு சென்றியில் பார்த்தேன். வசதியோடு வாழ்ந்து எமக்கு அன்னமிட்ட கையில் கடிகாரம் கூட இல்லாமல் காவலில் நின்றார். உப்புக்கு நன்றியாக என் கையில் இருந்த கடிகாரத்தை அவரிடம் கொடுத்தேன். அலுவலகப் பொறுப்பாளர் மட்டக்களப்பு வேலு இயக்கத்திற்காக கும்பகோணம் முழுவதும் கடன் பட்டிருந்தார். கந்தளாயில் சொந்த உழவுயந்திரம் வைத்து வயல் செய்த சின்னவன் (இவரின் உந்துதலில் ஸ்டாலின் அண்ணாவின் ஆலோசனையில் உருவானது தான் எஸ் எஸ் எனும் எறிகணை மோட்டர்) தன் சிறு குடிலில் எனக்கு உணவளித்தார். அதே போல் யாழ்ப்பாணத்தில் பி.எம்.சி க்கு அருகாமையில் இருந்த ரியூட்டரியில் பிரபல பொருளியல் ஆசானாக பொருளாதார வசதியோடு இருந்த வரதன் குடும்ப நிலைமை கவலையளித்தது. இவர்கள் எல்லோரும் தம்மை இந்தளவிற்கு வருத்திக் கொள்ள முன்வந்ததற்கு நாபாவின் தோழமையே காரணம்.

ஒரு வாரத்தின் பின் நாபா கும்பகோணம் வந்தார். அவருடன் காரில் நானும் குண்சியும் ஓட்டி கணேசுடன் இரவு 10 மணிக்கு சென்னை பயணித்தோம். நானும் குண்சியும் தூங்கினோம். நாபா தூங்கவில்லை. கணேஸ் கண் அயர்ந்தால் நாபா வண்டியை நிறுத்தச் சொல்லி அவரை தேநீர் அருந்திவரச் சொல்வார். எம்மை தூங்கவிட்டு அவர் பயணம் முழுவதும் விழித்திருப்பார்.

ஒருநாள் என்னை வடபழனி வீட்டுக்கு கூட்டிச்சென்றார். வசதியான வீடு. (நடிகை நளினியுடையது) அங்கு இருந்தவர்களும் போராளிகள் தான். நாம் உள்ளே போனதும் நெடிதுயர்ந்த ஒருவரும் கட்டுமஸ்தான ஒருவரும் நாபாவை வரவேற்றனர். நெடிதுயர்ந்தவர் டெலோ சிறி சபாரட்ணம் கட்டுமஸ்தானவர் செல்வம் அடைக்கலநாதன். நாபா தான் பாவிக்கும் கார் சிறி தந்தது என கூறினார். சிறி நாபாவின் தோளில் செல்லமாக தட்டினார். (பின்னாளில் சிறியை காப்பற்ற முடியாத அளவிற்கு நாபா சூழ்நிலை கைதியானது அவர் மனதில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியதை என்னுடன் திருமலையில் தங்கியிருந்த போது பகிர்ந்துகொண்டார்.)

2 வாரங்கள் பல பயணங்கள் பலரின் சந்திப்பு என முடிவடைய தோழர் நாபாவைப் பிரிந்து கொழும்பு திரும்பினேன்.

அங்கு எனது மத்திய கிழக்கு நாட்டு வேலைக்கும் நான் கொடுத்த பணத்திற்கும் ஏஜன்ட் மங்களம் பாடியிருந்தார். நல்லவேளை நான் பார்த்த தனியார் நிறுவன வேலை இருந்ததால் தப்பித்தேன். என் வேலையோடு நாபா அறியத்தருவதையும் செய்தேன். யாழ்ப்பாணத்தில் ஜேம்ஸ் என்பவரை சந்திக்கச் சொன்னார். யாழ். பல்கலைக்கழகம் சென்றபோது வெள்ளை சேட் வேட்டி அணிந்த தமிழ்ப் பண்டிதர் போல இருந்த ஒருவர் ஜேம்ஸ் என தன்னை அறிமுகப்படுத்தினார். கொழும்பில் ஏற்படுத்தவேண்டிய தொடர்புகளை விபரித்தார்.

(தொடரும்)

# என்ன விலை குறள்?

அப்போது ஸைன் போர்ட்கள் (விளம்பரப் பலகைகள்) எழுதவும் கற்றுக் கொண்டு இருந்ததால் தெருத்தெருவாய் அலைந்து ஆர்டர் பிடித்து வருவேன். அப்படி அலையும்போது கடை முகப்புகளில் உள்ள ஸைன் போர்ட்களையெல்லாம் ஆர்வத்தோடு நுணுக்கமாய்ப் பார்த்துக் கொள்வேன். பல வர்ணங்களில் பல வடிவங்களில் அமைக்கப் பட்டிருந்த அந்த விளம்பர எழுத்துக்கள் என்னைப் பார்த்துக் கண் சிமிட்டி காதல் புரியும். நாமும் ஏன் இதைப்போல எழுதக் கூடாது! என்று ஒரு வேகம் உண்டாகும்.

சென்னையில் ஒரு மொட்டை மாடியை வாடகைக்குப் பிடித்துக்கொண்டு என் தொழிலை வியாபார முறையில் விரிவுபடுத்தினேன். அந்த மாடிக்கு மாதம் 5 ரூபாயோ என்னவோ வாடகை. விடிய விடியக் கண் விழித்து எழுதிக் கொடுத்துப் பணம் வாங்கிச் சினிமா பார்த்த நாள்களை மறக்க முடியாது.

விளம்பரத் தட்டி எழுதும் தொழிலில் கொஞ்சம் பணம் சேர்ந்ததும் அந்தப் பணத்தை வைத்துக் கொண்டு "நாடோடி" என்று ஒரு வாரப் பத்திரிகை தொடங்கினேன். விலை காலணாதான். 500 பிரதிகள் அடிக்க பேப்பர் விலை, அச்சுக் கூலி எல்லாமாகச் சேர்ந்து ஐந்து ரூபாய் செலவாகும். பிரதிகள் அச்சானதும் நூறு நூறாக எடுத்துக் கொண்டு போய் முக்கியமான பஸ் நிலையங்களில் "நாடோடி, நாடோடி" என்று நானே கூவி விற்பேன். காலணா என்பதால் ஒரு மாலைப் பொழுதுக்குள் நூறு பிரதிகளும் காலியாகி விடும்.

ஒருநாள் திருவல்லிக்கேணி பஸ் ஸ்டாண்டில் வழக்கம்போல "நாடோடி, நாடோடி" என்று குரல் கொடுத்துக்கொண்டே என் பத்திரிகையை விற்றுக் கொண்டிருந்தபோது பஸ்ஸுக்குள் இருந்து ஒருவர் கையை நீட்டி "ஒரு நாடோடி கொடப்பா" என்று வாங்கிக் கொண்டார். பணம் வாங்கும்போதுதான் அவர் என் தந்தை என்று தெரிந்தது! என் தாயாரும் அவர் அருகில் உட்கார்ந்து இருந்தார். நான் ஏதோ பத்திரிகை நடத்துகிறேன் என்பது மட்டுமே அவர்களுக்குத் தெரியும். ஆனால் அதைப் பஸ் ஸ்டாண்டில் கூவி விற்பதும் நானேதான் என்பதை அறிந்தபோது அவர்கள் என்ன நினைத்தார்களோ, தெரியவில்லை, அங்கிருந்து அவசரமாக நழுவி அடுத்த பஸ் பக்கம் மறைந்து விட்டேன்!

ЖЖЖ ЖЖЖ ЖЖЖ

நான் ஆனந்தவிகடனில் சேர்ந்தபோது அங்கே நிலவி வந்த ஒரு வழக்கம், விகடனில் கதையோ, கட்டுரையோ எது பிரசுரமானாலும் அதற்கான சன்மானத்தை நிர்ணயிக்க அவற்றின் நீளத்தை "ஸ்கேல்" வைத்து அளந்து பார்ப்பார்கள். அங்குலத்துக்கு இவ்வளவு என்று சன்மானத் தொகை நிர்ணயிக்கப்பட்டு, ஒரு கதை இருபது அங்குல நீளத்துக்குப் பிரசுரமாகி இருந்தால் அதற்கு நாற்பது ரூபாய் என்று பணம் அனுப்பிக் கொண்டிருப்பார்கள். தேவன் காலத்தில் தொடங்கிய இந்த வழக்கம் தேவன் மறைந்த பிறகும் தொடர்ந்து கொண்டிருந்தது. இந்த முறை சரியென்று எனக்குத் தோன்றவில்லை.



ஒரு விவாதத்தின்போது வாசன் அவர்களுடைய மகன் பாலசுப்ரமணியத்திடம், "இது சரியான முறையாகத் தோன்றவில்லையே! ஓர் எழுத்தாளனின் படைப்பு எவ்வளவு சன்மானம் பெற வேண்டும் என்பதை அந்த எழுத்தாளனின் எழுத்தின் தரத்தை அடிப்படையாக வைத்து நிர்ணயிக்க வேண்டுமே தவிர நீளத்தை வைத்து அல்ல" என்றேன்.

அதற்கு அவர், "இதில் ஒரு நன்மை இருப்பதை நீங்கள் புரிந்து கொள்ளவில்லை என்று நினைக்கிறேன். ஓர் அங்குலத்துக்கு இவ்வளவு என்று நிர்ணயம் செய்து விடும்போது வேண்டியவர், வேண்டாதவர் என்ற பிரச்சனையெல்லாம் வராது. யார் எழுத்தையும் சமநோக்குடன் பார்ப்பதற்கு வசதியாகவும், ஏற்றத்தாழ்வு வித்தியாசத்துக்கு இடமில்லாமலும் போய்விடும்" என்றார். நான் அதற்கு மேல் அவரிடம் எதுவும் விவாதிக்கவில்லை. சக உதவி ஆசிரியர்களிடம் மட்டும் வேடிக்கையாகச் சொல்லிக் கொண்டிருப்பேன்.

"ஓஹோ... அப்படியென்றால் திருவள்ளுவர் இப்போது உயிரோடு இருந்து அவர் விகடனில் குறள் எழுதினால் குறளின் நீளத்தை அளந்து அதற்குத் தகுந்தபடி அவருக்கு ஒரு ரூபாய் அல்லது இரண்டு ரூபாய்தான் சன்மானம் கொடுப்போம்! இல்லையா?"

இப்படி நான் சொன்னது பாலு அவர்கள் காதுக்கு எட்டியிருக்க வேண்டும். மறுநாளே என்னை அவர் அழைத்து, "நான் யோசித்துப் பார்த்தேன். நீங்கள் சொல்வது ரொம்ப சரி. அளந்து கொடுக்கும் முறை நியாயமில்லைத்தான். தரத்தைப் புரிந்து கொடுக்கும் முறையையே நாம் இங்கு பின்பற்றுவோம். அடுத்த இதழில் "வணக்கம்" என்ற தலைப்பில், இனிமேல் கட்டுரைகளை ஸ்கேல் வைத்து அளந்து சன்மானம் தர மாட்டோம். இலக்கியத்தின் தரத்தை அதன் நீளத்தைக் கொண்டு மதிப்பிடப் போவதில்லை. தரத்துக்கு ஏற்றபடியே படைப்புகளுக்கு சன்மானம் அமையும்" என்று விளக்கமாக ஒரு அறிவிப்பு எழுதி விடுங்கள்" என்றார். நானும் அவ்வாறே எழுதி அவரிடம் கொடுத்தேன்.

பாலு அவர்கள் அதைப் படித்து விட்டுச் சில திருத்தங்களுடன் வெளியிட்டார். அந்த வாரத்தோடு ஸ்கேல் வைத்து அளக்கும் முறை கைவிடப்பட்டது.

**('பழைய கணக்கு' கட்டுரைத் தொகுப்பில் 'சாவி)**

# புதிய உலக ஒழுங்கு: புலம்பெயர்ந்த இரகசிய பேச்சுவார்த்தை

- வானவில்-54 இதழிலிருந்து.

இம்மாதம் 8 ஆம் திகதி இலங்கை வெளிவிவகார அமைச்சராலும் மற்றும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினாலும் உலகத்தமிழர் பேரவையாலும் வெளியிடப்பட்ட பத்திரிகை அறிக்கையொன்றின் வாயிலாக இலண்டனில் இலங்கை அரசு, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு, உலகத்தமிழர் பேரவையைச் சார்ந்த பிரதி நிதிகளும் (உலகத்தமிழர் பேரவையென அறிக்கையில் சொல்லப்பட்டாலும், பிரித்தானியா தமிழர் பேரவையைச் சார்ந்தவர்களே பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டனர்) மற்றும் தென்னாபிரிக்கா, சுவிட்சர்லாந்து, நோர்வே நாட்டு பிரதிநிதிகளும் இரகசிய (ஏன் இந்த இரகசியம்?..) பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளனர் எனத் தெரிய வருகின்றது.



இலங்கையில் நல்லிணக்கம் ஒன்றினை ஏற்படுத்தி, அரசியல் தீர்வொன்றினை எட்டுவதற்காக இலங்கை அரசு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினுடனோ அல்லது தென்னாபிரிக்கா, சுவிட்சர்லாந்து, நோர்வே நாட்டு பிரதிநிதிகளுடனோ பேச்சுவார்த்தையில் ஈடுபடுவது என்பது புருவத்தை உயர்த்தும் விடயமல்ல. ஆனால் இவர்கள் அனைவருடனுமான பேச்சுவார்த்தையில், இலங்கையின் முன்னைய அரசினால் அறிவிக்கப்பட்ட தடைசெய்யப்பட்ட பட்டியலிலுள்ள புலம்பெயர் தமிழர் அமைப்புகளில் ஒன்றான உலகத்தமிழர் பேரவையும் இணைந்துள்ளது என்பதுபற்றி ஆழமாக சிந்திக்க வேண்டியுள்ளது.

இந்த அமைப்போ அல்லது வேறு எந்த புலம் பெயர் அமைப்போ இலங்கை அரசியலில் தீர்மானகர மான பங்கொன்றினை வகிக்கவேண்டிய கட்டாயமான புறச்சூழலொன்று உருவாகியிருப்பது மாதிரியும் தெரியவில்லை. அவ்வாறான சூழ்நிலையில் ஒரு புலம்பெயர் அமைப்புடனான பேச்சுவார்த்தை என்பது அந்த அமைப்புக்கு "தலைப்பா" கட்டும் காரியமே. அத்துடன் இவ்வாறானதொரு பேச்சுவார்த்தைக்கு தூண்டிய சக்திகளின் பின்னணி பற்றியும் இதனால் எதிர்காலத்தில் அரசியலில் ஏற்படுத்தப்போகும் பாரிய விளைவுகளையும் ஆராயமலிருக்க முடியாது.

இப்பேச்சுவார்த்தை இலண்டனில் நடைபெற்றுள்ள தாலும், மேற்கத்தைய சக்திகளின் நிகழ்ச்சி நிரலின் (புதிய உலக ஒழுங்கின்) கீழேயே இப்பேச்சுவார்த்தை நிகழ்ந்துள்ளதாக உறுதிபடக் கூறலாம். இலங்கையின் அரசியல் வரலாற்றில் முதற்தடவையாக புலம்பெயர் தமிழ்சார் அமைப்பொன்றுக்கு இலங்கையின் அரசிய லில் மூக்கை நுழைப்பதற்கு பகிரங்க அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இந்த அங்கீகாரத்திற்கான அடிப்படை, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் போலவே இந்த அமைப்பும் மேற்கத்தைய சக்திகளின் சார்பானது என்பதே.

புலிகளின் ஆதரவாளர்கள் புலம்பெயர் நாடு களில் பல பிரிவுகள், பிரிவுகளுக்குள் உட்பிரிவுகள் என சிதைந்து போயுள்ளனர். இந்த பிரிவுகளில் பெரும்பாலானவை இலங்கை அரசு மீது எப்போதும் போலவே பகையுணர்வுட னேயே இருக்கிறார்கள். அதனால் இந்த உடைந்து சின்னாபின்னமாய் பலவீனமாக போயுள்ள பிரிவுகளை தங்கள் வலைக்குள் வீழ்த்திய ஏகாதிபத்திய சக்திகள், இலங்கை அரச-ினை தம் பிடிக்குள் வைத்திருப்பதற்காக இவர்களை துரும்புச்சீட்டாக பயன்படுத்துகின்றன.


உலகத்தமிழர் பேரவை என்ற அமைப்பு புலிகள் முற்றுமுழுதாக முள்ளிவாய்க்காலில் தோற்கடிக்கப்பட்ட பின்னர், ஏறத்தாழ 6 ஆண்டுகளின் முன்பு ஸ்தாபிக் கப்பட்டது. பிரித்தானியா தமிழர் பேரவை, உலகத் தமிழர் பேரவையை விடவும் சில வருடங்கள் பழைமையானது. இவ்விரு அமைப்புகளின் தலை மைப்பீடத்திலுள்ள அனைவருமே புலிகளின் நிகழ்ச்சி நிரலினை, புலிகளின் முற்றுமுழுதான அழிவிற்குப் பின்னர், இலங்கைக்கு வெளியிலிருந்து இயங்க வைப்பது போன்ற தோற்றத்தை ஏற்படுத்தி தமது இருப்பினை, குறிப்பாக பணவருவாயினை, பேணி வருகின்றனர். இதற்காக பல ஊர்வலங்களை. புலிப்பதாகைகள் தாங்கி ஐரோப்பிய நாடுகளில் நடாத்தியுள்ளனர்.

இலங்கையில் இனங்களுக்கிடையே நீடித்து நிலைத்து நிற்கக்கூடிய நல்லிணக்கம் ஒன்றினை ஏற்படுத்துவதற்கும், பொருளாதார காரணிகளுக்காகவும் புலம்பெயர்ந்த தமிழ் மக்களின் ஆதரவு அவசியம் என்பது நிச்சயமாக ஓரளவு ஏற்றுக்கொள்ளக்கூடியதே. இலங்கைக்கு எந்த வகையிலாவது உதவ வேண்டு மென்று நல்லெண்ணங்கொண்டவர்கள் என்றும் இலை மறை காயாக உதவிய வண்ணமே இருக்கிறார்கள். இந்த சக்திகளை மென்மேலும் ஊக்குவிப்பதற்கு இன்னமும் இலங்கையில் எந்த பொறிமுறையும் உருவாக்கப்படவில்லை. இலங்கை அரசாங்கம் கவனிக்க வேண்டியது அதைத்தான்.

வரும் விண்டோஸ் ஒப்பரேட்டிங் சிஸ்டம் 10இல், அனைவருக்கும் பிரியமான சொலிடயர் விளையாட்டு தரப்பட உள்ளது. 20 ஆண்டுகளுக்கும் மேலாக, விண்டோஸ் ஒப்பரேட்டிங் சிஸ்டத்தில் ஒருங்கிணைத் துத் தரப்பட்ட விளையாட்டாக சொலிடயர். இருந்து வந்தது. விளையாடுவதில் தரப்பட்ட அதன் எளிய விதிகள் பலரை விளையாடத் தூண்டியது. உலகெங் கும் இந்த விளையாட்டிற்கு ரசிகர்கள் இருந்தனர். பிரபலமாகவும், அதிகம் விளையாடப்படும் விளையாட்டாக இது இருந்து வந்தது.

ஹார்ட்ஸ், மைன்ஸ்வீப்பர் ஆகிய விளையாட்டு களுடன் சொலிடயர் விளையாட்டும் இணைத்துத் தரப்பட்டு வந்தது. ஆனால், விண்டோஸ் 8 சிஸ்டத்தில் இருந்து, சொலிடயர் நீக்கப்பட்டது. விண்டோஸ் ஸ்டோரில் சொலிடயர் கேமின் புதிய நவீன பதிப்பு கிடைத்து வருகிறது. இருப்பினும், இதனை விளையாட வேண்டும் என்றால், ஸ்டோரில் இதனைத் தேடிப் பார்த்து விளையாட வேண்டும்.

மைக்ரோசொப்ட் தற்போது இதனை மீண்டும்




## மீண்டும் சொலிடயர் விளையாட்டு!

விண்டோஸ் 10 சிஸ்டத்துடன் தர முடிவு செய்துள் ளது. விண்டோஸ் 8 பதிப்பில் இருந்து நீக்கப்பட்ட அதே சொலிடயர் இணைக்கப்படும். தற்போது இதனைத் தேடி விளையாட வேண்டியதில்லை. சிஸ்டத்துடன் இணைக்கப்பட்டே கிடைக்கிறது. ஆனால், மைன் ஸ்வீப்பர் மற்றும் ஹார்ட்ஸ் ஆகிய விளையாட்டுகள் தரப்படவில்லை. விண்டோஸ் ஸ்டோரில் தேடிப் பார்த்துத்தான் விளையாட வேண்டியதிருக்கும்.

விண்டோஸ் 10இல் தரப்பட இருக்கும் சொலிடயர் Solitaire Suite என்ற பெயரில் வழங்கப்படும். இதில் solitaire (Klondike), Spider, FreeCell, Pyramid, and Tripeaks ஆகிய பல்வேறு சொலிடயர் விளையாட்டுகள் இணைப்பாகக் கிடைக்கும். விண் டோஸ் 10 சிஸ்டத்தின் "all apps" என்ற பிரிவில் இது தரப்பட்டிருக்கும்.

# லண்டன் சந்திப்பில் எழும் கேள்விகள்

- சாந்தி சச்சிதானந்தம் கட்டுரையிலிருந்து




கடந்த வாரம் லண்டனில் நடந்த சந்திப்பில் இலங்கையிலிருந்து. நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனும், உலகத் தமிழர் பேரவை பிரதிநிதி சுரேன் சுரேந்திரனும், நோர்வே தமிழர் பேரவை பிரதிநிதி ரமணனும் மற்றும் எரிக் சொல்ஹெய்ம், எமது வெளி விவகார அமைச்சர் மங்கள சமரவீர போன்றவர்களும் கலந்து கொண்டிருக் கின்றனர். இதன் ஏற்பாட்டாளர்கள் தென்னாபிரிக்க அரசு என்றும், நிதிக்கொடை வழங்குனர்கள் சுவிஸ் அரசு என்றும் அறிகின்றோம். ஏற்பாட்டாளர்கள் இச்சந்திப்பினை இரகசியமாகத்தான் வைக்க விரும்பினர் போலும். ஆனால், இணையத்தளங்கள் எல்லாம் இது பெரிய சதித்திட்டம் போன்று செய்திகள் வெளிவர ஆரம்பிக்கவே, அதனை மறுதலித்து விளக்குவதில் ஓரளவாவது பகிரங்கப்படுத்த வேண்டியதாயிற்று.

இச்சந்திப்பினைக் குறித்து சுமந்திரன் தனியேயும், சுரேந்திரன், ரமணன் ஆகியோருடன் கூடியும் அங்குள்ள இரு தொலைக்காட்சிகளுக்கு பேட்டிகள் வழங்கியிருந்தார். அவர்கள் அதனை "இலங்கையில் வாழும் தமிழ் மக்களின் உடனடித் தேவைகளை எவ்வாறு தீர்ப்பதென்பது பற்றிய கலந்துரையாடல்" என்றே விபரித்தனர். இதனை எரிக் சொல்ஹெய்ம் .போன்றவர்களுடன் இலங்கையில் நடத்தியிருந்தால் சிங்கள பௌத்தவாத ராஜபக்ஷ தரப்பினரிடமிருந்து பிரசார அடி விழுந்திருக்குமென்பதனால் இது ஒரு வெளிநாட்டில் ஏற்பாடு செய்யப்பட்டதாகத் தெரிவித்தனர். அத்துடன், இது ஆரம்ப கட்டமென் பதனால் பொதுவாகவே இதனை மூடிய கதவுகளுக்குப் பின்னால் இரகசியமாகச் செய்வதற்குத் தீர்மானம் எடுக்கப்பட்டது என்றனர்.

எமது மக்களின் உடனடித் தேவை என்று பார்க்கும்போது இப்பொழுது விடுவிக்கப்பட்ட காணிகளில் மக்கள் மீளக் குடியமர்த்தப்படும்போது அவர்களுக்குத் தேவையான வீட்டுத் திட்டங்களும் ஏனைய உட்கட்டுமானத் திட்டங்களும் பற்றியும், அத்துடன் அரசியல் கைதிகள் விடுவிக்கப்படுவது பற்றியும் உரையாடியதாகக் கூறினர். இவற்றிற்குத் தேவை யான நிதிக்ளைப் பெறுவதும், அதற்கான அழுத்தங்களை அரசின் மீது பிரயோகிப்பதும் எவ்வாறு என ஆராயும் பொருட்டே புலம்பெயர் தமிழர்களும் வெளிநாட்டு அரசுகளின் பிரதிநிதி களும் கலந்துகொண்டதாக விளக்கம் அளிக்கப்பட்டது.

எல்லாம் சரி. ஆனால், மக்களின் உடனடித் தேவைகள் பற்றிய ஆராய்ச்சிதானென்றால் அது இரகசிய மாக வைக்கப்பட்ட நோக்கம் என்னவோ? மக்களுக்கு வீடு வேண்டும், வாழ்வாதாரத் திட்டம் வேண்டும் என்று பகிரங்கமாகக் கூறுவதில் என்ன சிக்கல் இருக்கக் கூடும்? அரசியல் கைதிகளை விடுவிக்க வேண்டும் என்று சொன்னால் அதனை இரகசியமாக வைத்திருக்க வேண்டிய என்ன அரசியல் சூட்சுமம் அதில் இருக்கலாம்? இங்கு தொடங்கி அவர்களுடைய விளக்கங்களெல்லாம் சிறிது சறுக்கத்தான் ஆரம்பித்தன.


குறித்த பங்குபற்றுனர்களின் தொலைக்காட்சிப் பேட்டிகளும் defensive ஆக இருந்தன. "எல்லோருக்கும் மைத்திரிபாலவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் என்ன இருக்கின்றது என்பதுதான் தெரியும். ஆனால், என்ன அதிலிருந்து நீக்கப்பட்டதென்பது தெரியாது. ஒற்றையாட்சி என்கின்ற பதத்தை நீக்குவதற்கான காரணகர்த்தாவாக நான்தான் இருந்தேன்" என்றார் சுமந்திரன். ஆனால், ஜாதிக ஹெல உறுமயவுடன் ஜனாதிபதி மேற்கொண்ட ஒப்பந்தம் ஒற்றையாட்சியை பயங்கரவா தத்திலிருந்து காப்பாற்றும் ஒப்பந்தம் என்றுதான் நாம் அறிந்திருக்கின் றோம். மேலும், பிரதம மந்திரியாக ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன் றத்தில் தான் ஆற்றிய முதல் உரையில் ஒற்றையாட்சியை வலியுறுத்திய போது சுமந்திரன் மைத்திரிபாலவின் தேர்தல் விஞ்ஞாபனத்தைச் சுட்டிக் காட்டி அதனைத் திருத்தவில்லையே. அல்லது அதனையும் இரகசியமாகத்தான் செய்தாரோ?

"நான் தமிழ் மக்கள் சார்பாக பேசிய அளவு வழக்குகளில் ஒரு 10 வீதந்தானும் வேறு சட்டத்தரணிகள் பேசியிருக்க மாட்டார்கள்" என்றும் மார் தட்டினார். காணிகள் தொடர்பில் சுமந்திரன் அதிகளவு வழக்குகள் தாக்கல் செய்திருக்கலாம். ஆனால், பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் பாதிக்கப்பட்ட ஆயிரமாயிரம் மக்களை விடுவிப்பதற்கு எமது ஏனைய சட்டத்தரணிகள் ஆற்றிய பங்கினையும் உயிர்த் தியாகத்தினையும் இங்கு ஏனோ மறந்து போய்விட்டார்.

மேலும், சமஷ்டி ஆட்சிதான் எமது தீர்வு என்கின்றார். சமஷ்டி என்னும் பதத் துக்குள்ளேயே பத்தாயிரம் வேறுபட்ட ஆட்சி முறைகள் இருக்கின்றன. இதில் எந்த ஆட்சி முறையை நாம் எடுத்துக் கொள்ளப் போகின்றோம்? சர்வதேச சமூகம், இந்தியா உட்பட, இந்த பத்தா யிரம் விதமான சமஷ்டி முறையில் எது குறித்து எவ்வளவு தூரம் எங்களுடன் பயணிக்கத் தயாராக இருக்கின்றன? இவற்றை தமிழ் மக்களுக்கு கூட்டமைப் பினர் தெரிவிக்க வேண்டுமா வேண்டாமா?

# குடா நாட்டில் குடிநீர் பிரச்சினையை தீர்க்க இரணைமடு நீர் கொண்டு வரப்பட வேண்டும்

## அமைச்சர் ஹக்கீம் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

முதலமைச்சரும், தமிழ் அரசியல் தலைவர்களும் இணைந்து இரணைமடு நீர் விநியோகத்தில் ஏற்பட்டுள்ள சர்ச்சையை தீர்த்துத் தந்தால் எதிர்காலத்தில் இரணைமடுவிலிருந்து யாழ்ப்பாணத்திற்கான குடிநீர் விநியோகம் சாத்தியமாகும் என நகர அபிவிருத்தி மற்றும் நீர் வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சர் ரவூப் ஹக்கீம் யாழ்.நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை கட்டடத்தை திறந்து வைத்து உரையாற்றுகையில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.நிலத்தடி நீர் மாசடைந்தமையால் இரணைமடுவிலிருந்து ஆசியவங்கியின் நிதியுதவியில் யாழ்ப்பாணத்திற்கான குடிநீர் விநியோகம் மேற்கொள்ள எடுத்த திட்டமும் தோல்வியுற்ற நிலையில் கடல்நீரை நன்னீராக்கும் புதிய திட்டத்தை அதிக செலவில் மேற்கொள்ளவேண்டிய நிலையில் உள்ளது. 80 ஆயிரம் ஏக்கர் கொள்ளளவைக் கொண்ட குளத்தை மேலும் 40 ஆயிரம் ஏக்கர் நீர்க்கொள்ளளவுடைய தாக்கி அதன் மூலம் எதிர்காலத்தில் யாழ்ப்பாணத்திற்கான குடிநீர் விநியோகத்தை மேற்கொள்ள முடியும். அதற்கு விவசாயிகளிடத்திலும் தற்போது ஏற்பட்டுள்ள சர்ச்சையை தீர்ப்பதன் மூலம் அதாவது அதன் உண்மை நிலையையும், பாதிப்பு அற்றது என்பதையும் புரியவைத்து மீளவும் யாழ்ப்பாண குடிநீர் விநியோகத்தை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கலாம். இதற்கு முதலமைச்சரும், இங்குள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களும் தான் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேணடும்.

ஆனாலும் காலம் தாழ்த்த முடியாத காரணத்தால் தற்போது நீர்க்கொள்ளளவை அதிகரிக்கும் வேலைத்திட்டத்தை நாம் இரணைமடுவில் ஆரம்பித்துள்ளளோம் என அவர் மேலும் தெரித்தார். (இ)

## பரிசளிப்பு விழா

யா/உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று பாடசாலை அதிபர் தி.தேவதயாளன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக உயர் கலைக்கல்லூரியின் இயக்குநர் திருமதி. அருள்நங்கை சண்முகநாதன் கலந்து கொள்ளவுள்ளார். அத்துடன் சிறப்புவிருந்தினராக மாகாண உதவிக்கல்விப் பணிப்பாளர் ரி.தர்மலிங்கம் மற்றும் உடுவில் கோட்டக்கல்விப் பணிப்பாளர் எஸ்.சண்முககுலகுமாரனும் கலந்து கொள்ளவுள்ளனர்.

# பின்தங்கிய மாணவர்களுக்கு மாலை நேரக்கல்வி ஆரம்பம்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி கல்வி வளர்ச்சி அறக்கட்டளையின் பங்களிப்பில், (IMHO) நிதியனுசரணையில் மாணவர் சமூகநலன்புரி அமைப்பின் அமுலாக்கத்தில் திரு கோணமலை சம்பூர் பகுதியில்இருந்து இடம்பெயர்ந்து கிளிவெட்டி, பட்டித்திடல் ஆகிய கிராமங்களில் முகாம்களில் வாழும் பின்தங் கிய மாணவர்களின் கல்வி வளர்ச்சியினை மேம்படுத்தும் பொருட்டு மாலை நேரக்கல்வி நிலையங்கள் கடந்த 19 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. (90)

# மோட்டார் சைக்கிள் விபத்து; குடும்பஸ்தர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஆட்டோவுடன் மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானதில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

வீரபத்திரர் கோவிலடி கதிரிப்பாய் அச்சுவேலியைச் சேர்ந்த மயிலு பரஞ்சோதி (வயது 61) என்ற 5 பிள்ளைகளின் தந்தையே படுகாயமடைந்துள்ளார்.

நயினாதீவு அம்மன் கோவிலுக்கு மோட்டார் சைக்கிளில் சென்றபோதே நித்திரை மயக்கத்தில் வீதியில் நிறுத்தப்பட்டிருந்த ஆட்டோவுடன் மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானதாகவும் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்திற்கருகில் இச்சம்பவம் இடம்பெற்றதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (இ)

# சோதனைச் சாவடி அமைக்குமாறு பொது மக்கள் கோரிக்கை

(வரணி)

கொடிகாமம் பருத்தித்துறை பிரதான வீதியால் செல்லும் முள்ளிப்பகுதியில் நிரந்தர பொலிஸ் சோதனைச்சாவடி ஒன்று அமைக்கப்படவேண்டுமென பயணிகள் கருத்து தெரிவிக்கின்றனர்.

இப்பகுதியூடாக சட்டவிரோத மண்கடத்தல், மரக்கடத்தல், கால்நடைகள் கடத்தப்படு வதாகவும், மாலை 6 மணி ஆனதும் துவிச்சக்கரவண்டி, மோட்டார் சைக்கிள் பயணிகள் தமது பயணங்களை தவிர்த்து வருவதாகவும் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை கடந்த வெள்ளிகிழமை பி.ப 3 மணியளவில் தென்மராட்சியில் இருந்து வடமராட்சி நோக்கி துவிச்சக்கர வண்டியில் பயணித்துக்கொண்டிருந்த ஊடகவியலாளரை முளளிப்பகுதியில் மது போதையில் நின்ற இளைஞர் கோஷ்டி ஒன்று தேவையற்ற விதத்தில் தாக்க முற்பட்ட வேளை ஊடகவியலாளர் நிலமையை சுதாகரித்துக் கொண்டு ஒருவிதம் வடமராட்சிக்குள் நுழைந்துள்ளார்.

இத்தகைய சம்பவங்கள் இனிமேலும் தொடராமல் இருக்க முள்ளிப் பகுதியில் முக்கியமாக ஒரு பொலிஸ் சோதனைச்சாவடி அமைத்து சகலரும் சுதந்திரமாக செல்ல வாய்ப்பு ஏற்படுத்த சம் பந்தப்பட்ட தரப்பினர் காலம் தாழ்த்தாது நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.(150)

# இடப்பக்க இதயம் வலப்பக்கத்தில் மருத்துவப் பரிசோதனையில் கண்டுபிடிப்பு

## வைத்தியர்கள் ஆச்சரியம்

வழமையாக ஆண்களுக்கு மார்பின் இடப்பக்கமாக இருக்கவேண்டிய இதயம் வலப்பக்கத்தில் இருப்பது மருத்துவ பரிசோதனை மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

கரணவாய் அண்ணா சிலையை வசிப்பிடமாகக் கொண்ட மாணிக்கம் சிவராஜா (வயது 55) என்பவருக்கே இதயம் வழமைக்கு மாறாக் வலது பக்கத்தில் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

தனக்கு சிறுநீரில் தொற்று இருப்பதாகக் கூறி மருத்துவப் பரிசோதனைக்காக கடந்த 11 ஆம் திகதி மந்திகை அரசினர் வைத்தியசாலையில் இவர் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவருக்கான மருத்துவ பரிசோதனைகளை மேற்கொண்ட வைத்தியர்கள் தமது அறிக்கையில் இவரது இதயம் வழமைக்கு மாறாக வலது பக்கம் அமைந்திருப்பதை உறுதிப்படுத்தியுள்ளனர்.

வழமைக்கு மாறான இந்த இதயத்தின் அமைப்பு குறித்து வைத்தியர்கள் ஆச்சரியமடைந்துள்ளனர். ஆண்களுக்கு இடது பக்கத்திலும் பெண்களுக்கு வலது பக்கத்திலும் இதயம் அமைந்திருப்பது வழமை. ஆனால் இவரது இதயம் வழமைக்கு மாறானதாக அமைந்துள்ளமைபற்றி வைத்தியசாலை வட்டாரங்கள் ஆச்சரியம் தெரிவித்துள்ளன. (18)

# ஆபாசப்படம் வைத்திருந்தவருக்கு மூவாயிரம் ரூபா தண்டம்

செல்லிடத் தொலைபேசியில் ஆபாசப்படம் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் மட்டக்களப்பைச் சேர்ந்த நபர் ஒருவருக்கு பருத்தித்துறை நீதவானால் மூவாயிரம் ரூபா தண்டப் பணம் விதிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு கல்லடி பிரதேசத்தைச் சேர்ந்த குறித்த நபர் நெல்லியடி நகர்ப்பகுதியில் நடமாடிய போது பொலிஸாரால் சந்தேகத்தின் பேரில் பிடித்து விசாரித்த போதுகுறித்த நபரின் கைத்தொலைபேசியில் ஐந்து ஆபாசப்படங்கள் இருந்ததையடுத்து குறித்த நபரைப் பருத்தித்துறை நீதவான் ம.கணேசராஜா முன்னிலையில் ஆஜர்ப்படுத்தியவேளை மூவாயிரம் ரூபா தண்டப்பணம் விதித்த நீதவான் கடும் எச்சரிக்கையுடன் விடுதலை செய்தார். (18)

## முரசின் இன்றைய பலன்

(24.06.2015 புதன்கிழமை)

மன்மத வருஷம் ஆனி மாதம் 09 ஆம் திகதி.
அமிர்த சித்த யோகம். அட்டமி - திதி.
உத்தர நட்சத்திரம் மு.இ. 07.19 வரை. பின் அத்தம்.
இராகு காலம் 11.55 - 01.25 வரை. சுபநேரம் 04.25 - 05.55 வரை.



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்** — சரியான முடிவினை அடையும் பொருட்டு பிழையான வழியினைக கைக் கொள்ளவேண்டாம்.

**ரிஷபம்** — இயந்திரங்களுடன் கவனமாகச் செயற்படுவது ஆபத்தை தவிர்க்கும்.

**மிதுனம்** — நோயின் ஆதிக்கம் குறைய நடைப்பயிற்சியில் ஈடுபட விழைதல்.

**கடகம்** — திகதிதப்பிய பொருட்கள் கைக் கெட்டும் அபாயம் பற்றி விழிப்பாயிருத்தல்.

**சிம்மம்** — ஆடம்பரப் பொருட்களைக் கொள்வனவு செய்ய வெளியூரிலிருந்து பணம் கிடைத்தல்.

**கன்னி** — ஆவணங்களின் காலக்கெடு முழந்ததால் தண்டம் ஏற்படல்.

**துலாம்** — அவசரக் குடுக்கையினால் பணத்தைச் சரியாக எண்ணிப பெறுவதில் தவறு விடுதல்.

**விருச்சிகம்** — பெற்றோரின் புத்திமதியைச் செவிமடுத்ததினால் துயர் விலகுதல்.


**தனுசு** — புதிய நட்பினை நம்பிவிடாது முளையிலேயே கிள்ளிவிடுங்கள்.

**மகரம்** — வழக்கின் தீர்ப்பு சாதகமாக வருவதை எண்ணி மகிழ்வடைதல்.

**கும்பம்** — பழையதை மெருகூட்டி விற்க முயல்வதில் எச்சரிக்கை நன்றாகும்.

**மீனம்** — காலநிலையின் பாதிப்பினால் பயிர்களின் சேதம் கண்டு கவலை கொள்ளல்.

# பரிசளிப்பு தின விழாக்காணும் உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை



பாடசாலை நுழைவாயில்

## 110ஆவது ஆண்டில் இன்று காலடி பதிக்கிறது

2014ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற க.பொ.த (சா/த) பரீட்சைப் பெறு பேறுகளின் அடிப்படையில் வலிகாமம் கல்வி வலயத்துக்கு உட்பட்ட தரம் II பாட சாலைகளில் குறிப்பிடத்தக்க சாதனையை படைத்து மற்றும் இணைபாட விதானச் செயற் பாடுகளிலும் வீறுநடை போட்டு முன்னேற்றப்பாதையில் தடம் பதிக்கும் யா/உடுவில் முருக மூர்த்தி வித்தியாலயம் இன்று (24.06.2015) புதன்கிழமை தனது 110ஆவது ஆண்டில் பரிசளிப்பு விழாவையும் மலர் வெளியீட்டினையும் மேற்கொண்டாடுகின்றது.


வலிகாமம் மண்ணின் உடுவில் கிராமத்தின் முழுதான வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட குடும்பங்களில் இருந்து வரும் மாணவர்கள் கற்கும் இப்பாடசாலையானது 1905ஆம் ஆண்டு சைவமும் தமிழும் தழைத்தோங்க வேண்டும் என்ற நல்லெண்ணம் கொண்ட சபாபதி உபாத்தியாரினால் முருகமூர்த்தி ஆலயச்சூழலில் ஒரு திண்ணைப் பாடசாலையாக ஆரம் பிக்கப்பட்டது.

பின்னர் அதன் வளர்ச்சியில் ஒரு கட்டமாக 1915ஆம் ஆண்டு நிரந்தர கட்டடம் ஒன்றில் ஐம்பது மாணவர்களுடன் இயங்கி 1961ஆம் ஆண்டில் அரசினால் பொறுப் பேற்கப்பட்டு அரச பாடசாலையாக தரமுயர்ந்தது இதில் உடுவிலைச் சேர்ந்த கார்த்திகேசு வாத்தியார், சிவ சுப்பிரமணிய ஐயர், செல்லையா மாஸ்டர், கதிரவேல் மாஸ்டர், கந்தையா மாஸ்டர், அரசரத்தினம் மாஸ்டர், யோகேஸ்வரன் மாஸ்டர், மகாலிங்கம் மாஸ்டர், நடராஜசுந்தரம், பஞ்சாட்சரம் என பலர் அதிபர்களாகவும் தலைமையாசிரியர்களாகவும் விளங்கி கட்டிக் காக்கப்பட்ட இவ் வித்தியாசாலையில் தற்போது திரு.தி.தேவதயாளன் அதிபராகக் கட மையாற்றி வருகின்றார்

தொகுப்பு
யோ.கோணேசலிங்கம்
யா/உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை

இன்று இப்பாடசாலை அரச, தனியார், பிரபல பாடசாலைகளுடன் சமநிலை எய்தும் வகையில் அல்லது அவற்றை விட ஒரு படி மேல் செல்லும் நிலையிலும் கற்றல் கற்பித்தல் ஏனைய இணை பாட விதான செயற்பாடுகள் வெளிக்காட்டி நிற்கின்றன

இவ் ஆண்டு வெளியான க.பொ.த.(சா/த) பரீட்சையில் செல்வன்.க.அனிஷ்ரன் 9 பாடங்களிலும் சித்தியடைந்து ஒரு சாதனையை நிலை நாட்டியமையும் ஏனைய மாணவர்களான கோ.மதிவதனன், இ. டஸ்மி, அ.புகழினி, ஸ்ரீ.சதீஸ உயர்தரத்தை கற்கும் தகுதியைப் பெற்றமையும் இணைபாட விதானச் செயற்பாடுகளை மாணவர் கள் கோட்ட வலய மட்டங்களில் தெரிவு செய் யப்பட்டு மாவட்டம், மாகாண போட்டிகளிலும் பங்குபற்று கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.



பாடசாலை அதிபர்
திரு. தேவதயாளன்

2014ஆம் ஆண்டில் மாவட்ட மட்டம் வரை இ.டஸ்மி யே.ஜெனிஸ்ரிகா ஆகிய மாணவிகள் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடதக்கது இங்கு கல்வி கற்கும் மாணவர்கள் பாடசாலைக் கல்வியை மட்டுமே சார்ந்து வாழ்வதுடன் தனியார் மற்றும் வேறு இடங்களுக்கு செல்லாது பாடசாலைக்கல்வியை மட்டுமே கற்று வருவது சிறப்புக்குரிய ஒன்றாவதுடன் இங்கு ஆசிரியர்கள் கால நேரம் பாராது கல்வி அறிவு ஊட்டி வருவதும் ஒழுக்க விழுமியங்களில் மாணவர்கள் சிறந்து விளங்குவதும் குறிப்பிடத்தக்க சிறப்பம்சமாகும்.



பாடசாலை ஆசிரியர் குழாம்






இன்று பரிசு பெறும் மாணவர்கள்





# அரச ஊழியர்களின் கொடுப்பனவுகளை அடிப்படைச் சம்பளத்துடன் இணைக்க வேண்டும்

## கொழும்பில் துண்டுப்பிரசுரம் விநியோகம்



அரச ஊழியர்களின் கொடுப பனவுகள் அனைத்தும் அவர்க ளின் அடிப்படை சம்பளத்துடன் இணைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை உட்பட பல கோரிக கைகளை வலியுறுத்தி நேற்று கொழும்பில் துண்டுப் பிரசுரங் கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

குறித்த துண்டுப் பிரசுரங் கள் இலங்கை தொழிற்சங்க மத்திய நிலையத்தினால் விநி யோகிக்கப்பட்டன.

விநியோகிக்கப்பட்ட துண்டுப பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள் ளதாவது, அரச ஊழியர்களின் கொடுப்பனவுகள் அனைத்தும் அவர்களது அடிப்படைச் சம்பளத் தில் சேர்க்கப்படும் என்று அரசு தனது 100 நாள் வேலைத்திட் டத்தில் அறிவித்திருந்தது. எனி னும் அது இன்னும் நடைமுறைப படுத்தப்படவில்லை.

தனியார் துறைக்கு 2500 ரூபாய் சம்பள உயர்வுக்கான ஒரு யோசனை முன்வைக்கப் பட்டது அதன் பின்னர் அது தொடர பில் எதுவும் தெரிவிக்கப்பட வில்லை.

அதேபோன்று, பல அரச நிறுவனங்களின் மனித வள பிரி வுகளின் கீழ் வேலை புரிபவர களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி உறுதி மொழி வழங்கியிருந்தார். எனினும் அது தொடர்பிலும் இன் னும் எதுவும் செய்யப்படவில்லை என்றும் குறித்த துண்டுப்பிரசு ரத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

எனவே இது தொடர்பில் ஏனைய தொழிற்சங்கங்களுக்கு தெளிவுபடுத்தும் நோக்கிலும், அவர்களுடன் எதிர்காலத்தில் சந்திப்புக்களை நடாத்தி இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண் பதற்காகவுமே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக இலங்கை தொழிற்சங்க மத்திய நிலையம் தெரிவித்திருந்தது.

# இரு பாரவூர்திகளுடன் இடிந்து வீழ்ந்தது பாலம்




குருநாகல் - ரிதிகம - மீலியாதென்ன பிரதேசத்தில் நேற்று முன்தினம் பாரவூர்திகள் இரண்டுடன் பாலம் ஒன்று இடிந்து வீழ்ந்துள்ளது.

சம்பவத்தில் பாரவூர்திகளின் சாரதி ஒருவருக்கு சிறு காயம் ஏற்பட்டுள்ள நிலையில், அவர் மருத்துவமனையில் அனுமதிக் கப்பட்டுள்ளார்.

# நாட்டைக் கருத்திற்கொண்டு அரசியல்வாதிகள் செயற்பட வேண்டும்

## அஸ்கிரிய பீடாதிபதி மீண்டும் கோரிக்கை



நாட்டையும் மக்களையும் கருத்திற்கொண்டு அரசியல்வாதி கள் செயற்பட வேண்டுமென கண்டி அஸ்கிரிய பீடாதிபதி கலகம ஸ்ரீ அத்தாதஸ்ஸி தேரர் அரசி யல்வாதிகளிடம் கோரியுள்ளார்.

கொழும்பு மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் டிரான் அலஸ், நேற்று முன்தினம் அஸ்கிரிய பீடா திபதியை சந்தித்து ஆசி பெற் றுக்கொண்ட போது இந்தக் கருத துக்களை அஸ்கிரிய பீடாதிபதி வெளியிட்டுள்ளார்.

அரசியல் ரீதியாக முக்கிய மற்ற விடயங்களை தூக்கிப்பி டித்துக் கொண்டு ஒருவர் மாறி ஒருவர் குற்றம் சுமத்திக் கொண் டிருப்பதனை விடவும் நாட்டை யும் மக்களையும் முதன்மைப் படுத்தி செயற்பட வேண்டியது அவசியமானது.

20ஆவது திருத்தச் சட்டம் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல் குறித்து அரசியல்வாதிகள் மாறு பட்ட கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர்.

பல்வேறு கருத்துக்களை வெளியிடுவதனை விடவும் நாட்டை அபிவிருத்தி செய்வது குறித்தே அரசியல்வாதிகள் கவனம் செலுத்த வேண்டும்.

அரசியல் அமைப்பு திருத் தங்களின் பின்னரே தேர்தல் நடாத்தப்பட வேண்டுமென சிலர் கோருகின்றனர். எனினும், பொருத்தமான நேரத்தில் பொதுத் தேர்தல் நடாத்தப்பட வேண்டியது அவசியமானது.

அரசியல் அமைப்பு திருத்தம் தொடர்பில் பூரண தெளிவுடை யவர்கள் மட்டுமே கருத்து வெளி யிட வேண்டும். தெரியாத விட யங்கள் குறித்து எல்லோரும் பேசக்கூடாது.

நாட்டில் சர்ச்சைக்குரிய நிலைமையை ஏற்படுத்தாது நாட்டினதும், மக்களினதும் நலனை முதன்மையாகக் கொண்டு அரசி யல்வாதிகள் செயற்பட வேண் டியது அவசியமானது என கலகம ஸ்ரீ அத்தாத ஸ்ஸி தேரர் தெரிவித்துள்ளார்.

# பௌத்த மதகுரு சடலமாக மீட்பு

ஹொரண, இங்கிரிய, ரம்புக்கனகே வீதியில் உள்ள தேயிலைத் தோட்டம் ஒன்றில் இருந்து நேற்று முன்தினம் பௌத்த மத் குருவொருவரின் சடலம் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

தேயிலைச் செடிகளுக்கு மத்தியில் உள்ள மரம் ஒன்றில் தூக்கிட்ட நிலையில் இவரது சடலம் மீட்கப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் காரியாலயம் தெரிவித்துள்ளது.

இது தற்கொலையா? அல்லது கொலையா? என்பது குறித்த விசாரணைகள் தற்போது இடம்பெற்று வருகின்றன.

சடலமாக மீட்கப்பட்டவர் பண்டாரவளை ஸ்ரீ விவேகாரம விகா ரையைச் சேர்ந்த 29 வயதானவர் என இனம் காணப்பட்டுள்ளார்.

# நூடில்ஸ் வகைகளை பகுப்பாய்வு செய்யத் தீர்மானம்




தற்பொழுது சந்தையிலுள்ள மகி நூடில்ஸ் உள்ளிட்ட உடன டியாகத் தயாரிக்கக் கூடிய அனைத்துவகை நூடில்ஸ்க ளையும் பகுப்பாய்வு செய்வ தற்கு அரசாங்கம் தீர்மானித் துள்ளது.

இரசாயனப் பகுப்பாய்வுக்கு உள்ளாக்கப்படும் நூடில்ஸ்க ளில் உடலுக்குத் தீங்கு விளை விக்கக்கூடிய இரசாயனப் பதார்த் தங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளமை உறுதி செய்யப்படும் பட்சத்தில் அந்த உற்பத்திகள் உடனடியாக நாட்டில் தடை செய்யப்படவுள் ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டாக்டர் பாலித்த மஹிபால தெரிவித் துள்ளார்.

உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் அனைத்து வகை நூடில்ஸ் மாதிரிகளையும் தொழில்நுட்ப நிறுவன ஆய்வு கூடங்களுக்கு அனுப்பி வைக்கு மாறு சுகாதார அமைச்சு அறிவித் துள்ளது. எமது நாட்டில் குழந் தைகள் உட்பட அதிகமானோரின் விருப்பத் துக்குரிய உணவு வகையாக நூடில்ஸ் மாறியிருக்கும் நிலை யில் இந்தியாவில் நூடில்ஸ்க ளுக்கு தடை விதிக்கப்பட்டுள் ளது.

இதனூடாக பல்வேறுபட்ட நோய்கள் தொற்றக்கூடிய வாய்ப்பு இருக்கிறதா என்பதை கவனிப்பதுடன், விசேடமாக அவற றில் அடங்கியுள்ள சுவையூட் டிகளில் உள்ளடக்கப்பட்டுள்ள இரசாயனப் பதார்த்தங்கள் உட லுக்கு தீங்குவிளைவிக்கக் கூடி யனவா என்பதைக் கண்டறியும் நோக்கிலேயே இந்தப் பகுப் பாயவுகள் மேற்கொள்ளப்பட வுள்ள தாக தெரிவிக்கப்பட் டுள்ளது.

இதன்படி சந்தையிலுள்ள மகி நூடில்ஸ்களின் மாதிரிகள் தொழில்நுட்ப நிறுவன ஆய்வு கூடங்களுக்கு அனுப்பி வைக் கப்பட்டுள்ளதாக சுகாதார சேவைகள் திணைக்களம் அறி வித்துள்ளது.

# சட்டவிரோதமாகச் செயற்படும் ஜே.பி.பதவிகள் பறிப்பு

## நீதியமைச்சர் எச்சரிக்கை



சட்டவிரோதமாக செயற் பட்டு வரும் சமாதான நீதி வான்கள் தொடர்பில் ஆராய்ந்து அவர்களது பதவிகள் உடன் பறிக கப்படும் வகையில் சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று நீதி அமைச்சர் விஜய தாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

நாடளாவிய ரீதியில் 1000 பேருக்கு சமாதான நீதிவான் நியமனம் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் பிரதமர் ரணில் விக் கிரமசிங்க தலைமையில் நடை பெற்றது.

இதன்போதே நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ இவ்வாறு தெரிவித்தார்.தொடர்ந்து அங்கு உரையாற்றுகையில்,

நாட்டை சமாதான மயப்ப டுத்தும் முக்கிய பங்கு சமாதான நீதிவான்கள் மீது சுமத்தப் பட்டுள்ளது.

நாட்டின் நீதித்துறையை பாது காக்க வேண்டியது அரசாங் க்த்தின் பிரதான பொறுப்பு வாய்ந்த கடமையாகும். எனவே நாட்டின் பிரதான சட்ட ஆவணமாக கரு தப்படும் அரசியலமைப்பின் பிர காரமே ஆட்சி நடாத்தப்பட வேண்டும். இதற்கு மாறாக ஆட்சி நடத்த உரிமை கிடை யாது.

இதற்கமைவாக அரசியல மைப்பின் .பிரகாரம் நாட்டின் சட்டத்தை நிலை நாட் டும் பாரிய பொறுப்பு அரசியல் வாதிகளின் மீதே பொறுப்பு சாட்டப்பட்டுள்ளது. இருந்த போதிலும் அரசியல் வாதிகளி னால் மாத்திரம் நாட்டில்சட் டத்தின் ஆட்சியை நிலை நிறுத்த முடியாது. எனவே சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டுவதுடன், நாட்டில் சமாதானத்தை ஏற்ப டுத்தும் நோக்கில் நாடளாவிய ரீதியில் சமாதான நீதிவான்கள் நியமிக்கப்படுகின்றனர்.

இந்நிலையில் சமாதான நீதி வான்கள் நாட்டின் சமாதானத்தை கருத்திற் கொண்டு செயற்பட வேண்டும். எனவே நாட்டின் சட்டத்தை பாதுகாக்க வேண்டியது சமாதான நீதிவான்களின் பிரதான கடமையாகும்.

இந்நிலையில் நாள் தோறும் நாடளாவிய ரீதியிலி ருந்து சமாதான நீதிவான்கள் தொடர்பில் முறைப்பாடுகள் கிடைத்த வண்ணம் உள்ளன. இது தொடர்பில் ஆராய்ந்து வருகிறோம்.

இந்த முறைப்பாடுகளின் விளைவாக பலரது நீதிவான் பதவி பறிக்கப பட்டுள்ளன. ஆகவே சமாதான நீதிவான் களின் செயற்பாடு தொடர்பில் அரசாங்கம் பெரும் அவதானத் துடன் செயற்படும். சட்டத்திற்கு விரோதமாக செயற படும் சமாதான நீதிவான்களுக்கு எதிராக கடும் சட் நடவடிக்கை எடுக்கப்ப்டும். இது .தொடர்பில் விசேடமாக ஆராய்ந்து, சட்டவி ரோதமாக செயற்படும் சமாதான நீதிவான்களை இனங்கண்டு அவர்களது பதவிகள் உடன் பறிக்கப்படும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார.

24. மழை நாட்களில் எப்பொழுதும்
1) மின்னல் வெட்டுவதோடு இடி முழங்கும் சத்தமும் கேட்கும்
2) வானம் கரும் மேகங்களால் நிரம்பி இருக்கும்
3) வானவில் தோன்றும்

25. வெள்ளத்தினால் அகதிகளானவர்களுக்கு முதலில் வழங்கப்படுவது
1) காணிகள்　　2) உணவு　　3) வீடுகள்

26. என்னிடம் 8 நாணயங்கள் உள்ளன அவற்றின் மொத்தப் பெறுமதி ரூபா 10.00 அதன்படி என்னிடமுள்ள நாணய வகைகளாவன
1) ஒரு ரூபாவும், 50 சதங்களும்
2) ஒரு ரூபாவும், இரண்டு ரூபாக்களும்
3) 5 ரூபாவும், 2 ரூபாக்களும்

27. மீனுக்கு நீந்துதல் எனின், தவளைக்கு
1) ஓடுதல்
2) பாய்தல்
3) நடத்தல்

28. கடிகாரம் ஒன்றில் மணித்தியால முள்ளும் நிமிடமுள்ளும் ஒன்றின் மேல் ஒன்றாக அமையும் சந்தர்ப்பம்
1) பி.ப 3.15
2) பி.ப 6.30
3) நண்பகல் 12.00

29. எனது அம்மாவுக்கு 44 வருடங்களாகும் போது எனது வயது 13 வருடங்களாகும் அதன் படி அம்மாவின் வயது 55 வருடங்களாகும் போது எனது வயது
1) 24 வருடங்கள்
2) 21 வருடங்கள்
3) 26 வருடங்கள்

30. ஜனவரி மாதத்தில் உள்ள திங்கட்கிழமைகளின் மிகக்குறைந்த கூட்டுத்தொகை
1) 70
2) 66
3) 62

31. ரவி ஒரு புத்தகத்தின் இலக்கம் 34 முதல் இலக்கம் 98 வரையான பக்கங்களை வாசித்து முடித்தான். அதன்படி அவன் வாசித்து முடித்த பக்கங்களின் எண்ணிக்கை
1) 66
2) 65
3) 64

32. 2, 7, 4 ஆகிய இலக்கங்கள் மூன்றையும் பயன்படுத்தி ஒன்றுக்கொன்று வித்தியாசமான மூன்று இலக்கங்களைக் கொண்ட எண்கள் எத்தனை எழுதலாம்?
1) 5　　2) 6　　3) 8

### நேற்று பிரசுரமாகிய வினாக்களின் விடைகள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (01).1.3 | 2.1 | 3.3 | 4.2 | 5.2 | (02) 6.1 | 7.2 |
| 8.1 | 9.2 | 10.2 | 11.3 | 12.1 | 13.1 | 14.1 |
| (03) 15.3 | 16.3 | 17.1 | 18.1 | (04) 19.1 | 20.3 | 21.1 |
| (05) 22.3 | 23.3 | 24.1 | (06) 25.3 | 26.2 | (07) 27.3 | 28.1 |
| (08) 29.2 | 30.1 | | | | | |

நேற்று பிரசுரமாகிய வினா - 9 இல் பிரசுரமாகிய விடை 1948ஆம் ஆண்டிற்கு பதிலாக 1947ம் ஆண்டு என பிரசுரிக்கப்பட்டுள்ளது 1948 ஆம் ஆண்டென திருத்திக்கொள்ளவும்

**இப் பயிற்சி வினாக்களின் விடைகள் நாளைமறுதினம் வெளியாகும்**



## தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை முன்னோடி - 2015

பகுதி - I
1 மணி 30 நிமிடம்


# கல்வி முரசு



எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க


(01) 1ஆம், 2ம் வினாக்களுக்கு ஆரம்பத்தில் தரப்பட்ட படத்துடன் நெருங்கிய தொடர்புடையது எதுவெனக் கண்டு கீறிடுக

01.



(i)　(ii)　(iii)


02.



(i)　(ii)　(iii)


(02) 3ஆம் வினாவுக்கு ஆரம்பத்தில் தரப்பட்ட அமைப்பை ஒன்றாக இணைக்கும் போதும் 4ம் வினாவுக்கு இரண்டையும் ஒன்றின் மீது ஒன்று வைத்து இணைக்கும் போதும் கிடைக்கும் அமைப்பு யாது?

03.



(i)　(ii)　(iii)

04.



(i)　(ii)　(iii)


(03) 05 - 08 வரையான வினாக்களுக்கு பின்வரும் பந்தியில் உள்ள ஒவ்வொரு வெற்றிடத்துக்கும் பொருத்தமான சொல்லை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக

அமலாவின் திருமணத்தில் கலந்து கொள்வதற்காக அவளது காரியாலயத்தில் உள்ள ( 05. ..............
1) பெற்றோர்கள்　2) தோழிகள்　3) அயலவர்கள் ) மூவர் அரை நாள் 06. ..............

1) விடுமுறை 2) ஓய்வு 3) சேவை) வேண்டி நின்றனர் எனினும் காரியாலயத்தில் அதிகாரி அதனை
7. ........................ 1) அனுமதித்தார் 2) உறுதிப்படுத்தினார் 3) மறுத்து விட்டார்)
அதனால் அவர்களுக்கு உரிய நேரத்திற்கு வைபவத்தில் கலந்து கொள்ள முடியவில்லை


**(04) 8ஆம், 9ஆம் வினாக்களை நன்கு அவதானித்து ஆரம்பத்தில் தரப்பட்ட இரு அமைப்புக்களையும் ஒன்றன் மீது ஒன்று வைக்கும் போது கிடைக்கும் அமைப்பைக் கண்டுபிடித்துக் கீறிடுக**

8.




(i) (ii) (iii)

9.



(i) (ii) (iii)




நிலை 1 நிலை 2 நிலை 3

**(05) மேலே ஒரு சதுரமுகி A - F வரை எழுதப்பட்டு பல விதங்களில் புரட்டப்பட்ட விதம் மேலே படத்தில் காணப்படுகிறது இதற்கேற்ப 10ஆம், 11ஆம் வினாக்களுக்கு விடை தருக**

10. ஆங்கில எழுத்து Aஇற்கு எதிர்த்திசையில் அமையும் எழுத்து யாது?
1) D 2) E 3) F

11. ஆங்கில எழுத்த Bஇற்கு எதிர்த்திசையில் வரும் எழுத்து யாது?
1) E 2) C 3) F


12. நான் உழவர்களுக்கு உரம் வழங்குவேன் சூடு மிதிக்க உதவுவேன் நான் யார்?
1) மண்புழு 2) உழவுஇயந்திரம் 3) எருது

13. சமன் 3m ஓடும் போது கமல் 4m ஓடுவான் கமல் 6m ஓடும் போது ராஜா 5m ஓடுவான் அதன்படி மிகவேகமாக ஓடுபவர்?
1) சமன் 2) கமல் 3) ராஜா

14. ஒரு சிற்றுண்டிச்சாலையில் இறைச்சி, மீன், முட்டை, மரக்கறிகள் போன்ற உணவுவகைகள் இருந்தன. நிமல் சிற்றுண்டிச்சாலையில் முட்டை தவிர ஏனையவற்றைச் சாப்பிட்டான். கமல் இறைச்சியைத் தவிர ஏனையவற்றைச் சாப்பிட்டான். ரவி மரக்கறியைத் தவிர ஏனையவற்றைச் சாப்பிட்டான் இவர்கள் மூவரும் சாப்பிட்ட உணவு
1) இறைச்சி 2) மீன் 3) முட்டை

15. ஒரு வரிசையில் நிலாவுக்கு முன்னால் ஐந்து பேரும் கமலுக்குப் பின்னால் மூன்று பேரும் உள்ளனர். நிலா கமல் இருவருக்கும் இடையில் இருவர் உள்ளனர். கமல் இருப்பது நிலாவுக்குப் பின்னால் எனின், வரிசையில் உள்ளோரின் மொத்த எண்ணிக்கை
1) 12 2) 20 3) 15

16. உருவில் நிறந்தீட்டப்பட்டது முழுவதின் என்ன பங்கு




1) $\frac{1}{3}$ 2) $\frac{1}{4}$ 3) $\frac{1}{5}$




17. பிழையான கணிதக்கோவையைக் கண்டுபிடித்து அதன் கீழ்க் கோடிடுக
1) $8 \times 4 + 28 = 60$ 2) $26 \times 3 - 18 = 60$ 3) $40 + 30 - 20 = 60$

18. படத்தில் நிறந்தீட்டப்பட்டுள்ளது முழு உருவிலும்




1) நாலில் ஒரு பங்கு
2) ஐந்தில் ஒரு பங்கு
3) எட்டில் ஒரு பங்கு

19. படத்தில் நிறந்தீட்டப்படாதது என்ன பங்கு




1) $\frac{5}{10}$ 2) $\frac{3}{5}$ 3) $\frac{1}{2}$

20. முதலில் தரப்பட்ட அமைப்பை Aஇன் ஊடாகப் பார்க்கும் போது எவ்வாறு தென்படும் எனக்கண்டு கோடிடுக




(i) (ii) (iii)

21. கீழே தரப்பட்ட அளவிடையில் காட்டப்பட்டுள்ள பென்சிலின் நீளம் எத்தனை சென்றிமீற்றர் எனக்கண்டு அதன் கீழ்க் கோடிடுக




1) 7cm
2) 8cm
3) 7.5cm

| பிள்ளைகள் | சாப்பிட்டது | செலுத்திய தொகை |
|---|---|---|
| ● ரவி | 1 அப்பம் 1 வடை 1 தேனீர் | 24.00 |
| ● நிமல் | 2 வடை 1 தேனீர் | 22.00 |
| ● கமல் | 2 அப்பம் 1 வடை 1 தேனீர் | 34.00 |

22. மேலே தரப்பட்ட தரவின்படி வடை ஒன்றின் விலை யாது?
1) 8.00 2) 5.00 3) 7.00

23. அப்பம் ஒன்றின் விலை யாது?
1) 10.00 2) 12.00 3) 7.00

24. சில குளங்களிலும், ஆறுகளிலும் இங்கு குளிப்பதற்குத் தடை என்ற அறிவித்தல் பலகையில் காட்சிப்படுத் தப்பட்டுள்ளது இதற்குரிய காரணம்
1) அந்த இடத்தில் நீர்மிகக் குறைவாக இருப்பதனால் ஆகும்
2) அந்த இடத்தில் குறிப்பது மிக ஆபத்தானது என்பதனாலாகும்
3) அங்கு குளிப்பதனால் நீர் அசுத்தமாகிறது என்பதனாலாகும்

# 20ஆவது திருத்தச்சட்டம் நிச்சயம் நிறைவேற்றப்படும்

## எதிர்க்கட்சித் தலைவர் சூளுரை

(கொழும்பு)

அரசியலமைப்பின் 20ஆவது திருத்தச்சட்டம் எப்படியேனும் நிறைவேற்றப்பட வேண்டும் என எதிரக்கட்சி தலைவர் நிமல் சிறி பாலடி சில்வா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் நேற்றுமுன்தினம் எதிர்க்கட்சித் தலைவர் காரியாலயத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் எதிர்க்கட்சி தலைவர் மேலும் தெரிவிக்கையில்,

தேர்தல் திருத்தத்தை முன்னெடுக்கும் 20ஆவது திருத்தச் சட்டம் அரசாங்-கத்தின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் தான் வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டுள்ளது.

அதேபோல் இந்த திருத்தச் சட்டம் தொடர்பில் கடந்த காலத்தில் அரசாங்கம் எதிர்க்கட்சியுடனும் சிறுபான்மை மற்றும் சிறிய கட்சிகளுடன் பல தடவைகள் கலந்தாலோசித்துள்ளது.

அதேபோல் அமைச்சரவையில் கலந்தாலோசித்துத் தான் வர்த்தமானியில் வெளியிட்டுள்ளனர். இவ்வாறு அரசாங்கத்தின் முழுமையான தலையீட்டுடன் தான் 20ஆவது திருத்தச் சட்டம் கொண்டுவர தீர்மானிக்கப்பட்டது. ஆனால் இப்போது இந்தத திருத்தச் சட்டம் கொண்டு வருவதை அரசாங்கமும் ஏனைய கட்சிகளும் எதிர்க்கின்றன.

20ஆவது திருத்தச் சட்டம் கொண்டுவருவதில் எதிர்க்கட்சி எந்த விதத்திலும் தொடர்புபடவில்லை. அரசாங்கமே அனைத்து செயற்பாடுகளையும் முன்னெடுத்துவிட்டு இப்போது இந்தத் தேர்தல் திருத்தச் சட்டம் ஐக்கிய தேசியக் கட்சிக்கு சாதகமான வகையில் அமையவில்லை என்றவுடன் குழப்பியடிக்க பார்க்கின்றனர். இதற்கு மக்கள் விடுதலை முன்னணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகளும் துணைபோகின்றன. இன்று ஐக்கிய தேசியக் கட்சியின் கூட்டணியில் மக்கள விடுதலை முன்னணி மற்றும் ஏனைய கட்சிகள் கைகோர்த்து அரசியல் செய்ய முயற்சிக்கின்றன.

அவர்களின் அரசியல் பாதை கேள்விக் குறியாகிவிட்டது. அதனால் தான் 20ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்ற விடாது இழுத்தடிப்புகளை மேற்கொள்கின்றனர். கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பிரதான இரண்டு கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டே அனைத்துக் கட்சிகளும் அவருடன் கைகோர்த்தன.

குறிப்பாக 19ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றுவது மற்றையது 20ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றுவது என்ற பிரதான இரண்டு உடன்படிக்கைகளாகும். இதில் 19ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்ற முன்வந்த அனைவரும் இன்று 20 ஐ நிறைவேற்றுவதற்கு பின்வாங்குகின்றனர் என்றார்.

# றமழான் சிந்தனை

பெரியமுஹறதீன் பள்ளி



**எவர் றமழான் மாதத்தில் நோய் அல்லது மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்ட எந்தக் காரணமுமின்றி றமழானுடைய ஒரு நாள் நோன்பை விட்டு விடுகிறாரோ அவர் றமழான் அல்லாத காலத்தில் ஆயுள் முழுவதும் நோன்பிருந்தாலும் அதற்கு பகரமாக ஆகாது. நூல் - அஹ்மத்**

**ஸஹர் முடிவு : அதிகாலை 4.24**
**நோன்பு திறக்கும் நேரம் : மாலை 6.35**

**(105)**

# கர்ப்பிணிப் பெண்களுக்கு போஷாக்கு உணவு

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஐந்து இடங்களில் வைத்து கர்ப்பிணிப் பெண்களுக்கு போஷாக்கு உணவுப்பொருட்களை வழங்கி வருகின்றது.

கர்ப்பிணிப் பெண்களுக்கு முன்கூட்டியே அறிவித்தல் செய்து குறித்த தினத்தில் அச்சுவேலி, இடைக்காடு, வாதரவத்தை, புத்தூர், சிறுப்பிட்டி ஆகிய ஐந்து இடங்களில் வைத்து போஷாக்கு உணவுப் பொருட்களை வழங்கி வருகின்றது.

மகளிர் விவகார அமைச்சு கர்ப்பிணிப் பெண்களின் போஷாக்கு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பத்து மாதங்களுக்கு மாதாந்தம் தலா இரண்டாயிரம் ரூபா பெறுமதியான போஷாக்கு உணவை உள்ளடக்கிய பொருட்களை வழங்கி வருகின்றது.

அச்சுவேலி பலநோக்கு கூட்டுறவுச் சங்க எல்லைப் பரப்பில் இந்த மாதம் 350 கர்ப்பிணிகள் போஷாக்கு உணவைப் பெறுகின்றனர். இவர்களுக்கு முட்டை உள்ளடங்கலான உணவுப் பொருட்கள் வழங்கப்படுகின்றன. அதேவேளை தொடர்ந்தும் இவ்வாறான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழர்களின் பிரதிநிதித்துவத்தை 20 ஆவது திருத்தம் இல்லாதொழிக்கும்

## ஜே.வி.பி. எச்சரிக்கை



தமிழ் பேசும் மக்களை சிறுபான்மை இனத்தவராக நாம் ஏற்றுக்கொள்ள விரும்பவில்லை. இந்த நாட்டில் தமிழ், முஸ்லிம் மக்களின் பிரதிநிதித்துவத்திற்கும் சம உரிமை வழங்கப்படவேண்டும். ஆனால் 20ஆவது திருத்தச் சட்டம் தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதித்துவத்தை அழிக்கும் திட்டமாகும்.

இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியால் நேற்றுமுன்தினம் பத்தரமுல்லையில் நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பின் போது கட்சியின் பொதுச செயலாளர் ரில்வின் சில்வா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், தேர்தல் முறைமையில் மாற்றம் கொண்டுவருவது தொடர்பில் கடந்த காலத்தில் இருந்து கட்சி தலைவர்கள் கூட்டத்திலும், சிறிய கட்சிகளின் கூட்டங்களிலும் ஆழமாக ஆராயப்பட்டது. பிரதான இரு கட்சிகளின் கருத்துக்களையும் கவனத்தில் கொணடும் இந்த தேர்தல் திருத்தம் தொடர்பில் ஆராயப்பட்டது.

இந்தச் சந்தர்ப்பங்களில் தேர்தல் திருத்தம் மிகவும் ஆரோக்கிய மானதாகவும் சிறிய கட்சிகளின் பிரதிநிதித்துவத்தை பாதுகாகக்கும் வகையிலும் அமையும் என இரண்டு பிரதான கட்சிகளும் நம் பிக்கையளித்தன. ஆனால் தறபோது கொண்டு வரப்பட்டிருக்கும 20ஆவது திருத்தச் சட்டமானது சிறிய கட்சிகளின் பிரதிநிதிதது வததை முழுமையாக அழிக்கும் வகையில் அமைந்துள்ளது. பூனைக குட்டியை கொண்டு வருவதாக கூறி இறுதியில் புலிக்குட்டியையே இந்த அரசாங்கம் கொண்டுவந்துள்ளது. புலிக்குட்டி வளர்ததால் நாடடில் பெரிய பிரச்சினைகள் வரும என்பதை யாரும் மறந்து விடககூடாது.

அரசாங்கம் தற்போது கொண்டு வரவிருக்கும் 20ஆவது திருத்தச் சட்டமானது மிகவும் மோசமானதாகவே அமைந்துள்ளது. குறிப்பாக தமிழ், முஸ்லிம் மககளின் பிரதிநிதித்துவம் இந்த 20 ஆவது திருத்தச் சட்டத்தின் மூலமாக தடுக்கப்படுகின்றது என்றார்.

# ஆன்ம ஈடேற்றம் தருகின்ற புண்ணிய தினமே ஆனி உத்தரம்

உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல பரம்பொருளாகிய சிவபெருமானுக்குரிய விசேட தினங்களில் இன்றைய ஆனி உத்தரமும் ஒன்றாகும். இந்த ஆனி உத்தர தரிசனமானது ஆன்ம ஈடேற்றந் தருகின்ற ஒரு புனித புண்ணிய திருவிழாவாகும். இந்த விரதத்தை அனுஷடிக்க விரும்புவோர் இன்று காலை எழுந்து புனித நீராடித் தேய்த்துலர்ந்த விஸ்திரந் தரித்து சந்தியாவந்தனம் முடித்து சிவாலய தரிசனத்துடன் ஆரம்பிக்கலாம்.

விநாயகரை வணங்கத் தொடங்கி இன்று முழுநாளும் விரதமிருக்க வேண்டும். தில்லை நடராஜப் பெருமானை மனதிலே தியானித்து அவரைத் தரிசனஞ் செய்து மதியம் ஒரு பொழுதுண்டு இரவு பால் பழம் அருந்தலாம். சிவபெருமானுடைய திவ்ய பேரருட் கருணைக்குப் பாத்திரமாகி வழிபாடியற்றி தேவார பாராயணத்துடன் இன்று இருத்தல் வேண்டும்.

இந்தியாவிலே சிதம்பரம் திருக்கோவிலிலே இன்று அதிகாலை முதலாக தில்லைக்கூத்தனுக்கு



பால், தயிர்,நெய், தேன், இளநீர் என்று பலவற்றாலும் திவ்ய அபிஷேகம் நடைபெறும். இந்த பக்திபூர்வமான அபிஷேகத்தைக் கண்டு களிப்பதற்கும் அடியார்கள் நான் முந்தி நீமுந்தி என்று இடித்துத் தள்ளிக் கொண்டு தரிசனம் காண்பதற்கும் இந்தச் சிதம்பரம் கோவிலில் தனித் தரிசனம் நிகழும்.

பொன்னம்பலத்தாடும் தில்லை நடராஜனின் கனகசபைக் கூத்து காண்பதற்கு பூர்வ ஜென்ம புண்ணியஞ் செய்திருக்க வேண்டும். காலை வேளையிலே நடராஜப் பொருமான் சிவகாமி அம்மை சமேதராக ஆடி ஆடி அசைந்து அசைந்து முன்னும் பின்னும் வந்து தரும் அற்புதக் காட்சி ஆனந்த கோலாகலக் காட்சியாகும். இந்த ஆனி உத்தர தரிசனம் இதேபோல் இலங்கையிலும் சில சிவன் ஆலயங்களில் வெகு சிறப்பாக இடம்பெறுகிறது. யாழ்ப்பாணம் வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் கோவலிலும் காரை நகரிலுள்ள "ஈழத்துச் சிதம்பரம்" என்று அழைக்கப்படுகின்ற சிவன் கோவிலிலும் நல்லூர் சிவன் கோவிலிலும் கொழும்பு கொட்டாஞ்சேனை பொன்னம்பலவாணர் சிவன் ஆலயத்திலும் இந்த ஆனி உத்தரம் மிகச் சிறப்புற நடைபெறுகின்றது.

இன்றைய ஆனி உத்தர தரிசனமானது காணக் கிடைக்காத ஒன்றாகும். இறைவன் சிவபெருமானுடைய திருவருட் கருணையைப் பெற்றுக் கொள்ளவும் தீராத மாறாத வினைகளும் நோய்களும் நீங்கப் பெற்று உலகில் சுகதேகியாக வாழவும் இந்தத் தரிசனம் பேருதவியாகும் "தில்லை நடராஜனின் தரிசனமே புவியில் தேடக் கிடைக்காத தரிசனமே" என்பது பாடல்.

ஆகவே இன்றைய ஆனி உத்தர தரிசனமே நன்னாளில் எல்லையில்லாத நல்ல ஆனந்தத்தை அள்ளித் தருகின்ற இன்ப நுகர்ச்சியை உணர்ந்து, நாடித் தேடி ஓடி அனுபவித்து, மகிழ்ச்சிக் கடலில் மூழ்கித் திளைத்து, அருள் வேண்டிச் சிந்தித்து வந்தித்துச் சேவிக்க நம்மை நாமே தயார்ப்படுத்திக் கொள்வோமாக.

"ஆனி உத்தர தரிசனங் கண்டு ஆன்ம ஈடேற்றம் பெறுவோமாக!"

*"கலாபூஷணம்"*
*தெய்வத் தமிழ்ச் சுடர்*
*இராசையா ஸ்ரீதரன்*
*நாச்சிமார் கோவிலடி,*
*யாழ்ப்பாணம்.*

# ரிமோட் இல்லாமல் சனல்களை மாற்றலாம்

## வருகிறது புதிய ரி.வி



தற்போது தொலைக்காட்சியில் நாம் பார்க்க விரும்பும் சனலை "ரிமோட் கொண்ரோல்" மூலம் மாற்றிப் பார்க்க முடிகிறது. ஆனால் ரிமோட் கொன்ரோல் இன்றி மன அலைகளை பயன்படுத்தி இயங்கும் நவீன ரி.வி. உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த ரி.வி. இங்கிலாந்தில் தயாரிக்கப்பட்டுள்ளது. நாம் நினைக்கும் சனல்களை மாற்றும் வகையில் மூளையில் அலைகளை உருவாக்கும் "ஹெட் செட்ஷட்டுடன் கூடிய அதி நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய ரி.வி.வடிவமைக்கப்பட்டுள்ளது.

இது சமீபத்தில் பரிசோதிக்கப்பட்டது. அதில் பி.பி.சி. நிறுவனத்தை சேர்ந்த 10 ஊழியர்கள் கலந்து கொண்டனர். இந்த தொழில் நுட்பம் சோதனை அளவில் தான் உள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.




# ஜெயா விடுதலையை எதிர்த்து மேன்முறையீடு செய்தது கர்நாடகா



சொத்துக் குவிப்பு வழக்கில், தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் விடுதலையை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் கர்நாடக அரசு நேற்று மேல்முறையீட்டு மனுவைத் தாக்கல் செய்தது.

உச்ச நீதிமன்ற விடுமுறைக் கால அமர்வு முன் ஆஜரான கர்நாடக அரசு உதவி வழக்கறிஞர் சந்தோஷ் கவுட்டா மேல்முறையீட்டு மனுவை தாக்கல் செய்தார். இந்த மனு சுமார் 2700 பக்கங்கள் கொண்டதாக இருந்தது.

ஜெயலலிதா, சசிகலா, சுதாகரன், இளவரசி ஆகியோர் மீதான சொத்துக்குவிப்பு வழக்கை விசாரித்த பெங்களூர் சிறப்பு நீதிமன்றம் நால்வருக்கும் தலா 4 ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங்கியது. இதை எதிர்த்து ஜெயலலிதா தரப்பில் தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுவை விசாரித்த கர்நாடக உயர் நீதிமன்றம், கடந்த மே 11ஆம் திகதி நால்வரையும் விடுதலை செய்தது.

"நீதிபதி சி.ஆர். குமாரசாமி அளித்த தீர்ப்பில் பல்வேறு அடிப்படைத் தவறுகளும், கணித பிழைகளும் இருக்கிறது. எனவே கர்நாடக அரசு மேல்முறையீடு செய்ய வேண்டும்" என்று அரசு வழக்கறிஞர் பி.வி.ஆச்சார்யா, சட்டத்துறை செயலர் சங்கப்பா, அரசு தலைமை வழக்கறிஞர் ரவிவர்ம குமார் ஆகியோர் கர்நாடக அரசுக்கு பரிந்துரை செய்தனர்.

எனவே, ஜெயலலிதாவின் விடுதலையை எதிர்த்து மேல்முறையீடு செய்வதென கடந்த 1ஆம் திகதி கர்நாடக அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

இதையடுத்து அரசு வழக்கறிஞர் பி.வி.ஆச்சார்யா தலைமையில் அவரது உதவி வழக்கறிஞர் சந்தோஷ் சவுட்டா மற்றும் சட்டத்துறை அதிகாரிகள் ஜெயலலிதா தரப்புக்கு எதிரான மேல்முறையீட்டு மனுவை தயாரிக்கும் பணியில் ஈடுபட்டனர். ஆச்சார்யா கேட்டுக் கொண்ட தற்கிணங்க பவானிசிங்கின் உதவியாளராக இருந்த முருகேஷ் எஸ்.மரடியும் கடந்த சில தினங்களாக இரவு பகலாக உழைத்தார்.

ஜெயலலிதா, சசிகலா உள்ளிட்ட நால்வரின் வருமானம், செலவு, கடன், இருப்பு ஆகியவை குறித்து தனித்தனியாக அட்டவணை தயாரித்துக் கொடுத்தார். அதில் நீதிபதி குமாரசாமி தவறாக கணக்கிட்ட கடன் தொகை, முரணாக ஏற்றுக்கொண்ட வருமானம் ஆகியவற்றை சுமார் 150 பக்க பச்சை நிற முத்திரைத் தாளில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில், சொத்துக் குவிப்பு வழக்கில், தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் விடுதலையை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் கர்நாடக அரசு நேற்று மேல் முறையீட்டு மனு தாக்கல் செய்தது.

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை
# இராமநாதன் நுண்கலைக் கழகம்

**நுண்கலைமாணி – சங்கீதம் / நடனம் / சித்திரமும் வடிவமைப்பும்**
**கற்கை நெறிகளுக்கான பல்கலைக்கழக அனுமதி – 2014 / 2015**
**தகுதிகாண் (செய்முறை) பரீட்சை**

மேற்படி கற்கைநெறிகளுக்கு விண்ணப்பித்தவர்களுக்கான தகுதிகாண் (செய்முறை) பரீட்சைகள் கீழ்வரும் திகதிகளில் யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளன.

| கற்கைநெறி | பரீட்சைகள் நடைபெறும் திகதி | பரீட்சை மண்டபம் | நேரம் |
|---|---|---|---|
| இசை | 29.06.2015<br>30.06.2015<br>02.07.2015<br>03.07.2015<br>06.07.2015<br>07.07.2015<br>08.07.2015<br>09.07.2015<br>10.07.2015 | இசைத்துறை விரிவுரை மண்டபம், இராமநாதன் நுண்கலைக் கழகம், மருதனார்மடம், சுன்னாகம். | மு.ப. 9.00 - பி.ப. 4.00 |
| நடனம் | 29.06.2015<br>30.06.2015<br>02.07.2015<br>03.07.2015<br>06.07.2015<br>07.07.2015<br>08.07.2015<br>09.07.2015<br>10.07.2015 | நடேசர் அரங்கு, இராமநாதன் நுண்கலைக் கழகம் மருதனார் மடம், சுன்னாகம். | மு.ப. 9.00 - பி.ப. 4.00 |
| சித்திரமும் வடிவமைப்பும் | எழுத்துப் பரீட்சை 03.07.2015 | E-Hall, Southern side of the External Exam Unit, University of Jaffna, Thirunelvely (AD – 001 to AD – 150)New Exam Hall, Faculty of Arts, University of Jaffna, Thirunelvely (AD – 151 to AD – 250) | மு.ப.9.00மணி |
| | செய்முறைப் பரீட்சை | | |
| | 04.07.2015 | Art & Design Unit, Ramanathan Academy of Fine Art, Marathanarmadam, Chunnakam (AD-01 to AD-85) | மு.ப. 9.00 - பி.ப. 4.00 |
| | 05.07.2015 | Art & Design Unit, Ramanathan Academy of Fine Art, Marathanarmadam, Chunnakam (AD-86 to AD-168) | |
| | 06.07.2015 | Art & Design Unit, Ramanathan Academy of Fine Art, Marathanarmadam, Chunnakam (AD-169 to AD-250) | |

தகுதியான விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டைகள் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விபரங்களுக்கு உதவிப்பதிவாளர் / அனுமதிகள் கிளையுடன் 0212226714 என்ற தொலைபேசி எண் வழியாகத் தொடர்பு கொள்ளலாம்.

பதிவாளர்

23.06.2015

(C/3875)

# அரசியல் காழ்ப்புணர்ச்சியே மேன்முறையீட்டிற்கு காரணம்

## ஜெயலலிதா தெரிவிப்பு

(சென்னை)

அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாகவே தன்மீது வழக்கு தொடரப்பட்டதாக தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

சென்னை ராதாகிருஸ்ண்ன் நகர்த் தொகுதியில், ஜெயலலிதா பிரசாரம் மேற்கொண்ட போது மக்கள் மத்தியில் இவ்வாறு கூறியுள்ளார்.

ஆர்.கே.நகரில் நடைபெறும் இடைத்தேர்தல், சட்டமன்றத் தேரதலின் முன்னோட்டம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

திராவிட முன்னேற்ற கழகத்தை வெல்ல முடியாது என்பதால் எதிர்க்கட்சிகள் இந்த தேர்தலில் போட்டியிடவில்லை என்றும் முதலமைச்சர் ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

அத்தோடு சென்னை ஆர்.கே. நகர் சட்டமன்றத்தொகுதியில் எதிர் வரும் 27ஆம் திகதி இடைத் தேர்தல் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உக்கிரமான வெயிலால் பாக்.இல் பலி எண்ணிக்கை 400



பாகிஸ்தானின் தெற்குப் பகுதியில் 10 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு கடுமையான வெப்பநிலை உள்ளது. நேற்றுக் காலை நிலவரப்படி சிந்து மாகாணத்தில் ஒட்டுமொத்தமாக 400 பேர் பலியாகி உள்ளனர். மாகாணத் தலைநகர் கராச்சியில் மட்டும் சுமார் 250 இற்கும் மேற்பட்டோர் இறந்துள்ளனர். மேலும் பலர் வெயில் தொடர்பாக ஏற்படும் காய்ச்சல், உடல் வறட்சி மற்றும் குறைந்த இரத்த் அழுத்தம் போன்ற நோய்களால் பாதிக்கப்பட்டு மருத்துவமனைகளில் தீவிர சிகிச்சை விடுதிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அரச மருத்துவமனைகளில் மட்டும் 341 பேர் பலியாகியுள்ளதாகவும், தனியார் மருத்துவமனைகளில் வெப்ப பக்கவாதம், உடல் சோர்வு மற்றும் குறைந்த அழுத்தம் காரணமாக மேலும் பலர் பலியாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த 4 நாட்களில் மட்டும் வெப்பத்தால் பாதிக்கப்பட்ட 3000 பேருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளதாக கூறிய ஜின்னா மருத்துவமனையின் கண்காணிப்பாளரான சீமா ஜமாலி, அங்கு மட்டும் 200 பேர் பலியானதாக தெரிவித்துள்ளார். அதே போல் அப்பாஸி ஷாகித் மருத்துவமனையில் 71 பேர் பலியாகியுள்ளதாக அங்கு பணிபுரியும் மருத்துவரான சயீத் குரேஷி கூறியுள்ளார்.

# புலம்பெயர் தமிழர்கள் வேற்றுக்கிரக வாசிகள் அல்ல



புலம்பெயர்ந்தவர்கள் ஒன்றும் வேற்றுக் கிரகத்தில் இருந்து வந்த கொம்பு வைத்த மனிதர்கள் அல்ல என்று, தெரிவித்துள்ளார் வெளிவிவகார அமைச்சர மங்கள சமரவீர.

வெளிநாடுகளில் நியமிக்கப்படவுள்ள, இலங்கையின் புதிய தூதுவர்களுக்கு பயிற்சி அளிக்கும் நிகழ்வை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையின் புதிய தூதுவர்களுக்கான இந்த 10 நாள் பயிற்சி பண்டாரநாயக்க ஞாபகார்த்த அனைத்துலக மாநாட்டு மண்டபத்தில் இடம் பெற்று வருகிறது.

இந்த நிகழ்வின் ஆரம்பத்தில் உரையாற்றிய மங்கள சமரவீர,

புலம்பெயர்ந்தோருக்கான விழாவை நடத்தப் போவதாக நான் முன்வைத்த யோசனைக்கு இலங்கைக்குள் மீண்டும் ஈழமொன்றை உருவாக்க முயற்சிப்பதாகவும், இதற்காக ஐ.நாவின் மனித உரிமைகள் ஆணைக் குழுவிலிருந்து மூன்றரை மில்லியன் அமெரிக்க டொலர்களைப் பெற்றிருப்பதாகவும் ஊடகங்களில் வெளிவந்திருக்கும் செய்தியில் எவ்வித உண்மையுமில்லை.

இது எனது யோசனை மாத்திரமே. இதன் பின்புலத்தில் வேறு எவருமோ அல்லது எந்தவொரு அழுத்தமோ இல்லை.

அயர்லாந்து, இந்தியா ஆகிய நாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் இலங்கையர்களை ஒன்றிணைக்கும் வேலைத்திட்டம் வருடாந்தம் நடத்தப்படுகிறது.

இதை இங்கும் நடத்துவதில் என்ன தவறு இருக்கிறது.

'டயஸ்போரா' என்பது புலம்பெயர் வாழ் மக்களாகும். இதில் தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள், பறங்கியர் உள்ளிட்ட அனைத்து இனத்தைச் சேர்ந்தவர்களும் உள்ளடங்குவர்.

டயஸ்போரா என்றதும் வேற்று உலகிலிருந்து வந்த கொம்பு வைத்த மனிதர்களைப் போன்றே அவர்களைப் பலரும் கருதுகின்றனர்.

உலகம் முழுவதும் இலங்கையைச் சேர்ந்த திறமைசாலிகள் உள்ளனர். 'நாசா'வில் மாத்திரம் 10 இற்கும் மேற்பட்ட இலங்கையர்கள் உள்ளனர்.

பிரபல வைத்தியர்கள், பொறியியலாளர்கள், கலைஞர்கள், வியாபாரிகள், சமையற்காரர்கள் என அனைத்து துறையிலும் இலங்கையர்கள் வெளிநாடுகளில் பிரகாசித்து வருகின்றனர்.

இவர்களது அறிவு, அனுபவம், திறமையிலிருந்து நாம் பல விடயங்களை கற்றுக்கொள்ள வேண்டியுள்ளது.

முதலீடுகளுக்காக நாம் வெளிநாட்டவர்கள் பின்னால் செல்கிறோம். எதற்காக நாம் இலங்கையர்களின் முதலீடுகளை வரவேற்கக்கூடாது. இவர்களது அனுபவம் எமக்கு தேவையாகும்.

இலங்கையில் முன்னெடுக்கப்படும் புதிய பயணத்தில் புலம்பெயர் வாழ் மக்களின் ஒத்துழைப்பு அவசியமாகும்.

தமிழ் மற்றும் சிங்கள அடிப்படை வாதங்கள் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்கள் போன்றவையாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

---

**நாடாளுமன்றம்....**

முதல் 20 ஆவது திருத்தச் சட்டமூலம் தொடர்பில் இணக்கப்பாடுகள் ஏதுவும் எட்டப்படவில்லை என கூறியுள்ளதாக தமிழ் முற்போக்கு கூட்டணி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எனவே ஜனாதிபதி நாடாளுமன்றத்தை கலைத்து தேர்தல் அறிவிப்பை வெளியிடவுள்ளதாக பிரதமர் ரணில் விக்ரமசிங்க மேலும் தெரிவித்ததாகவும் அந்த வட்டாரங்கள் குறிப்பிட்டன.

---

**அரசுடன்...**

தலைவர் தான் தீர்வுகளை நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். அடுத்த அமர்வு நடத்த முடியாத அளவுக்கு எம்மை இட்டுச் செல்ல வேண்டாம் என கேட்டுக் கொள்வதுடன் நீங்களே நேரடியாக ஜனாதிபதியை சம்பந்தப்பட்டர்களுடன் சென்று அனுமதிபெற்று சந்தித்து இதற்கு தீர்வுகாண வேண்டும் என வடமாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார். (இ)

---

**வடமாகாண....**

சரோ, அமைச்சர்களோ, அவைத்தலைவரோ, தமிழ்த்தேசியக் கூட்ட மைப்பின் தலைமைகளோ இப்பிரச்சினையை தீர்க்க அரச அதிபரை இடமாற்ற எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என தெரிவித்ததுடன் இதற்கு உடன் நடவடிக்கை எடுக்கும் வரை தாம் போராட்டத்தை தொடரப் போவதாகவும் கூறியதுடன் மாகாண சபையின் நேற்றைய அமர்வை முடக்கினர்.

காலை 11:30 மணிக்கு அவை அமர்வு ஆரம்பித்ததுடன் அவைத் தலைவரின் அறிவிப்பையடுத்து அரச அதிபரின் இடமாற்றம் தொடர்பில் பேரவைச் சபை உறுப்பினர்கள் கருத்துக்களை தெரிவித்ததுடன் அவை அமர்வு எதிர்வரும் 23 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (இ)

---

**வடக்கில் ....**

அச்சுறுத்தல் தடுக்கப்பட்டது.

2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் தாக்குதல் எதுவும் இடம்பெறவில்லை என்பதால், விடுதலைப் புலிகள் முற்றாக இல்லாமல் போய் விட்டனர் என்று அர்த்தமில்லை.

இன்னமும் சில விடுதலைப் புலிகள் தனிநாட்டை அமைப்பதற்கான போராட்டத்தை மீண்டும் ஆரம்பிக்கும் அர்ப்பணிப்புடன் உள்ளனர். கடந்த ஆண்டு இத்தகைய ஒரு முயற்சி முறியடிக்கப்பட்டு, மூன்று விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டனர்.

முன்னர், மிக உயர்ந்த பாதுகாப்பு தரம் பேணப்பட்டது. புலனாய்வு அமைப்புகள் வலுப்படுத்தப்பட்டிருந்தன. ஆனால் இப்போது வடக்கு, கிழக்கில் முக்கியமான இடங்களில் இராணுவம் நிலை நிறுத்தப்பட்டிருந்த பெருந்தொகை நிலங்கள் பொதுமக்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

விடுதலைப்புலிகள் மீண்டெழுவதை தடுக்க இந்த இராணுவ முகாம்கள் அவசியம்.புதிய அரசாங்கம், வடக்கில் இராணுவ முகாம்களின் எண்ணிக்கையை குறைக்கத் தொடங்கியது வருத்தமளிக்கும் விடயம்.

சில சந்தர்ப்பங்களில், முக்கியமான இடங்களில் இருந்த இராணுவ முகாம்களும் அகற்றப்பட்டுள்ளன.

இது எதிர்காலத்தில் விடுதலைப் புலிகளுக்கு மூலோபாய நலன்களைக் கொடுத்து குழப்பமான நிலைமைகளை ஏற்படுத்தக் கூடும். என்றும் அவர் கூறியிருக்கிறார்.

அதேவேளை, சில நாட்களுக்கு முன்னர், கோத்தாபய ராஜபக்ஷவிடம் நாட்டின் பாதுகாப்பு நிலை குறித்து செய்தியாளர்கள் கேள்வி எழுப்பியிருந்த போது, தனக்கு அதுபற்றி எதுவும் தெரியாது என்றும், தமக்கு புலனாய்வு அமைப்புகளிடம் இருந்து அறிக்கைகள் கிடைப்பதில்லை என்றும் கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

---



விமானப்படையின் புதிய தளபதியாக பதவியேற்றுள்ள ககன் புளத்சிங்கள, பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவன் விஜேவர்தனவை பாதுகாப்பு அமைச்சில் நேற்று சந்தித்து உரையாடினார்.

# இருபதாம் திருத்தம் தணியாத சர்ச்சை

20ஆம் திருத்தச் சட்டம் தொடர்பில் நாடாளுமன்றில் முரண்பாட்டு நிலைமை காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

20ஆம் திருத்தச் சட்டம் தொடர்பல் கடந்த வாரம் அரச வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டிருந்தது.

20ஆம் திருத்தச் சட்டத்தை அமுல்படுத்த வேண்டுமென சில அரசியல் கட்சிகளும், அமுல்படுத்தக் கூடாது என மேலும் சில அரசியல் கட்சிகளும நாடாளுமன்றில் விவாதம் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.


ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் ஏற்பட்டுள்ள பிளவை பயன்படுத்திக் கொள்ளவே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 20ஆம் திருத்தச் சட்டத்தை முன்வைத்துள்ளதாக ஜே.வி.பி குற்றம் சுமத்தியுள்ளது.

உத்தேச தேர்தல் திருதத்ச் சட்டம் ஜனநாயகத்தை வலுப்படுத்தும் நோக்கிலோ மக்களுக்கு நல்ல தேர்தல் முறைமையை உருவாக்கவோ முன் வைக்கப்படவில்லை என ஜே.வி.பி தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நாடாளுமன்ற ஒத்தி வைப்பு விவாதம் நடத்தப்படுவதற்கு எதிர்க்கட்சித் தலைவர நிமால் சிறிபால. டி சில்வா எதிர்ப்பை வெளியிட்டிருந்தார்.

இதேவேளை, அவை ஒத்தி வைப்பு விவாதம் நடாத்த எவ்வித தடையும் இருப்பதாக தென்படவில்லை என' சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

# தேசிய பாதுகாப்பில் அதிக கரிசனை வேண்டும்



(கொழும்பு)

இலங்கையின் தேசிய பாதுகாப்பு தொடர்பில் அரசாங்கம் விரைந்து செயலாற்ற வேண்டும் என முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் வலியுறுத்தியுள்ளார்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் சர்வதேச தொடர்புகளும், நிதி பரிவர்த்தனைகளும் இன்னும் உயிர்ப்புடன் இருப்பதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அமெரிக்காவில் உள்நாட்டு தீவிரவாதம் - 2014 என்ற தலைப்பில் கடந்த 20 ஆம் திகதி அறிக்கையொன்று வெளியிடப்பட்டது.

அமெரிக்கா இந்த அறிக்கையை வெளியிட்டவுடன் இதுதொடர்பாக உடனடியாக அமைச்சரவைக் கூட்டம் நடத்தி ஆலோசிக்க தவறியதாக இலங்கை அரசு மீது குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

இந்தநிலையில், அமெரிக்கா வெளியிட்டுள்ள இந்த அறிக்கை இலங்கையின் தேசிய பாதுகாப்பு தொடர்பானது என்பதால் இவ்விவகாரத்தில் அரசு உடனடியாக விரைந்து செயற் பட வேண்டும் என முன்னாள் அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையில் மறுசீரமைப்பு பணிக்கு உத்தரவிடும் வகையில் நாடு கடந்து வாழ்ந்துவரும் தமிழர்கள் அனைவரும் உடனடியாக நாடு திரும்ப வேண்டும் என்று கூறி வெளிநாடுகளில் வாழும் தமிழர்களுக்கு அழைப்பு விடுத்துள்ள, இலங்கை அரசின் தற்போதைய அணுகுமுறையை விமர்சித்துள்ள பீரிஸ்,

வெளிநாடுகளில் வாழும் தமிழ் அமைப்பினரிடம் இது போல் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருந்தால் உள்நாட்டில் மீண்டும் விடுதலைப் புலிகள் இயக்கம் உருவாக வேண்டும் என நினைப்பவர்களை ஊக்குவிப்பதாக இந்த செயல்பாடு அமைந்துவிடும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

---

**பத்து இலட்சம்...**

போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அதாவது பத்து இலட்சம் இளைஞர், யுவதிகளுக்கு இவ் வருட இறுதிக்குள் வேலை வாய்ப் புக்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரி வித்தார். மற்றுமொரு செய்தி உள்ளே.

---

**புலம்பெயர்...**

ஆணையாளரோ, ஆணையகமோ இவ்வாறான நிகழ்வுகளுக்கு நிதி உதவி வழங்குவதில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

புலம்பெயர் இலங்கையர்களுக்காக நடத்தப்படும் விழாவிற்கு ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை 3.2 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி உதவி வழங்க உள்ளதாக ஜாதிக ஹெல உறுமய கட்சியின் பேச்சாளர் நிசாந்த சிறிவர்ணசிங்க தெரிவித்துள்ளார்.

---

**வித்தியா....**

பேரில் அந்த சந்தேக நபர் விடுவிக்கப்பட்டார்.

மாணவி வித்தியா படுகொலை தொடர்பான விசாரணையில் பொலிஸார் இழைத்த தவறுகளும் இந்த விசாரணை அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது. எனினும், சந்தேகநபரை விடுவித்த மூத்த பொலிஸ் அதிகாரியிடம், இந்த சிறப்பு விசாரணைக் குழு விசாரணைகளை நடத்தவில்லை.

அவரிடம் பொலிஸ் தலைமையகம், விசாரணை நடத்தி, அவர் மீது நடவடிக்கை எடுக்கும் என்று பொலிஸ் வட்டாரங்களை மேற்கோள்காட்டி கொழும்பு செய்தி ஒன்று தெரிவிக்கின்றது.

---

## பொன்சேகாவின் மருமகனின் மனு நிராகரிப்பு

(கொழும்பு)

முடக்கப்பட்டிருக்கும் தனது கடவுச்சீட்டை விடுவிக்கும்படி யும், கடந்த 2010ஆம் ஆண்டில் அரசு சுவீகரித்த தனது சொத்துக்களை மீளளிக்கும்படியும் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவின் மருமகன் தனுன திலகரத்ன முன்வைத்த இரு கோரிக்கைகளை கொழும்பு மேல்நீதிமன்றம் நேற்று நிராகரித்தது.

ஹைகோப் வழக்கு விசாரணைகள் நேற்று முன்னெடுக்கப்பட்டபோதே, மேல்நீதிமன்ற நீதிபதி தேவிகா லிவேரா தென்னகோன் மேற்படி கோரிக்கைகளை நிராகரிப்பதாக அறிவித்தார்.

# நெற் களஞ்சியத்தில் ஆரம்ப பாடசாலை

## கிளிநொச்சியில் தொடரும் அவலம்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி கல்வி வலயத் திற்குட்பட்ட வட்டக்கச்சி ஆரம்ப பாடசாலை தொடர்ச்சியாக நெற் களஞ்சியசாலை கட்டடங்களில் இயங்கி வருகின்றமையினால் தமது பிள்ளைகள் பல்வேறு அசௌகரியங்களை எதிர் நோக் குவதாக பெற்றோர் கவலை வெளியிட்டுள்ளனர்.

தரம் ஐந்து வரை காணப் படும் இப் பாடசாலையில் தற் போது 254 மாணவர்கள் கல்வி கற்கின்றனர்.

வட்டக்கச்சி மத்திய கல்லூரி யில் இருந்து ஆரம்ப பிரிவு தனியாக பிரித்தெடுக்கப்பட்ட நாள் முதல் நிரந்தர கட்டடம் அமைத்துக் கொடுக்கப்படாமல் ஏற்கெனவே அமைக்கப்பட்ட இரண்டு நெற்களஞ்சியசாலை கட்டடங்களில் பாடசாலை இயங்கி வருகின்றது.

நெல் களஞ்சியப்படுத்தும் வகையில் அமைக்கப்பட்ட கட்ட டங்களில் வகுப்பறைகள் இயங்கி வருகின்றமையினால் மாணவர் கள் இயல்பாக கற்றல் செயற் பாடுகளில் ஈடுபட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

நாட்டில் உள்ள பாடசாலை கள் விரைவாக அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள போதும் தமது பிள்ளைகள் கற்பதற்கான ஒரு கட்டடம் கூட இது இதுவரை அமைத்துக்கொடுக்கப்படவில்லை என்பது பெற்றோரின் ஆதங்கம்.

இந்த நிலைமை தொடர்பில் பல தடவைகள் கல்வி அதிகாரி கள் உள்ளிட்ட மாகாண கல்வி அமைச்சின் கவனத்திற்கு கொண்டு வந்தும் எவ்வித நடவடிக்கை யும் இதுவரை மேற்கொள்ளப்பட வில்லை என பெற்றோர் விசனம் தெரிவித்துள்ளனர்

எனவே விரைந்து ஒரு வகுப்பறை கட்டடத்தினையாவது அமைத்து தமது பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு உதவுமாறு பெற்றோர் அரசாங்கத்திடம் வேண்டு கோள் விடுத்துள்ளனர்.

# நிதி மோசடி விசாரணை அறிக்கை சமர்ப்பிப்பு

(கொழும்பு)

2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் நிதி மோசடி தொடர்பிலான விசாரணை அறிக்கையை நிதி மோசடி பொலிஸ் விசாரணைப் பிரிவிடம் நேற்று செவ்வாய்க்கிழமை கையளித்துள்ள தாக சட்டத்தரணி அமைச்சர் தலத்தா அத்துகோரல தெரிவித்தார்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சராக தலதா அத்துகோரல பதவியேற்று கடமைகளை பொறுப்பேற்றுகொண்டதன் பின்னர். விசேட விசாரணைக் குழுவொன்றை நிறுவி, .அந்த வேலைவாய்ப்பு பணியகத்தில் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற நிதிமோசடி தொடர்பில் விசாரணைகளை நடத்துமாறு பணித் திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

# விளக்க மறியல் நீடிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர் ஒருவரை சுட்டுக் கொன்ற குற்றச்சாட்டுக்கு உள்ளாகி விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் முன்னாள் பிரதி அமைச்சர் பிரேமலால் ஜெயசேகர உட்பட்ட எழுவரின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

மேற்படி எண்மரையும் எதிர்வரும் 30 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கும்படி பெல்மடுள்ள மாஜிஸ்திரேட் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

# அமெரிக்கப் படைகளுடன் கூட்டு யுத்த பயிற்சி

## விபத்தில் சிக்கி கடற்படை வீரர் மரணம்

(கொழும்பு)

அமெரிக்க கடற்படையினரு டன் கூட்டுப் போர்ப் பயிற்சியில் ஈடுபட்டிருந்த இலங்கைக் கடற் படைப் படகு ஒன்று, திரு கோணமலைக் கடலில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில், இலங்கை கடற்படைச் சிப்பாய் ஒருவர் பலி யானார்.

திருகோணமலைக் கரைக்கு அப்பால் 5 கடல் மைல் தொலை வில் இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.


அமெரிக்க கடற்படையின ருடன் இணைந்து பயிற்சியில் ஈடுபட்டிருந்த போது, படகு ஒன்று கவிழ்ந்ததில், அதன் அடி யில் சிக்கியே இலங்கை கடற் படைச் சிப்பாய் பலியானார்.

அந்தப் படகில் இரண்டு அமெ ரிக்க கடற்படையினர் உள்ளிட்ட 8 பேர் இருந்ததாகவும், ஏனை யோர் நீந்தி தப்பிவிட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமெரிக்க – சிறிலங்கா கடற் படைக்குக்கு இடையில், பிளாஸ் ஸ்ரைல் என்ற பெயரில் போர்ப் பயிற்சி இடம்பெற்று வருகிறது.

கடந்த 19ஆம் நாள் ஆரம் பித்த இந்தப் பயிற்சி, வரும் ஜூலை 2ஆம் திகதி வரை தொடர்ந்து இடம்பெறவுள்ளது.

எனினும், இலங்கை கடற் படையினருடன் அமெரிக்க கடற் படையினர் நடத்தும் இந்தப் போர்ப் பயிற்சி பற்றிய தக வல்களை அமெரிக்கா இன்ன மும் அதிகாரபூர்வமாக வெளி யிடவில்லை என்பது குறிப் பிடத்தக்கது.



வவுனியா மாவட்ட அரச அதிபரை இடமாற்றம் செய்யக் கோரி வடமாகாண சபையில் அதன் உறுப்பினர்கள் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டபோது....

## ராடா நிறுவன பணிப்பாளர் கைது

‘ராடா’ நிறுவனத்தின் நிதி பணிப்பாளர் பேராசிரியர் ஜயந்த சமரசிங்க கைதுசெய்யப்பட்டுள் ளார்.

அந்த நிறுவனத்தில் இடம் பெற்றதாகக் கூறப்படும் நிதி மோசடி தொடர்பிலேயே அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட விசாரணை பிரிவினால் இவர் கைது செய் யப்பட்டுள்ளார்.


## விசமானது உணவு 194 பேர் பாதிப்பு

(கொழும்பு)

அவிஸ்ஸாவெல தொழிற் பேட்டையில் இயங்கி வரும் முன்னணி ஆடையுற்பத்தி நிறு வனமொன்றின் ஊழியர்கள் நேற்றுக் காலை உட்கொண்ட உணவு விஷமானதில், 194 பேர் வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளனர்.

பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்

# மாநாடு கூட்டுகிறார் சோமவன்ச அமரசிங்க



(கொழும்பு)

ஜே.வி.பி.யின் முன்னாள் தலைவர் சோமவன்ச அமரசிங்க ஸ்தாபித்திருக்கும் புதிய அரசியல் கட்சியின் மாநாடு எதிர்வரும் 27ஆம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு, புதிய நகர மண்டபத்தில் இம்மாநாடு நடைபெறவுள்ளது.

# யாழ். நீதிமன்ற தாக்குதல் மேலும் ஒருவர் நேற்று கைது

(யாழ்ப்பாணம்)

யாழ். நீதிமன்றத் தாக்குதலில் சந்தேகத்தின் பேரில் மேலும் ஒருவர் நேற்று கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று யாழ். பொலிஸ் நிலையத்திற்கு வருகை தந்த குருநகர் பகுதியைச் சேர்ந்த இந்நபரை நீதிமன்றத் தாக்குதலின்போது எடுக்கப்பட்ட காணொளியில் காணப்பட்டார் என்பதை அடிப்படை யாக வைத்தே இச்சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். (25)

## இன்றைய ஆட்டம்

(டாக்கா)

இந்திய, பங்களாதேஷ் அணிகளுக்கிடை யிலான மூன்று போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் இறுதி ஆட்டம் இன்று பங்களாதேஷின் டாக்காவில் பகலிரவு ஆட்டமாக நடைபெறவுள்ளது ஏற்கனவே, நடைபெற்ற இரு போட்டிகளிலும் வென்று தொடரைக் கைப்பற்றி யுள்ள பங்களாதேஷ் அணி மூன்றாவது ஒரு நாள் போட்டியிலும் வென்று சரித்திரம் படைக்க முயற்சிக்கும் என கிரிக்கெட் வல்லுநர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை, தொடரை இழந்து பெரும் அவ மானத்திற்குள்ளான இந்திய அணி இப்போட்டியில் பெரு வெற்றிபெறும் என தெரிவிக்கப்பட்டுக்கறது.

## நாளைய ஆட்டம்

இலங்கை, பாகிஸ்தான் அணிகளுக்கிடை யிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவது ஆட்டம் நாளை கொழும் பில் நடைபெறவுள்ளது.

ஏற்கனவே, நடைபெற்ற முதலாவது டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் அணி பத்து விக்கெட்டுக் களால் பெரு வெற்றிபெற்றுள்ளது. இந்நிலையில் இரண்டாவது போட்டியில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வெற்றியைப் பெற்றுக்கொள்ள முனைப்புடன் களத்தில் செயற்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இருப்பினும் பாகிஸ்தான் அணியும் தீரத்துடன் போராடி தொடரில் முன் னிலை வக்க்க முயற்சிக்கும் என எதிர்பார்க்கப்படு கின்றது.

இப்பத்திரிகை இல: 373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2015 யூன் 24ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.